புதிய சமுதாயம்

KDN 0131/78

ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்

20



PUTHIYA SAMUDHAYAM

50 காசு



(1)

சீரோங்கும் தமிழினிலே செழிக்கின்ற இலக்கியத்தில்
சிந்தைதனைக் கவர்கின்ற சிறுவிழிநீர் பலவுண்டு;
பேரோங்கும் இராவணனின் பிரியத்தால், சானகியாள்
பெய்திட்டாள் கண்ணீரை; பெருந்தீயே பதிலாகும்!
ஊரோங்க வாழ்ந்திட்ட கோவலனின் கண்ணகியாள்
ஊர்விட்டு மதுரையிலே உதிர்த்திட்ட கண்ணீரோ
பாரோங்கும் மதுரையிலே படர்தீயாய் உருவாகும்;
பத்தினிகள் கண்ணீர்தாம் பலகதையாய் நின்றுடும்.

(2)

சின்னஇடை மின்னலெனப் பின்னிவரும் கன்னியவள்
சிரிக்கின்ற செவ்வழியில் சேர்கின்ற எழில்கண்டு
வண்ணமுடன் மண்ணுலகில் வண்டமரும் கிண்ணமென
வடிவழகு மலர்கண்டு மயங்குவதில் புதுமையில்லை!
கன்னலெனும் தன்மையிலே வண்ணமலர்ப் பன்னீரைக்
கண்டவர்கள் தேனென்பார்: கள்ளென்பார்; மகிழ்ந்திடுவார்!
சின்னவிழிப் பெண்ணொருத்தி சிந்துகின்ற கண்ணீரைச்
செந்திதான் என்றிடலாம்; தேனங்கே நெருப்பன்றோ?

(3)

கள்ளமதை அறியாத காரிகையாம் பாஞ்சாலி
கனிவான உள்ளத்தில் கனலேற்றி நின்றதனால்
மெள்ளவிழும் கண்ணீரில் மிகமெதுவாய்ச் சூடேற
மிகையாக நகைசெய்தோர் மேனியிலே அன்றைக்குத்
துள்ளிவிழுந் திட்டதெலாம் சுடுகின்ற நெருப்பன்றோ?
தூய்மைமிகக் கொண்ட புகழ்க் கோதைகளின் கண்களிலே
அள்ளிவரும் கண்ணீரே அனலென்று மாறுவதால்
அவர்களது கண்மலரே அனல்சிந்து மலராகும்

அட்டைப்படம்: மாயன்

எங்கள் அலுவலகம்:
131, ஜாலான் துவாங்கு
அப்துல் ரஹ்மான், [2-ஆவது மாடி]
கோலாலம்பூர் 01–08.
அஞ்சல் பெட்டி எண்: 2066,
தொலைபேசி: 80839.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

மாதமிருமுறை மலரும் குடும்ப இதழ்

திருவள்ளுவர் ஆண்டு2008 மார்கழி 26
கம்பம் 1 ∴ (10-1-1978) ∴ தும்பம் 20

தேர்தல் ஆண்டு

பிறந்திருக்கிற 1978 புத்தாண்டு பெரும்பாலும் மலேசியாவுக்குப் பொதுத்தேர்தல் ஆண்டாக அமையும் என்று அரசியல் வட்டாரங்களின் சுறுசுறுப்பைப் பார்க்கும்போது ஊகிக்கவேண்டியிருக்கிறது. தேர்தல் ஆணைக்குழுவும் அரசாங்கம் கட்டளையிட்டால் பொதுத்தேர்தலை நடத்த ஆயத்தமாக இருப்பதாக அறிவித்திருக்கிறது. எப்படி இருப்பினும் பிரதமர் டத்தோ ஹுசேன் ஓன் செய்கின்ற முடிவைப் பொறுத்தே தேர்தல் தேதி அமையும்.

அவருடைய மனத்தில் என்ன திட்டம் போட்டிருக்கிறார் என்பதை நிச்சயமாகக் கணிப்பது யாருக்கும் கடினமாகவே இருக்கும்.

அண்மையில் அறிவிக்கப்பட்ட அமைச்சரவை மாற்றங்களில் ஆறு அமைச்சர்களின் இலாகாக்கள் மாற்றப்பட்டிருப்பதும், மூன்று துணையமைச்சர்கள் முழு அமைச்சர்களாகப் பதவி உயர்த்தப்பட்டிருப்பதும், பொதுத் தேர்தல் எதிர்பார்த்தபடி இந்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெறுமா என்னும் ஐயப்பாட்டை உண்டாக்கி இருப்பது இயல்பேயாகும்.

என்றாலும், புதுமுகம் யாரும் அமைச்சரவை நியமனங்களில் காணப்படாதது வியப்பாகவே இருக்கிறது. மந்திரிசபையில் இடம்பெற்றிருந்த இஸ்லாமியக் கட்சி உறுப்பினர்கள் ஐவர் வெளியேறி இருந்தும் அதன் பின்னர் சுகாதார அமைச்சர் டான்ஸ்ரீ லீ சியோக் இயூ தம் பதவியை ராஜினாமா செய்திருந்தும் புதிய முகங்களுக்கு இடமளிக்காமல் ஏற்கனவே இருந்தவர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதன் மூலம் அமைச்சரவை சீரமைப்புச் செய்யப்பட்டிருப்பது தேர்தல், நெருக்கத்தில் இருக்கிறது என்பதைக் காட்டும் அறிகுறியாக ஒருவேளை இருக்கக்கூடும்.

தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு இந்த ஆண்டு முற்பகுதி பொதுத் தேர்தலை நடத்துவதற்குப் பல வகையாலும் சாதகமாக இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. மூலப்பொருட்களின் அமோகமான விலை விகிதங்களின் பலனாக நாடு பெரிய செல்வக் கொழிப்பை அனுபவித்துக்கொண்டிருக்கிறது. வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டைக் காட்டிலும் தேசிய மொத்த உற்பத்தியும் ஏற்று

மதி வருமானமும் பெருகிக் கொண்டிருக்கின்றன. அரசாங்க ஊழியர்கள் புதிய சம்பளத் திட்டங்களையும் சலுகைகளையும் சம்பளப் பாக்கியையும் அனுபவித்து வருகின்றனர். வரியேதும் போடாமல் ஏற்கனவே இருந்த சில வரி விகிதங்களையும் குறைத்து நிதியமைச்சர் துங்கு ரஸாலி வெளியிட்ட 1978 வரவு-செலவுத் திட்டம் பொதுத் தேர்தலைக் கருத்தில்கொண்டு தயாரிக்கப்பட்டதென்று ஊகிப்பதிலும் தவறில்லை.

தேசிய முன்னணியிலிருந்து இஸ்லாமியக் கட்சி வெளியேற்றப் பட்டிருப்பதும், பொதுத்தேர்தல் நடைபெறுமானால் அது பலமான எதிர்க்கட்சியாக விளங்கும் என்பதும் பொதுத் தேர்தலுக்கான தேதியை நிர்ணயிப்பதில் அரசாங்கம் கருத்தில் கொள்ளும் முக்கிய அம்சமாக இருப்பது திண்ணம். இஸ்லாமியக் கட்சி தனது நிலையைப் பலப்படுத்திக்கொள்வதற்கு அதிகம் அவகாசம் அளிக்காமல் தேர்தலைச் சீக்கிரமே நடத்திவிடுவதற்கு அரசாங்கம் விரும்புகிறது என்பதே பெரும்பாலோரின் ஊகமாகஇருக்கிறது. மேற்குறிப்பிட்ட பல்வேறு காரணங்களையும் மனத்தில் கொண்டு பார்த்தால் இந்த 1978-ஆம் ஆண்டு நமக்குத் தேர்தல் ஆண்டாக அமையும் என்று நம்புவதற்கு அதிகம் வாய்ப்பிருப்பதாகவே நாம் கருதுகிறோம்.

பிரதமரின் அறைகூவல்

பிரதமர் டத்தோ ஹுசேன் ஓன் தமது புத்தாண்டுச் செய்தியில் நாட்டு மக்களுக்கு விடுத்திருக்கும் அறைகூவல் தேசத்தின் பொது நலனில் அக்கறையுள்ள குடிமக்கள் அனைவரையும் நன்கு ஈர்த்து முனைப்பாகச் செயல்பட வைக்கும் என்று பெரிதும் எதிர்பார்க்கிறோம்

ஊழலும், திறமையற்ற நிர்வாகமும், நாணயமற்ற போக்கும் அரசாங்க ஊழியர்களிடையே அடியோடு களையப்படவேண்டும் என்பதில் நமது பிரதமர் எந்த அளவு முனைப்பாக இருக்கிறார் என்பதை அவருடைய புத்தாண்டுச் செய்தி மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கிறது. பிரதமரின் உயரிய இக்குறிக்கோள் நிறைவேறுவதற்கு எல்லா மட்டங்களிலும் உள்ள அரசாங்க அதிகாரிகள் தங்களின் திறம்பட்ட, குறையற்ற பணிகள் மூலம் அவருக்குத் துணை நிற்பது மெத்த அவசியமாகும். பிரதமரின் இந்த ஆவலை நிறைவேற்றுவதில் பொதுமக்களுக்கும் நிறையப் பொறுப்பிருக்கிறது. வழிதவறிச்செல்கிற அரசாங்க ஊழியர்களை அவ்வப்போது காட்டிக் கொடுப்பதன் மூலம் பிரதமர் எதிர்பார்க்கிறபடி அரசாங்கம் நூற்றுக்கு நூறு செம்மையாகவும் தூய்மையாகவும் நடைபெறுவதற்கு அவர்கள் உதவி செய்ய முடியும். இதில் பரிதாபப்படுவதற்கோ தயங்குவதற்கோ இடமில்லை. ஊழல் கட்டு மீறிப் பெருகிவிட்டால் எந்த அரசாங்கமும் மக்களின் நன்மதிப்பை இழந்துவிடும். உலக அரசாங்கத்திலும் அந்த அரசாங்கத்திற்குச் செல்வாக்கு இராது. கால ஓட்டத்தில் அந்த அரசாங்கம் நிலைகுலைந்து வீழ்ச்சி அடையவும் நேரிடும். அத்தகைய அபாயம் நமது நாட்டுக்கும் அரசாங்கத்துக்கும் நேரிடுவதை நாட்டின் பால் அன்பு கொண்டுள்ள குடிமக்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். ஆகவே பிரதமரின் அறைகூவலை நிறைவேற்றுவதில் நாட்டு மக்கள் அனைவரும், அரசாங்க அதிகாரிகளும் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

பரிசுப் பத்திரம்

தேசியச் சேமிப்பு வங்கி வெளியிடத் தொடங்கியிருக்கும் பத்து வெள்ளிப் பரிசுப் பத்திரம் மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கின்ற மற்றொரு பாராட்டத்தக்க முயற்சியாகும். மூன்று மாதத்துக்கு ஒருமுறை முதல் பரிசு 50,000வெள்ளியும் மற்றும் 213 பரிசுகளும், பெறுவதற்கு இந்தப் பரிசுப் பத்திரம் அருமையான அதிர்ஷ்ட வாய்ப்பை மக்களுக்கு வழங்குகிறது. இந்தப் பரிசுத் தொகைக்கு வருமான வரியும் கிடையாது. ஒருவர் அதிகபட்சம் பத்தாயிரம் வெள்ளி வரையில் இந்தப் பத்திரங்களை வாங்கலாம். எந்தச் சமயத்திலும் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கும் தடையில்லை. ஆகவே சேமிப்புக்கும், மூன்று மாதத்திற்கு ஒருதடவை கணிசமான அதிர்ஷ்டப் பரிசுக்கும் வகை செய்கிற இந்தப் பரிசுப் பத்திரங்களை நாட்டு மக்கள் பெருவாரியாக வாங்கிச் சேமிப்பு வங்கியின் இந்த நன்முயற்சி வெற்றியடைய உதவுவர் என்று எதிர்பார்க்கிறோம்.

அடுத்த இதழ்

அதிக பக்கங்களுடன்
தைப்பூசச் சிறப்பிதழாக
மலருகிறது

சா. ஆ. அன்பானந்தன்
எழுதும் தொடர்கதை
உண்மைகள்
ஆரம்பம்



இலக்கியப் பொங்கல்

டாக்டர் இரா. தண்டாயுதம்

அறுவடை விழா என்றும், உழவர் பெருநாள் என்றும் தமிழர் திருநாள் என்றும் பொங்கல் விழா பலப்பல பெயர்களால் கொண்டாடப்படுகின்றது. பொங்கல் என்றவுடனே நம் அனைவரது நினைவிற்கும் உடனே வருவது கரும்பும் மஞ்சளும் பொங்கலும் புத்தாடைகளுமே! "பால் பொங்கிற்றா?" என்று ஒருவருக்கொருவர் அன்று கேட்டுக்கொள்வது வழக்கம்.

தமிழர் வாழ்க்கையில் இவ்வளவு சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்படும் பொங்கல், இலக்கியத்திலும் உரிய போற்றுதலைப் பெற்றுள்ளது. இன்று கொண்டாடப் பெறும் அதே முறையில் பழங்காலத்தில் பொங்கல் கொண்டாடப் பெறவில்லை. அந்தப் பெயரிலும் கொண்டாடப் பெறவில்லை; எனினும், இன்று கொண்டாடப் பெறும் பொங்கல் விழாவின் சில கூறுகள் இலக்கியத்தில் ஆங்காங்கு காணப் பெறுகின்றன.

பொங்கல் கொண்டாடப் பெறும் மாதம் தை மாதம். தை மாதப் பிறப்பே பொங்கலுடன் தான் பிறக்கிறது. மிகப் பழங்காலத்திலேயே தை மாதப் பிறப்பிற்கு ஒரு தனிச்சிறப்பு இருந்தது. இதற்கு முன்மாதமான மார்கழி முழுவதும் கன்னிப் பெண்கள் நோன்பிருப்பார்கள். தங்களுக்கு நல்ல கணவன் வாய்க்க வேண்டும் என்பதே இந்த நோன்பின் நோக்கம். தைமாதத் தொடக்கத்தில் இந்நோன்பினை நிறைவேற்றி அப்பெண்கள் நீராடுவார்கள். இதற்கு "தைந் நீராடல்" என்று பெயர். சங்க இலக்கியமான எட்டுத் தொகையிலும் பத்துப்பாட்டிலும் இதனைப் பற்றிய பல குறிப்புக்கள் வருகின்றன. எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான நற்றிணையில் ஒரு சுவையான குறிப்பு வருகிறது. தனக்குத் தாரும் தழையும் தந்தவனே கணவனாக வாய்க்க வேண்டுமென நோன்பிருந்த பெண் ஒருத்தி, மிக விடியற்காலையிலேயே நீராடுகிறாள். அவளை,

"தழையும் தாரும் தந்தனன் இவனென
இழையணி ஆயமோடு தகுநாண் தடைஇத்
தைஇத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோள் குறுமகள்"

என்று நற்றிணைப் பாடல் குறிப்பிடுகிறது. அவ்வாறு நோன்பிருந்து நீராடும் அவளே தன் நோய்க்கு மருந்தாவாள் எனத் தலைவன் குறிப்பிடுகிறான். இதற்கும் பொங்கலுக்கும் தொடர்பில்லை எனினும், தைமாதப் பிறப்பிற்குக் காலம் காலமாக இருக்கும் சிறப்பினை இதன்மூலம் அறியலாம்.

பொங்கலுக்கும் புதியதற்கும் நெருங்கிய தொடர்புண்டு. புத்தாடை அணிந்து புதுப் பானையில் புதிய தானியத்தால் பொங்கலாக்கி உண்ணும் புதுநாள் இது. இதற்குப் புதிதுண்ணல் என்றே ஒரு பெயரும் உண்டு. தங்கள் உழைப்பால் நிலத்தில் விளைந்த விளைவைக் கடவுளுக்குப் படைத்துவிட்டு இந்நாளில் உழவர் பெருமக்கள் அதன் பயனை நுகரத் தொடங்குவார்கள். இவ்வழக்கம் பண்டைய நாட்களிலும் உண்டு. குறிஞ்சிநில மக்கள் தினையறுத்த பின்பு, முதற் கதிரை முருகனுக்குப் படைப்பதாகக் குறுந்



தொகைப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது. புதியதை முதன்முதலில் இவ்வாறு உண்ணுவதால் முருகனுக்குப் "புதியதுண்ணும் கடவுள்" என்றே பெயர் உண்டு. அன்றைய தமிழில், "கடியுண் கடவுள்" என அவன் போற்றப்பட்டான்.

"புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவுட் கிட்ட......"

என்ற குறுந்தொகைப் பாடல் இச்செய்திகளைத் தருகின்றது.

பொங்கலுக்கு முதல்நாள் போகி. இது இந்திரனுடைய பெயர்களில் ஒன்று. மருதநில மக்களான உழவர்களின் தெய்வம் இந்திரன். மழைக்குத் தெய்வமும் இந்திரன்தான். இந்திரனை வணங்க "இந்திர விழா" என்றே அந்நாளில் விழா கொண்டாடப் பெற்றது. சிலப்பதிகாரத்தில் "இந்திரவிழவூர் எடுத்த காதை" அன்று இந்திர விழா எவ்வளவு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. புகார் நகரின் ஐந்து மன்றங்களிலும் பலி கொடுத்து, யானையின் பிடரில் முரசேற்றி விழாவின் முதலும் முடிவும் அறிவித்து, காவிரியின் புண்ணிய நன்னீரால் இந்திரனை நீராட்டிய செய்திகள் இக்காதையில் விரிவாகச் சொல்லப்படுகின்றன. எனினும் இவ்விழா சித்திரை மாதத்தில் அன்று கொண்டாடப் பெற்றது. வைதிக மரபில் சங்கராந்தி என்று கொண்டாடப் பெறும் பொங்கலுக்கும் இந்திரனுக்கும் கூட நெருங்கிய தொடர்புண்டு. திருமால் கண்ணனாக அவதரித்தபோது, ஆயர்கள் இந்திரனை வழிபடுவதை நிறுத்திவிட்டானாம் கண்ணன். இதனால் வெகுண்ட இந்திரன் பெருமழை பொழிய வைத்தானாம். ஆயர்கள் இதனால் துன்பமுற, கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து ஆயர்களின் துன்பத்தைப் போக்கினானாம். இறுதியில் இந்திரன் வேண்டுகோளுக்கு இணங்கி, போகியன்று இந்திரனை வழிபட அருள் செய்தானாம். போகி என்பது 'போக்கி' என்ற சொல்லின் சுருக்கமென்றும், பழையவற்றைப் போக்கி வீட்டைத் தூய்மையாக்குவதே இதன் நோக்கமென்றும் கூறுவாரும் உண்டு.

பொங்கலோடு தொடர்புடைய செய்திகள் பழைய இலக்கியங்களில் இவ்வாறு ஆங்காங்கு குறிப்பிடப்படுகின்றன. எனினும் பல புதிய சிந்தனைகளோடு புதிய வேகத்துடன் இந்த நூற்றாண்டிலேயே பொங்கல் கொண்டாடப் பெறுகின்றது. தற்காலத் தமிழ்க் கவிஞர்கள் பலர் பொங்கல் சிந்தனைகளாகப் பல புதிய சிந்தனைகளைப் படைத்துத் தந்துள்ளனர். ஒரு புதிய நோக்கோடு பொங்கல் கொண்டாடப்படுவதை இவை கூறுகின்றன.

தமிழ்க் கவிதையுலகில் சாந்தம் என்றவுடன் நினைவிற்கு வரும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைக்குப் பொங்கல் என்றவுடன் தெய்வ நினைவே முதலில் வருகின்றது. "வளம் கொழித்து, பொருள்களின் விலை குறைந்து, மக்கள் மகிழ்ச்சியோடு சிவபெருமானை வழிபடவேண்டும் இந்

"புயலும் பருவ மழைபொழிய
பொருள்கள் எங்கும் விலைமலிய
வயலிற் பயிர்கள் வாய்த்துவர
மக்கள் உள்ளம் மகிழ்ச்சி பெற
அயனும் அரியும் தேடுமரன்
அருளை வேண்டும் தைப்பொங்கல்
பயிலும் அன்பால் ஒரு நால்வர்
பாடும் கவிபோல் பொங்குகவே!

என்பது அவர் பாட்டு. யோகி சுத்தானந்த பாரதியும் பொங்கல் என்றவுடன் இறைவனையே எண்ணுகிறார். இந்நாளில் இறைவனை வணங்கி மகிழ்ச்சியுறுவதோடு அவர் நிற்கவில்லை. சாதிமத வேறுபாடுகளைச் சாடி ஒரு பொதுநிலை வாழ்வு மலர அவர் அனைவரையும் அழைக்கிறார்.

"மங்கலப்பண் முழங்கிடுவோம்-புது
வசந்த வனத்தினிலே உலவிடுவோம்
சங்கமாகக் கூடிடுவோம்-பல
சாதிமத வேற்றுமையைச் சாடிடுவோம்
தங்கநிறக் கனிபிழிந்தே-கண்டு
சர்க்கரையும் செங்கரும்புச்சாறும்கலந்தே
பொங்கலுடன் உண்டிடுவோம்-ஒரு
பொதுநிலை வாழ்வுவரக் கண்டிடுவோம்"

என்பது அவர் அழைப்பு. பொங்கலைத் தமிழர் திருநாளாகவும், ஒற்றுமைப் பெருநாளாகவும், மகிழ்ச்சி நிறைந்த நன்னாளாகவும் நாம் கொண்டாடுவதை இப்பாடலும் பிற கவிஞர்களின் பாடல்களும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வகையில் குறிப்பிடத்தக்க ஒரு கவிஞர் நாமக்கல் கவிஞர். காந்தியம் என்றவுடன் இவர் பெயரும் நினைவிற்கு வரும். அந்த அளவிற்குக் காந்தியத்தில் தோய்ந்து அதனைத் தமிழில் வடித்துத் தந்தவர் இவர். பொங்கலை நினைக்கும் போதும் இவருக்குக் காந்தியடிகள்தாம் நினைவிற்கு வருகிறார். காந்தியடிகளின் பொக்கைவாய்ச் சிரிப்பைப் போல் பொங்கல் பொங்கவேண்டும் என இவர் பாடுகிறார். அத்துடன் மனிதரிடையே காணப்படும் வேற்றுமைகளும் இம்சையும் பொய்யும் ஒழிந்து, சத்தியமும் அன்பும் பெருகவேண்டும் என்றும் இவர் பாடுகிறார்.

"மனிதர் யாவரும் ஒருஜாதி
மாநிலம் எங்கணும் ஒருநீதி
இனியிவ் வெண்ணம் செழித்திடவே
இம்சையும் பொய்யும் ஒழித்திடவே
தனிவழி அறமுறை தமிழேபோல்
தளர்விலன் சத்திய அமுதூட்டும்
புனிதன் அக் காந்தியின் பொய்யறியாப்
பொக்கைச் சிரிப்புகள் பொங்குதல் போல்
பொங்குக! பொங்கல் பொங்குகவே!
புதியதொரு சுவைதரப் பொங்குகவே!"

என்பது அவர் பாட்டு. காந்தியடிகளோடு தொடர்பு படுத்தி,

"ஆதி இறைவன் ஆனந்தன்
அருளை வேண்டும் தைப்பொங்கல்
பூதலத்தில் காந்திமகான்
புகழேபோலப் பொங்குகவே!"

என்று கவிமணி பாடிய பாடலும் இங்குக் கருதத் தக்கது.

தமிழ்ச் சிறுகதை மன்னன் என்று போற்றப் பெறும் புதுமைப் பித்தனையும் பொங்கல் பாட வைத்துள்ளது. 1946-ஆம் ஆண்டில் ரகுநாதன் "பொங்கல் செய்தி" என்ற தலைப்பில் ஒரு பாட்டை அனைவருக்கும் அனுப்பினார். "குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியனில்லை" என்று தொடங்கும் பாட்டில் சில திருத்தங்கள் செய்து பாடப் பட்டதே இப்பாட்டு. இதனைப் பார்த்த புதுமைப் பித்தன் "பொங்கல் நம்பிக்கை" என்ற தலைப்பில் ஒரு பாட்டியற்றி அனுப்பினார்.

"குட்டுதற்கும் வெட்டுதற்கும்
கூட்டமுடன் அன்னவரைச்



சுட்டு எரித்துத்
தகிப்பதற்கும் — வெட்டரிவாள்
பாட்டுண்டு; நானுண்டு;
நீயுண்டு .."

என்று அப்பாட்டில் புதுமைப்பித்தன் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், "பாட்டறியா மோட்டெருமைக் கவிராயன் மூக்காரம் கேட்டால்தான் நாட்டமுள்ள பாட்டின் நயம் தெரியும்" என்றும் அவர் இப்பாட்டில் குறித்துள்ளார்.

தமிழின் வளர்ச்சியையும் தமிழர் நலத்தையுமே தம் இரு கண்களாகக் கொண்ட பாரதிதாசன் பொங்கலை ஒட்டிப் பல அருமையான பாடல்களைப் பாடியுள்ளார். இவையனைத்தும் தொகுக்கப்பட்டு, "பொங்கல் வாழ்த்துக் குவியல்" என்ற பெயரில் ஒரு நூலே வெளியாகியுள்ளது. சிந்து கண்ணிகளாலும், வெண்பா, ஆசிரியப்பா, வண்ணம் முதலியவற்றாலும் ஆகிய பல அழகிய சந்தப் பாடல்கள் இந்நூலில் காணப்படுகின்றன. வாழ்த்துக் கவிதைகளாக மட்டும் அல்லாமல், பாரதிதாசனின் கற்பனைத் திறத்தையும் காட்டும் பாடல்களாக இவை அமைந்துள்ளன. இருள் மறைந்து, பொங்கல் நாளில் கதிர் எழுந்ததை,

"கங்குல்பறந்ததடி எங்கும்வெளுத்ததடி
தங்க வெய்யில் கண்டது கிழக்கிலே -நம்
கையில் பயன்கொடுக்கத் தையும் பிறந்ததடி
காடெங்கும் கன்னல்பறக்குலே -நல்ல
களந்தோறும் விளைந்த நெல்
அளந்தனர் உழவர்
கங்குல்பறந்ததடி எங்கும் வெளுத்ததடி
தங்க வெய்யில் கண்டது கிழக்கிலே"

என்று கற்பனையழகோடு அவர் பாடுகிறார். இந்நந்நாளின் மகிழ்ச்சியைக் காதல் உணர்வோடு குழைத்து அவர் படைத்த சில பாடல்களும் இந்நூலில் காணப்படுகின்றன.

"பகற்பொழுதிற் பொங்கற் புது
பானை வாங்கி வருகையிலே
நகைத்தபடி என்னை அவன் பார்த்தான் -நான்
நாணத்தினால் உள்ளமெலாம் வேர்த்தேன்"

என்று பாடும் ஒருத்தியையும் இங்கு நாம் காண்கிறோம். பாரதிதாசன் பொங்கலைச் சமரசப் பொங்கலாக மட்டுமல்லாமல் காதற் பொங்கலாகவும் பார்த்ததை இவை உணர்த்துகின்றன. இவ்வகையில் பாரதிதாசனே பொங்கற் பாடல்களில் முன் நிற்கிறார்.

எழுதும் இலக்கியத்தில் இவ்வளவு இடம் பெற்ற பொங்கல், எழுதா இலக்கியமான நாட்டுப் பாடல்களிலும் இடம் பெற்றுள்ளது. "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது நமக்கு நன்கு பழக்கமாகி விட்ட ஒரு பழமொழி. இது,

"தையும் பிறந்தது - தரையும் குளிர்ந்தது
தைமாதப் பெண்களெல்லாம்
தட்டாப் புறப்பட்டார்
கொட்டாப் புறப்பட்டார்"

என்ற நாட்டுப்பாடலில் அழகாக எதிரொலிக்கிறது. கிராமப்புறங்களில் பொங்கல் படைக்கும் போது முதலில் பட்டி ஆவுடையாருக்குப் பொங்கல் படைப்பார்கள். அப்போது,

"கைகழுவு பட்டியாரே - கை கழுவு
வாய் கழுவு பட்டியாரே — வாய் கழுவு
உண்ணுண்ணு பட்டியாரே - உண்ணுண்ணு"

என்று பாடுவார்கள். இதுவும் நாட்டுப் பாடல் இலக்கியத்தில் பொங்கல் பெற்ற சிறப்பையே உணர்த்துகிறது.

எழுதும் இலக்கியத்திலும் எழுதா இலக்கியத்திலும் இந்த அளவு போற்றப் பெறும் பொங்கல், இன்னும் பல புதிய இலக்கிய ஏடுகளில் பொங்கிப் பெருக வேண்டும். ஒற்றுமை, நல்லெண்ணம் முதலிய நல்லுணர்வுகள் இவ்வேடுகளில் மணக்க வேண்டும். அதுவே நம் ஆசை.

பொங்குக பொங்கல்!
பொங்கலோ பொங்கல்!!

ரயில்வேயின் நாயகர்

பேட்டி: இரா. முத்தரசன்

காலம் முழுவதும் பெரு நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருந்த மலாயன் ரயில்வே நிர்வாகத்தைப் புனரமைப்புச் செய்ய வேண்டி அரசாங்கம் திறமைசாலி ஒருவரை ரயில்வேயின் தலைமை நிர்வாகியாக நியமித்தது. அவர்தான் தொய்ந்து கிடந்த மலாயன் ரயில்வேயை இன்று தூக்கி நிறுத்தி லாபகரமான முறையில் நிர்வாகத்தை நடத்திவரும் டத்தோ இஸாக் தாடின் அவர்கள். அண்மையில் அவருடன் நடத்திய பேட்டி இது.

கே: டத்தோ அவர்களே! "வெள்ளையானையாக கருதப்பட்டு நஷ்ட நிலையில் நடந்துகொண்டிருந்த மலாயன் ரயில்வேயின் நிலையினை மாற்ற, நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டபின் தாங்கள் கையாண்ட மந்திர வித்தைகளைப் பற்றிச் சிறிது விளக்குவீர்களா?

ப: இதில் மந்திரம் மாயம் ஒன்றுமில்லை. ஒரு நிறுவனம் சிறந்த முறையில் நடைபெற நிர்வாகத்தில் ஒற்றுமை மிகவும் அவசியம். அந்த வகையில் நிர்வாகத்தில் ஒற்றுமை நிலவ நான் முயற்சிகள் எடுக்கிறேன்.

அடுத்து, பணியாட்களைக் கையாளும் முறை. அவர்களை மனிதாபிமானத்தோடு அணுக வேண்டும். எல்லா நிலைகளிலும் அவர்களுக்கு ஏற்ற தலைமைத்துவத்தை ஏற்படுத்த வேண்டும். ஒரு வேலையாள் தன்னுடைய மேற்பார்வையாளர் தன்னருகில் இருப்பதையே விரும்புவான். அப்போதுதான் அவன் ஒழுங்காக வேலை செய்யவும் முடியும். தொழிலாளர்களின் நல்ல ஒத்துழைப்பைப் பெற வேண்டியதும் அத்தியாவசியமாகும். ஒரு நிர்வாகம் வெற்றிகரமாக நடைபெற இவையெல்லாம் இன்றியமையாதவை என நான் கருதுகிறேன்.

மேலும் நான் நேரடியாகவே எல்லாரையும், எல்லா நிலைகளில் உள்ளவர்களையும் சந்திக்கிறேன். அவர்களுடைய நிறை குறைகளை அறிகிறேன். கடந்த சில வருடங்களில் என்னைப் போல் ரயில்களில் அதிகமாகப் பயணம் செய்தவர் வேறு யாரும் இருக்க முடியாது என நம்புகிறேன்.

அதனால், என்னால் மலாயன் ரயில்வேயின் நிறை குறைகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. அனாவசியச் செலவினங்களைப் பெருமளவு குறைத்து, சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்வதாலும், லாபம் தரக்கூடிய சேவைகளை அதிகரித்துள்ளதாலும் மலாயன் ரயில்வே இப்போது ஓர் ஆரோக்கியமான சூழ்நிலைக்குத் திரும்பியுள்ளது எனலாம். இருந்தாலும் நாங்கள் அடையவேண்டிய இலக்கு இன்னும் நீண்ட தூரம் இருப்பதாகவே கருதுகிறேன்.

முதலில் கொடுத்தோம்

இவை போன்ற நடவடிக்கைகளால்தான் ரயில்வேயினால் தனது தொழிலாளர்களின் 6 கோடி வெள்ளி சம்பளப் பாக்கியை விரைவாகவும், சுமுகமாகவும் தீர்க்க முடிந்தது. தொழிலாளர்களின் சம்பளப் பாக்கியை முதன் முதலில் கொடுத்ததும் மலாயன் ரயில்வேதான். மேலும் அரசாங்கம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரயில்வேக்காக சுமார் 20 கோடி வெள்ளி ஒதுக்கியுள்ளது.

கே: தாங்கள் பதவி ஏற்றுக் கொண்டபின் எந்தெந்த வகைகளில் மலாயன் ரயில்வே தனது பயணிகள், சரக்குகள் போக்குவரத்துச் சேவைகளில் மேம்பாடடைந்துள்ளது?

ப: நான் பதவி ஏற்றுக் கொண்டபின் ரயில்வேயின் முந்திய நிலையையே மாற்றியுள்ளேன். குறிப்பாகப் பழைய நடைமுறைகளை மாற்றி முழுக்க முழுக்க வர்த்தக ரீதியிலேயே ரயில் போக்குவரத்துச் சேவைகளை மாற்றி அமைத்துள்ளேன்.

"எக்ஸ்பிரஸ் ராயாட்" போன்ற துரித ரயில் சேவையையும் அறிமுகப்படுத்தியிருக்கிறேன். இதன்மூலம் பயணிகள் நல்ல சௌகரியங்களைப் பெற்றுள்ளனர். எங்களுக்கு வருமானத்தைக் கொடுக்கும் பயணிகளையும், வாடிக்கையாளர்களையும் கருத்தில் கொண்டே நாங்கள் இப்போது செயல்பட்டு வருகிறோம். முக்கியமாக எங்களின் வர்த்தகப் பிரிவை பலப்படுத்தியிருக்கிறோம்.

அடுத்ததாக அனாவசியமான போக்குவரத்துக்களைப் பெருமளவு குறைத்துள்ளோம். உதாரணத்திற்கு ஒன்று. செந்தூலுக்கும் கோலாலம்பூருக்கும் பகல் உணவு நேரத்தில் தொழிலாளர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு ரயில் சேவை ஒன்று நடைபெற்று வந்தது.

ஆனால் இதை ஒழுங்கான முறையில பயன்படுத்தி உபயோகித்தவர்கள் வெகுசிலரே. பெரும்பாலோர் தங்கள் பகல் உணவிற்காக இந்தச் சேவையைப் பயன்படுத்துவதில்லை- ஏதோ பொழுதுபோக்காகவே இதை எண்ணி வந்தனர். கடந்த எழுபது ஆண்டுகளாக இச்சேவை நடந்து வந்தாலும் யாரும் இதைப் பயன்படுத்தாத போது, இது அனாவசியம் என்று கருதி நிறுத்திவிட்டேன். இப்போது இந்த இலவச சேவை நடைபெறுவதில்லை. இப்போது நிறைய பஸ் சேவைகளும் மினி பஸ் சேவைகளும் இருக்கும் போது இதை பயன்படுத்தத் தேவையில்லை. அதோடு இதனால் ஆண்டுதோறும் சுமார் ஒரு லட்சம் வெள்ளி வீணாகிறது. பொதுமக்களின் பணத்தை ஏன் இப்படி வீணாக்க வேண்டும் என்று கருதியே இதை நிறுத்திவிட்டேன்.

இதனால் பலத்த எதிர்ப்பும் கிளம்பியது. ஆனால் நான் அஞ்சவில்லை. சிக்கன நடவடிக்கைகளில் ஒன்று இது.

கே: தனியார் போக்குவரத்து நிறுவனங்களால் மலாயன் ரயில்வே பலத்த போட்டியை எதிர்நோக்குகிறதா? அப்படியானால் அந்தப் போட்டிகளை எப்படி நீங்கள் சமாளிக்கிறீர்கள்?

ப: தற்போது மலாயன் ரயில்வே தனியார் போக்கு

வரத்து நிறுவனங்களிடமிருந்து போட்டியை எதிர்நோக்குகிறது என்பதுதான் நான் பதவி ஏற்றவுடன் என்னிடம் தெரிவிக்கப்பட்ட முதல் செய்தி.

நாம் ஒழுங்காக..

நாம் ஒழுங்காக இல்லாதபோது அவர்கள் மேல் ஏன் பழி போட வேண்டும் என்பதுதான் எனது வாதம். சரியான, ஒழுங்கான சேவையைக் கடைப்பிடித்தால் நாமும் நிர்வாகத்தைச் சிறந்த முறையில் நடத்த முடியும். சரியான நேரத்தில் குறிப்பிட்டபடி புகைவண்டிச் சேவையைத் தொடங்குங்கள் என்பது எனது கட்டளை. வெள்ளைக்காரர் காலத்தில் ரயில்கள் சரியான நேரத்தில் ஓடின என்றால், நிறத்தால் வேறுபட்டாலும் நாமும் ஏன் சரியான நேரத்தில் ரயில்களை ஓட்ட முடியாது? பின் சுதந்திரம் பெற்றவர்கள் என்று பெருமையாகப் பேசிப் பயன் என்ன?

தனியார் நிறுவனங்களைவிட ரயில்வேயின் போக்குவரத்துக் கட்டணங்கள் மிகவும் குறைவு. உதாரணமாக சிமெண்ட் போன்ற கனமான பொருட்களுக்கான போக்குவரத்துக் கட்டணங்கள் மிகவும் குறைவு.

ஆகவே வாடிக்கையாளர்களுக்கு நாம் எந்த அளவுக்குச் சிறந்த சேவையைத் தருகிறோமோ அந்த அளவுக்கு நம்மால் தனியார் போக்குவரத்து நிறுவனங்களின் போட்டியைச் சமாளிக்க முடியும்.

தேவைக்கேற்ப நம் சேவைகளை விரிவுபடுத்துவதன் மூலமும் போட்டிகளைச் சமாளிக்க முடியும். அதைத்தான் நானும் செயல்படுத்தி வருகிறேன்.

கே: தாங்கள் மிகவும் கண்டிப்பானவர் என்றும் வெளிப்படையாகப் பேசுபவர் என்றும் சொல்லுகிறார்களே...?

ப: எதைவைத்து கண்டிப்பான பேர்வழி என்று கூறுகிறார்களோ தெரியவில்லை. ஒழுங்காக வேலை செய்யாமல் இருப்பவர்களுக்கு வேண்டுமானால் நான் கண்டிப்பானவனாகத் தென்படலாம் என நினைக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரை நான் எனது கடமையைத்தான் செய்கிறேன். எனது நிர்வாகத்தின் கீழ் 11,000 பேர் வேலை செய்கிறார்கள்.

அவர்கள் தங்களுக்குரிய வேலைகளை ஒழுங்காகச் செய்கிறார்களா என்பதைக் கவனிக்க வேண்டியது என் பொறுப்பு. ஒழுங்காக வேலை செய்யாதவர்களைக் கண்டிக்க வேண்டியதும் என் பொறுப்புத்தான். அப்படிப்பட்ட ஒரு சிலருக்கு ஏற்கனவே எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டு விட்டன. அவரவர்கள் தத்தம் வேலைகளை அவர்களாகவே உணர்ந்து செய்ய வேண்டும் என நான் விரும்புகிறேன். அதனால்தான் என்னைக் கண்டிப்பானவன் என்று சொல்கிறார்களோ என்னவோ?

அடுத்து நான் ஒளிவுமறைவின்றிப் பேசுபவனா இல்லையா என்பதை நீங்களே இவ்வளவு நேரம் என்னோடு பேசியதில் புரிந்து கொண்டிருப்பீர்களே?

கே: எப்போதும் இல்லாத அளவில் அண்மைக் காலங்களில் ரயில் தடம் புரளும் சம்பவங்களும், விபத்துக்களும் நிகழ்ந்துள்ளன என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா? அதற்கான காரணம் என்னவென்று தங்களால் கூறமுடியுமா?

ப: உங்கள் கருத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். இதற்கான பழியை நாம் வெளியிலுள்ள சக்திகள் மேல் போடக் கூடாது, நம்மையேதான் குறை சொல்லவேண்டும்.

தொழிலாளர்களின் கவனமின்மை, கடமையைச் சரிவரச் செய்யாத தன்மை இவை தாம் இந்த மாதிரி அசம்பாவிதங்களுக்கான காரணங்கள். ரயில்வேயின் உள்ளே நாம் ஒழுங்கைக் கையாண்டால் இந்தச் சம்பவங்களைப் பெருமளவு குறைத்து விடலாம்.

கே: பெரும்பாலான நாடுகளிலுள்ள அரசாங்க வர்த்தக நிறுவனங்கள் தோல்வியையும், நஷ்டத்தையுமே எதிர்நோக்குகின்றனவே? இதற்குத் தாங்கள் கூறும் காரணம்?

ப: அப்படியானால் தனியார் நிறுவனங்கள் மட்டும் ஏன் வெற்றியையும், லாபத்தையும் சந்திக்கின்றன என்ற கேள்விக்கும் நீங்கள் விடை காணவேண்டும்.

அரசாங்கத் தொழிலாளர்களுக்கு அவர்களின் வேலையின் மேல் ஒரு பற்று ஏற்படச் செய்யவேண்டும். தினந்தோறும் இரும்படித்து உருக்கும் வேலையை ஒருவன் செய்து வந்தானேயானால் அவனுக்குச் சலிப்புத் தட்டிவிடும். இது போன்ற நிலையை மாற்ற வேண்டும்.

அங்கே திறமைக்கு...
இங்கே?

தனியார் நிறுவனங்களில் ஒருவரின் திறமைக்கும், உற்பத்தித் திறனுக்கும் முதலிடம் தருகின்றார்கள். திறமைசாலிகளுக்கே பதவி உயர்வுகளும் சன்மானங்களும் அளிக்கிறார்கள். ஆனால் அரசாங்க நிறுவனங்களில் அப்படி இல்லை. மூத்தவர்களுக்கும், நீண்ட காலச் சேவையாளர்களுக்குமே முதலிடம் தரப்படுகின்றது.


நான் சிலருக்கு ரயில்வேயில் பதவி உயர்வும், சன்மானமும் அளிக்க விரும்புகிறேன். ஆனால் அவர்களைவிட நீண்ட கால சேவையாளர்கள் இருப்பதால் என்னால் முடிவதில்லை. அரசாங்கத் துறையில் உற்பத்தித் திறனுக்கும், உற்பத்தித் திறனை ஒட்டிய திறமைக்கும் திறமைக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும். திறமையின் அடிப்படையிலேயே அவரவர் வேலைகளை நிரந்தரமாக்க வேண்டும்.

இதனைச் செய்யவேண்டுமெனில் இப்போதுள்ள அரசாங்க ஊழியர்களின் சட்டதிட்டங்களைச் சீரமைப்புச் செய்யவேண்டும்.

நல்ல முறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குச் சன்மானம் அளிப்பது போன்றவையும் நல்ல பலன் தரும்.

கட்டுப்பாடான ஒழுங்கான நிர்வாகத்தைக் கொண்டு தேவைக்கேற்ற சேவையைக் கொடுத்து வந்தால் லாபம் ஏற்படாவிட்டாலும் நஷ்டமாவது ஏற்படாமல் இருக்கும்.

கே: வளர்ந்து வரும் புதிய சமுதாயத்தில் உருவாகி வரும் இளம் நிர்வாகிகளும், அதிகாரிகளும் தத்தம் உத்தியோகத்தில் மேன்மையடைய தாங்கள் வழங்கும் அறிவுரைகள் என்ன?



ஆசிரியர்: எங்கே இதற்கு பதில் சொல் பார்க்கலாம். "அடி மேல் அடி அடித்தால்..."

மாணவன்: வலிக்கும் சார்!

—மு. கமலநாதன்,
தென் ஜிஞ்சாங், சிலாங்கூர்

ப: ஒரு முதியவரைப் போல் அறிவுரைகள் கூற நான் விரும்பவில்லை. இளம் அதிகாரிகள் தங்கள் தொழிலில் விருப்பங்கொள்ள வேண்டும்.

உண்மையோடு நேர்மையாக உழைத்து எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும். பேச்சைவிட செயலில் வேகம் வேண்டும்.

மேலும் உத்தரவிடுவதை மட்டும் தெரிந்து கொள்ளாது உத்தரவுகளை ஏற்கவும் தெரிந்து கொண்டு அதன்படி நடக்க வேண்டும். எடுத்த காரியத்தை முடிக்கும் மன உறுதியும், தோல்வியை எதிர்நோக்கினாலும் துவளாத மனப்போக்கையும் இளம் அதிகாரிகள் கொண்டிருக்கவேண்டும். இவை தாம் எனது ஆலோசனைகளாகும்.

கே: மலேசியத் தலைநகரின் வாகனப் போக்குவரத்தைக் குறைக்க மலாயன் ரயில்வே ஆற்றும் பணிகள் என்ன? எதிர்காலத்தில் நகரத்தில் பாதாள ரயில்களை நடத்தும் திட்டங்கள் உண்டா?

ப: தலைநகரின் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்ப்பதில் எங்கள் கவனம் செல்லவில்லை. மலாயன் ரயில்வே எதிர்நோக்கும் தற்போதைய பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதுதான் எங்களது தலையாய பணியாகும்.

சுரங்கப் பாதை ரயில்கள் எதிர்காலத்தில் ஏற்படலாம். அதைப் பற்றி இப்போது சொல்வதற்கில்லை.

தைப்பூச ரயில்

கே: தைப்பூச ரயில்சேவை-யை விரிவுபடுத்தும் நோக்கம் மலாயன் ரயில்வேயிக்கு உண்டா?

ப: தாராளமாக உண்டு. தைப்பூச ரயில் சேவை ஆண்டு தோறும் நடைபெறும் ஒரு கட்டாயச் சேவையாக இருந்து வந்துள்ளது.

தைப்பூசத்தில் கலந்து கொள்ளும் மக்களை அழைத்து வர தம்பின், குளுவாங் வரை செல்லும் சிறப்பு ரயில் சேவைகள்கூட அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்தச் சேவைகளை அமைதியான முறையில் பயன்படுத்தி, அசம்பாவிதங்கள் ஏதும் நிகழாவண்ணம் பார்த்துக் கொள்ளுமாறு இந்திய மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கே: பத்திரிகைகள், செய்தித்தாட்கள், புத்தகங்கள் போன்றவை பெரும்பாலும் தனியார் போக்குவரத்து நிறுவனங்களின்மூலமே பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. மலாயன் ரயில்வே பத்திரிகைகளின் போக்குவரத்துக்கு கவர்ச்சிகரமான ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தினால் என்ன?

ப: தாராளமாக! முடிந்தால் விரைவில் அறிமுகப்படுத்துகிறோம்.

கே: நம்நாட்டில், சுற்றுப் பயணிகளுக்கு ஏற்ற வகையில், என்னென்ன வசதிகளை மலாயன் ரயில்வே செய்துவருகிறது என்பதைத் தாங்கள் கூற முடியுமா?

ப: மலாயன் ரயில்வே செயல்படுத்தும் சுற்றுப் பயணிகளுக்கான பலவகைத் திட்டங்களில் ஒன்று தாய்லாந்திற்குச் செல்லும் ரயில் சேவையாகும். தற்போது போர்ட்டிக்சனுக்கு ரயில் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத் திட்டங்களும் நிறைய உண்டு.

வெளிநாட்டுச் சுற்றுப் பயணக் கழகங்களோடும் மலாயன் ரயில்வே தொடர்பு வைத்துள்ளது.

கே: தற்போது மலாயன் ரயில்வேயில் எத்தனைப் பேர் வேலை பார்க்கிறார்கள்? ஆண்டுக்கு எத்தனைப் பேர் புதிதாக வேலையில் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள்?

ப: தற்போது சுமார் பதினோராயிரம் பேர் மலாயன் ரயில்வேயில் வேலை பார்க்கிறார்கள். காலியாகும் வேலைகளைப் பொறுத்துத்தான் ஆண்டுதோறும் புதிய தொழிலாளர்களைச் சேர்க்கிறோம்.

கே: நம்நாட்டில் இந்தியா ஜப்பான் போன்று ரயில்சேவை விரிவாகவும், பரவலாகவும் இல்லை, காரணம் சொல்ல முடியுமா?

ப: நம் நாட்டில் நல்ல சாலை வசதிகள் இருப்பதுதான் காரணம் என நினைக்கிறேன். கார்களும் இங்கே அதிகம். வெளிநாட்டுக் கார்களை வாங்குவதிலும் நமக்குச் சிரமம் ஏதும் இருப்பதில்லை. அதற்கான பண வசதியும் மக்களிடம் நிறைய உள்ளது. இதனால்தான் நம் நாட்டில் ரயில் சேவை பலமிக்க சேவையாக இல்லை என்று கருதுகிறேன்.

டத்தோ இஸாக் தாடின் அவர்கள் ஒரு சாதாரண மலாய் குடும்பத்தில் பிறந்து, கிராமப் புறத்தில் வளர்ந்தவர் தனது ஆரம்பக் கல்வியினைக் கோலப் பிலாவிலுள்ள மலாய், ஆங்கிலப் பள்ளிகளில் முடித்துவிட்டு 1955-இல் சிங்கப்பூரிலிருந்த மலாயா பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். 1959-இல் பட்டதாரியாக வெளியே வந்த அவர் அதே ஆண்டில் அரசாங்கத்தில் வேலைக்குச் சேர்ந்தார்.

அவருக்கு இப்போது 45 வயதுதான். அரசாங்கத் துறையில் பதினெட்டு ஆண்டுக் காலம் சேவையாற்றியுள்ளார். இக்குறுகிய காலத்தில் இந்த இளம் வயதிலேயே "மாரா"வின் தலைமை அதிகாரி, பேராமாநிலத்தின் அரசாங்கச் செயலாளர் மற்றும் பல அமைச்சுக்களில் உயர் பதவிகள் முதலானவற்றை வகித்துவிட்டு தற்போது மலாயன் ரயில்வேயின் தலைமை நிர்வாகியாகச் சேவையாற்றி வருகிறார். அவரது தலைமையின் கீழ் ரயில்வே ஒரு புதிய சூழ்நிலையில் வெற்றிப்பாதையில் பீடுநடை போடும் என உறுதியாக நம்பலாம்.

காந்திஜியின் தாய்மொழிப்பற்று

தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகம் முடிவுற்று அரசாங்கத்துடன் சமாதானம் ஏற்பட்டதும் மகாத்மா காந்தி இந்தியா திரும்பினார். அவரை நிருபர்கள் பலர் பேட்டி கண்டனர்.

ஒரு குஜராத்தி நிருபர் காந்திஜியிடம் ஆங்கிலத்தில் கேள்வி கேட்கத் தொடங்கினார். அவரை இடைமறித்து காந்திஜி, 'ஐயா, நீரும் குஜராத்தி; நானும் ஒரு குஜராத்திதான்; பிறகு ஏன் என்னிடம் ஆங்கிலத்தில் கேள்விகள் கேட்கின்றீர்?" என்று கேட்டார். உடனே தன் தவற்றை உணர்ந்த அந்த நிருபர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு குஜராத்தியிலேயே கேள்விகள் கேட்டார்.

இந்தச் சம்பவம் காந்திஜியின் தாய்மொழிப்பற்றுக்கு ஒரு சான்றாகும்.

—எல். எம். நல்லையா
கிள்ளான்

ஒரு பக்கக் கதை

சேமிப்பு

கற்பகம்

முனியாண்டிக்கு ஓர்ரு
மாதங்களாகவே தனியாத ஆசை
பிறந்து விட்டிருந்தது. அது
வேறொன்றுமில்லை. எப்படியும்
தனது பெயரில் அஞ்சலகத்தில்
ஒரு பத்து வெள்ளியையாவது
போட்டுச் சேமிப்புக் கணக்குத்
திறக்கவேண்டும் என்னும்
ஆசையே அவனை அல்லும் பக
லும் அரியாய் அரித்துக்கொண்
டிருந்தது.

தனது பெரிய குடும்பத்தில்
இந்த ஆசை. முடவன் கொம்புத்
தேனுக்குப் பட்ட ஆசையைப்
போன்றது என்பது அவனுக்
குத் தெரியாமல் இல்லை. என்ரு
லும் என்ன செய்வது,"சேமித்து
வாருங்கள் சிறப்பாக வாழ்வீர்
கள்" என்று சில பெரியவர்கள்
இப்போது மேடையில் முழக்கி
வருவதைக் கேட்டதன் பலன்.
முனியாண்டிக்கு இந்த ஆசையை
உண்டாக்கிவிட்டது.

மாமூலாகத் துண்டுவிழும்
தனது குடும்பத்தின் பட்ஜெட்
டில் "இந்த மாதம் மேலும் ஒரு
பத்து வெள்ளி துண்டு விழுந்து
விட்டுப் போகட்டுமே, அத
என்ன செலவாகவா போகிறத.
சேமிப்பாக அல்லவா வருகிறது"
என்று முடிவு செய்துகொண்ட
முனியாண்டி. மாதச் சம்பளத்
தில் இறுக்கமாகப் பிடித்து
வைத்த பத்து வெள்ளியுடன்
அன்று அஞ்சலகத்திற்குத் தனது
"லொட லொட" சைக்கிளில்
சென்று கொண்டிருந்தான்.

அவன் உள்ளத்தில் பிறந்
திருந்த அளவிடமுடியாத
மகிழ்ச்சி அவன் கால்களின்
வழியாக இறங்கி சைக்கிளை
மிதியோ,மிதியென்று மிதித்தது.
சைக்கிளோ. ஜலதரங்க. இசை
யுடனும் தனது "போத்தா"
டயர்களுடனும் ஓடிக் கொண்
டிருந்தது.

சைக்கிள் தன் பாட்டுக்கு
ஓட முனியாண்டி சேமிப்புப்
புத்தகத்தைப் பெறப்போகும்
அந்தக் காட்சியைக்கற்பனை
செய்து பார்த்தான். அவனுக்
குப் பெருமை பிடிபடவில்லை.
தானும் ஒரு பத்து வெள்ளியைச்
சேமிக்கப் போகிரேம் என்பதை
நினைத்தபோது தன்னால் எதை
யும் சாதிக்க முடியும் என்ற
உறுதி அவனுக்கு ஏற்பட்டது.

அஞ்சலகத்திற்கு இன்னும்
ஐம்பது கெஜ தூரம் இருந்தது.
அஞ்சலகக் கட்டடம் நெருங்கி
யதும் முனியாண்டி இனனும்
வேகமாகச் சைக்கிளை மிதித்
தான்.

அஞ்சலகம் நெருங்கியது.
அவனுடைய சேமிப்பு ஆசை
முற்றிய காயாகி இன்னும் சிறிது
நேரத்தில் கனியாகப் போகிறது.
இதோ இருபதே கெஜ தூரத்தில்
அஞ்சலகம். முனியாண்டியின்
கால்கள் இயந்திரம்போல்
சுழன்றன.


அப்போது-

படீர்-

ஒரு சத்தம்.

அவன் சைக்கிளின் பின்
டயரும் டியூப்பும் வாயைப்
பிளந்துகொண்டன. அப்புற
மென்ன!

முனியாண்டியிடமிருந்த
பத்து வெள்ளி சைக்கிள் கடைக்
காரனின் சேமிப்பில் ஐக்கிய
மானது.



தமிழர் திருநாள் சிந்தனைகள்

தமிழர் திருநாளின் மூல கர்த்தாவாக -தந்தையாக விளங்கிய தமிழவேள் சாரங்கபாணி அவர்கள், தமிழர் திருநாள் கொண்டாட்டத்தை 1952-ஆம் ஆண்டு சிங்கப்பூரில் துவக்கிப் படிப்படியாக மலேசியா முழுவதிலும் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறுவதற்கு வழி வகுத்துத் தந்தார்.

முதல் 15, 16 ஆண்டுக் காலம் தமிழர் திருநாள் கொண்டாட்டங்கள் சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் ஒரு சமுதாயத் திருவிழா போன்று எல்லாச் சிறப்புக்களும் பொலிய மிக விரிவான முறையில் கொண்டாடப்பட்டு வந்திருப்பதை நாம் மறந்துவிட முடியாது.

தமிழர் திருநாளின் தலையாய நோக்கம் சமுதாயத்தில் ஒற்றுமை நிலவச் செய்வதே ஆகும். தமிழர்களை நெல்லிக்காய் மூட்டைக்கு ஒப்பிடுவது முற்றிலும் பொருந்துவதாகும். தமிழர்களை ஒன்று சேர்ப்பது அத்துணை எளிதான காரியமல்ல. சேரர் - சோழர்- பாண்டியர் காலத்திலிருந்தே தமிழ்ச் சமுதாயம் பிளவு பட்டு, பேதப்பட்டு, அதன் பலனைக உருக்குலைந்து சிதறிச் சின்னபின்னமாக-அடைய வேண்டிய நியாயமான முன்னேற்றங்களை அடையாமல் - அவலத்தில் ஆழ்ந்து கிடக்கிறது. அந்தக் காலத்திலும் தமிழ்ப் புலவர்கள் பிளவுண்டு கிடந்த தமிழ் மன்னர்களை ஒன்றுபடுத்த முயன்றிருப்பதை இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

இளங்கோ இயற்றிய சிலப்பதிகாரம் கூடத் தமிழ்ச் சமுதாயத்தின் ஒருமைப்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்டமைந்த காப்பியம் என்று சொல்வதும் மிகையாகாது. ஆனால், தமிழர்களிடையே அன்றும் சரி, இன்றும் சரி தாய்த் தமிழகத்திலானாலும் குடியேறி வாழுகின்ற மலேசியா போன்ற பிற நாடுகளானாலும் வாழும் இடமெல்லாம் தமக்குத் தாமே உட்பகையை வளர்த்துக்கொண்டு அழிந்துபோவது தமிழ் மக்களின் அழிக்க முடியாத தலைவிதியாக இருந்து வருகிறது.

இந்த மாற்றவொண்ணாத தலைவிதியை மாற்றுவதற்கு முனைப்பாக மேற்கொள்ளப்பட்ட பெரு முயற்சியே தமிழர் திருநாளாகும். தமிழர்களின் அவலங்களுக்கெல்லாம் மூலகாரணம், அவர்களிடையே காணப்படுகிற பிளவும் பூசலுமே என்பதை நன்கு உணர்ந்த தமிழவேள் அவர்கள், இந்தத் தீராப் பிணிக்குச் சஞ்சீவியாகத் தமிழர் திருநாளை வழங்கினார். தமிழர் திருநாள், தமிழர்களின் ஒற்றுமைத் திருநாளாக "அனைவரும் ஒன்று படுவோம், வாரீர்" என்னும் அறைகூவலை முன்வைத்தே கொண்டாடப் பட்டு வருகிறது. நம்மிடையே இயற்கையாக உள்ள வேற்றுமைகளும் உண்டு; செயற்கையாக நாமே உண்டாக்கிக் கொள்கிற பேதங்களும் உண்டு. மலேசியாவில் பிறந்த தமிழர்கள் இருக்கிறார்கள். இந்தியாவில் பிறந்து இங்கே குடியேறிய தமிழர்களும் இருக்கிறார்கள். அதுபோல் இலங்கை, பர்மா போன்ற மற்ற நாடுகளில் பிறந்து இங்கே குடியேறிய தமிழர்களும் இருக்கிறார்கள். இது தவிர. சமயத்தாலும் நம்மிடையே வேறுபாடுகள் உண்டு. முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் முதலிய பல்வேறு சமயத்தைச் சார்ந்த மக்களையும் நமது சமுதாயம் உள்ளடக்கி இருக்கிறது. தவிர, இந்துக்களிடையே மண்டிக் கிடக்கும் ஜாதிப் பிரிவுகளும், உயர்ந்தோர் தாழ்ந்தோர் போன்ற ஏற்றத் தாழ்வுகளும் சமுதாயத்தைப் பிளவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. மேலும் நகர்ப்புறங்களில் வாழ்கிற தமிழர்கள், தோட்டப் புறங்களில் வாழ்கிற தமிழர்கள் என்று இரு வேறு பெருங் கூறுகளாகவும் நாம் பிரிந்து கிடக்கிறோம். உத்தியோகம் பார்க்கின்ற தமிழர்கள், வாணிகம் புரிகின்ற தமிழர்கள், முதலாளிகளாகத் திகழ்கின்ற தமிழர்கள், தொழிலாளிகளாகக் கடமையாற்றுகின்றவர்கள், குபேரர்களாகப் பெருஞ் சொத்துக்களுக்கு அதிபதிகளாக இருப்பவர்கள், வறுமையின் விளிம்பில் அன்றாடம் காய்ச்சிகளாக வாழ்கின்றவர்கள், மற்றும் அரசியல்வாதிகள், டாக்டர்கள், வழக்கறிஞர்கள், பொறியியல்வல்லுனர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், சொந்த உழைப்பை நம்பி வாழும் விவசாயிகள், மீனவர்கள், அங்காடி வர்த்தகர்கள், பத்திரிகை விற்பனையாளர்கள், ரொட்டி விற்பனையாளர்கள், நமக்குத் தனிப் பெருமை சேர்க்கின்ற "கச்சான் பூத்தே" வியாபாரிகள் - இப்படி வாழ்க்கையின் பல துறைகளிலும் படர்ந்து பரவி விரவி நிற்கிற தமிழ்ச் சமுதாயத்தை ஆண்டுக்கு ஒரு முறை ஒரு நாளில் ஒரே மேடையில் அணிவகுத்து மொழியின் அடிப்படையில் ஒன்றுகூடச் செய்கிற பிருமாண்டமான முயற்சியே தமிழர் திருநாளாகும்.

தங்களிடையே நிலவும் வேறுபாடுகளையும், பேதங்களையும், கருத்து வேற்றுமைகளையும் ஒதுக்கிவைத்து விட்டுச் சமுதாய ஒருமைப்பாடு என்னும் தேவையை முன்னிட்டு ஒரே அணியில் திரளவைப்பதில் தமிழர் திருநாள் குறிப்பிடத் தக்க வெற்றியைத் தன் குறிக்கோளுக்கேற்ப ஈட்டி வந்திருக்கிறது என்பதே என்னுடைய கருத்தாகும்.விடாமுயற்சியோடு சோர்வின்றித் தமிழர் திருநாளை நாடெங்கும் தொடர்ந்து மன உறுதியோடு சமுதாயம் கொண்டாடி வருமானால் தமிழர்களை ஒற்றுமைப் படுத்த அரும்பாடு பட்ட தமிழவேள் அவர்களின் ஆசைக் கனவு நனவாவது திண்ணம். தீராப்பிணியாகச் சமுதாயத்தை உருக்குலைத்துக் கொண்டிருக்கும் உட்பூசல்களுக்கும், பிளவுகளுக்கும், தனி மனிதர் போட்டா போட்டிகளுக்கும்கூட நாம் நாளடைவில் முற்றுப்புள்ளி வைத்து விட முடியும்.

தமிழ்மக்களை வழி நடத்திச் செல்கின்ற தலைவர்களிடையே அவர்கள் அரசியல் கட்சிகளைச்

முருகு சுப்பிரமணியன்

சார்ந்தவர்களாயினும், தொழிற் சங்கங்களைச் சார்ந்தவர்களாயினும், கூட்டுறவு இபக்கங்களில் இருப்பவர்களாயினும் மணி மன்றம், திராவிடர் கழகம் போன்ற சமுதாய அமைப்புக்களைச் சார்ந்தவர்களாயினும், கோவில் போன்ற சமய அமைப்புக்களைச் சேர்ந்தவர்களாயினும் எல்லாத் தலைவர்களையும் எல்லா அமைப்புக்களையும் பேதங்களை மறந்து இணைந்து பிணைந்து ஒரே அணியில் நிற்க வைக்கின்ற பெருமிதமான குறிக்கோளைத் தமிழர் திருநாள் தன்னகத்தே கொண்டிருப்பதையும் இந்த நோக்கத்தில் அது முழு வெற்றி அடைவது சமுதாய ஒருமைப்பாட்டுக்கு மிகமிக இன்றியமையாதது என்பதையும் நான் இங்கு வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

தலைவர்கள்

"வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்களென்றால், சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்" என்பார் பாரதிதாசன். பாரத தேசத்தின் ஒற்றுமையின்மையைச் சித்தரிக்கும் இந்த வரிகள் தனித்தனியாக, உதிரிகளாக, ஒருவரோடொருவர் சேராமல் நெல்லிக்காய்களாகச் சிதறிக்கிடக்கும் நமது சமூகத்திற்கு முற்றிலும் பொருந்தக்கூடியது. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு" என்பார் பாரதியார். தமிழர் திருநாளின் அறைகூவலும் இதுதான். நாம் ஒன்றுபட்டால் ஆனந்தமாக இந்தச் சொர்க்க பூமியில் மற்றவர்களுக்கு இணையாக மேம்பட்டு வாழலாம். இல்லாவிட்டால் சொர்க்க பூமியில் வாழுகின்ற பேறு கிடைத்தும் நரகத்தில் இடர்படுகின்ற அவலநிலையே நமக்குக் கதியாய்-தலைவிதியாய் அமையும்.

தமிழர் திருநாளின் மூல நோக்கம் சமுதாய ஒற்றுமை என்பதைக் கண்டோம். தமிழர் திருநாளின் துணை நோக்கங்களாக தமிழர் முன்னேற்றம், தமிழர் பண்பாடு, தமிழ்க் கலைகள். இலக்கியங்கள் ஆகியவற்றைப் பேணி வளர்த்தல், தமிழர்களை எல்லாத் துறைகளிலும் ஆற்றல் மிக்கவர்களாகத் திகழச் செய்தல், இவை எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ் மக்களிடையே நாட்டுப் பற்றும், தேசிய ஒருமைப்பாட்டுணர்வும் மிளிரச் செய்தல் ஆகியவை அமைந்திருப்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழர் திருநாள் மேடைகளில் தமிழர்களின் கல்வி, தொழில், பொருளாதார முன்னேற்றங்கள் குறித்து அந்தக் காலத்திலிருந்தே வலியுறுத்தப்பட்டு வந்திருப்பதை நாம் அறிவோம்; அதுதவிர தமிழர் கலைகள், தமிழ் இலக்கியங்கள், ஆகியவற்றைப் பேணிப் பாதுகாத்து வளர்க்கின்ற குறிக்கோள்களிலும் தமிழர் திருநாள் கொண்டாட்டங்கள் கணிசமான வெற்றியைக் கண்டிருப்பதாகவே சொல்லவேண்டும்.



இலக்கியப் பேருரைகள் மூலமும், பேச்சுப் போட்டி, பட்டி மன்றம் முதலான பல்வேறு இலக்கியப் போட்டிகள் மூலமும், பழந்தமிழ் இலக்கியங்களைப் படிக்கின்ற ஆர்வத்தையும் பயிற்சியையும் தமிழர் திருநாள் பெருக்கி வந்திருக்கிறது. அதுமட்டுமின்றி புத்திலக்கியம் படைக்கின்ற கவிஞர்கள், சிறுகதை மன்னர்கள், எழுத்துச் சிற்பிகள், சொல்லின் செல்வர்கள் ஆகியோரையும் நாம் தமிழர் திருநாள் மூலம் ஏராளமாக உருவாக்கி இருக்கிறோம். குறிப்பாகத் தமிழகத்திலிருந்து தமிழர் திருநாளுக்காக ஆண்டுதோறும் அழைக்கப்பட்ட பேராசிரியர்கள் நாடு முழுவதும் பல்வேறு ஊர்களிலும் தமிழர் திருநாள் மேடைகளில் நிகழ்த்திய இலக்கியப் பேருரைகளையும் அவற்றைச் செவிமடுத்து நாம்பெற்ற இன்பத்தையும் அத்துணை எளிதில் மறந்துவிட முடியாது. தமிழ்ப் பண்பாட்டையும் தமிழர் வரலாற்றையும் தமிழர் தம் அருங்கலைகளின் சிறப்பையும் நாம் உணர்வதற்கும், அவ்வழியில் நாம் உயர்வதற்கும் அந்த இலக்கியப் பேருரைகள் பெருந்துணை புரிந்தன என்று சொல்வது மிகையாகாது.

தமிழர்களின் கலைகளை மறவாமல் பேணுகிற முயற்சியின் ஒருபகுதியாகத் தமிழர் திருநாள் கொண்டாட்டங்களில் கலை நிகழ்ச்சி முக்கிய இடம் பெற்று வந்திருப்பதையும், அந்தக் கலை நிகழ்ச்சிகளில் கலைத்துறையில் ஆற்றல்மிக்க அனைவரும் பங்கு கொள்கின்ற அரியவாய்ப்பு நல்கப்பட்டு வந்திருப்பதையும் நாம் அறிவோம். கலை நிகழ்ச்சிகளின் தொடர்பாக நடனப் போட்டி, பாடல் போட்டி, ஓரங்க நாடகப் போட்டி, தனி நபர் நடிப்புப் போட்டி முதலியவை இடம் பெற்று நம்மவர்களின் கலைத் திறமை வளர்வதற்கு வழி வகுத்து வருகின்றன. கோலம் போடும் போட்டி, ஓவியப் போட்டி, பூக்கட்டும் போட்டி முதலான போட்டிகள், தமிழர் தம் பண்பாடுகளைக் கட்டிக் காத்துவரத் துணை நிற்கின்றன

வேட்டி சேலை

சென்ற ஆண்டில் பெட்டாலிங் பகுதியில் நடைபெற்ற தமிழர் திருநாளில் எல்லாரும் வேட்டி கட்டிக் கொண்டு வர வேண்டும் என்று அழைப்பிதழிலேயே உடைபற்றிக் குறிப்புப் போட்டிருந்தார்கள். பெரும்பாலோர் வேட்டிகளையும் சேலைகளையும் மறந்து வருகிற இக்காலத்தில் தமிழர் திருநாள் மூலம் இத்தகைய நமது பண்பாடுகளை மக்களுக்கு அறிவுறுத்துவது தமிழர் திருநாள் தந்திருக்கிற விழிப்புணர்ச்சியின் விளைவேயாகும்.


விளையாட்டுத் துறையிலும் நம்மவர்களின் ஆற்றல்களை மேம்படுத்துகிற பல போட்டிகள் தமிழர் திருநாள் கொண்டாட்டங்களில் இடம் பெற்று வருவதைக் காண்கிறோம். தேசிய ரீதியிலும் இடம் பெறுகிற விளையாட்டுக்களோடு சடுகுடு, பல்லாங்குழி, சிலம்பம், கிளித்தட்டு முதலிய பழந்தமிழ் விளையாட்டுக்களையும் மக்களிடையே அறிமுகப்படுத்துவதற்கும் தமிழர் திருநாள் பயன்பட்டு வருவதைக் காண்கிறோம். தாய்மார்களுக்குச் சமையல் போட்டி வைத்து நமது சமையல் கலையையே மறந்துவரும் பெண்களுக்கு நமது தயாரிப்புப் பக்குவங்களின் அருமையையும் தமிழர் திருநாள் உணர்த்தி வருகிறது.

குழந்தைக் காட்சி நடத்தி ஆரோக்கியமான குழந்தைகளின் எண்ணிக்கை சமுதாயத்

தில் பெருகுவதற்கும் தமிழர் திருநாள் உதவி புரிந்துவருகிறது.

இப்படி வாழ்க்கையின் எல்லாத் துறைகளில் உள்ளவர்களும், முதியவர் இளைஞர் - சிறுவர் சிறுமியர் முதலிய எல்லா வயதினரும் ஆண் பெண் இருபாலரும் பங்கு பற்றுகிற நிகழ்ச்சிகளை அமைத்துத் தமிழர் திருநாள் கொண்டாடப்பட்டு வருவகைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவ்வகையில் சமுதாயத்தின் ஆற்றல்களைப் பல்வேறு துறைகளிலும் வளர்க்கிற திருநாளாகவும் இது அமைந்திருக்கிறது.

தேசிய உணர்வையும், தேசிய ஒருமைப்பாட்டையும் நமது மக்களிடையே தழைக்கச் செய்வதிலும் தமிழர் திருநாள் வெற்றி கண்டிருக்கிறது. "நாம் இருக்கும் நாடு நமதென்பதறிந்தோம், இது நமக்கே உரிமையாம் என்பதும் அறிந்தோம்" என்னும் பாரதியின் வரிகளைநமது மக்கள் மனத்தில் அழுத்தமாகப் பதிய வைப்பதற்குத் தமிழர் திருநாள் மேடைகள் நன்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குடியுரிமை எடுக்கவேண்டும் என்பதையும், வாழுகின்ற மண்ணுக்கு மாறாத விசுவாசம் உள்ளவர்களாக மக்கள் தங்களை ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்தித் தேசிய உணர்வு நம்மிடையே தழைக்கச் செய்வதற்குத் தமிழர் திருநாள் கொண்டாட்டம் பெரிதும் கைகொடுத்து வந்திருக்கிறது. இன்று நமது சமுதாயத்தில் மிகப் பெரும்பாலோர் குடிமக்கள் ஆகியிருக்கின்ற நிலையையும், நமது சமுதாயத்தில் நாட்டுப் பற்று நிரம்பி நிற்பதையும், நமது கவிஞர்கள் எழுத்தாளர் ஆகியோரின் எழுத்தோவியங்களில் தேசிய உணர்வு செறிந்து நிற்பதையும் தமிழர் திருநாள் தந்த பலன்களில் ஒன்றாகக் கருதுவது நியாயமேயாகும்.




தமிழர் திருநாள் மேடைகளில் சகோதரச் சமூகங்களைச் சேர்ந்த பிரமுகர்களை அழைத்துப் பேசச் செய்வதும் அவர்களுக்குச் சிறப்புச் செய்வதும் நமது கலை நிகழ்ச்சிகளோடு சகோதரச் சமூகங்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறச் செய்வதும், தமிழர் திருநாளின் ஒருசில போட்டிகளை மற்ற சமூகங்களும் பங்குகொள்ளும் பொதுப் போட்டிகளாக நடத்துவதும் தேசிய ஒருமைப்பாட்டிலும் சமூகங்களின் நல்லுறவிலும் நமக்குள்ள உண்மையான நம்பிக்கையைப் புலப்படுத்துவதற்குத் துணைபுரிகின்றன. தமிழர்களை ஒற்றுமைப்படுத்துகிற அதே சமயத்தில் மலேசியத் திருநாட்டின் -தேசிய சமுதாயத்தின்-பிரிக்கமுடியாத ஒரு பகுதியாகவே நாம் விளங்கி வருகிறோம் என்னும் உண்மையையும், நாட்டுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடப்பாடுகளையும் நாம் மறந்து விடவில்லை என்பதையும் மேற்குறித்த அம்சங்களைத் தமிழர் திருநாளில் இணைப்பதன் மூலம் நாம் புலப்படுத்தி வருகிறோம்.

பிளவுகள் வேண்டாம்

எதிர்காலத்தில் தமிழர் திருநாளை இன்னும் முனைப்பாக, இன்னும் பொலிவாக, இன்னும் விரிவாக நாம் நாடெங்கும் தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் நடத்த வேண்டிய அவசியம் இருப்பதாகவே நான் உணருகிறேன். நம்மிடையே எதிர்காலத்தில் எந்த வகையான பிளவுகளுக்கும் இடமளிக்கக் கூடாது. தலைவர்களுக்கிடையே காய்ச்சல், போட்டி, பொறாமை- அமைப்புக்களுக்கிடையே பலப்பரீட்சை-கோவில் நிர்வாகங்களில் சண்டை- மயானத்தை நிர்வகிப்பதில் உட்பூசல்-இப்படி எந்தவிதமான உட்பூசலும் நேரிடாதபடி சகோதரத்துவ ஒற்றுமையுணர்வைநம்மிடையே நமது தலைவர்களிடையே-நமது தொண்டர்களிடையே - நமது சாதாரண மக்களிடையே தழைத்தோங்கச் செய்வதற்கு ஒற்றுமைத் திருநாளான தமிழர் திருநாள் மிக இன்றியமையாததாகும்.

ஒற்றுமையை வளர்ப்பதோடு ஒவ்வொரு பகுதியிலும் வாழ்கின்ற நமது குடும்பங்களின் தனித்தனி முன்னேற்றத்தை ஊன்றிக் கணிப்பதற்கும் தமிழர் திருநாள் கொண்டாட்டங்களை நன்கு பயன்படுத்த வேண்டும் என்பதும் எனது வேண்டுகோளாகும்.

வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டிருக்கிற பெரியவர்களையும் இளைஞர்களையும், கல்வியில் பெருவெற்றி கண்டிருக்கிற மாணவர்களையும் சாதனை நிகழ்த்தியிருக்கிற எவரையும் அறிமுகப் படுத்துவதற்கும் அவர்களுக்குச் சிறப்புச் செய்வதற்கும் தமிழர் திருநாள் மேடைகளைப் பயன்படுத்த வேண்டும்.



இவ்வாறு செய்வதன் மூலம் மற்றவர்களும் தங்களை உயர்த்திக் கொள்கிற ஓர் உந்துதலை நாம் கொடுக்க முடியும்.

ஆங்காங்கு, அமைதியாகத் தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொண்டு வருகிற குடும்பங்கள் பலவுண்டு. பால் வெட்டுத் தொழிலாளியாக வாழ்க்கை நடத்திய அன்பர் ஒருவர், இப்போது சீனர் நடத்திய மார்க்கெட் கடையை விலைக்கு வாங்கி ஒரு சில ஆண்டுகளில் தமது வியாபாரத்தைப் பன்மடங்கு பெருக்கிச் சொந்தக் கடை, சொந்த வீடு, சொந்த லோரி என்னும் அளவுக்கு உயர்ந்திருக்கிறார். "முதலில் நாளொன்றுக்கு இரண்டு வெள்ளி வியாபாரம் நடப்பது கஷ்டமாக இருந்தது. இப்பொழுது நாளொன்றுக்குச் சராசரி ஐந்நூறு வெள்ளிக்கு வியாபாரம் நடக்கிறது" என்று பெருமையோடு என்னிடம் அந்த அன்பர் கூறியபொழுதே அவரைக் கட்டித் தழுவி முத்தமிட வேண்டும் என்னும் பெருமித உணர்வு என் உள்ளத்தில் எழுந்தது. இவ்வாறு கண்ணுக்குக்கண்ணான வாழ்க்கை முன்னேற்றங்களைக் கண்டு தன்னைத் தானே உயர்த்திக்கொண்டிருப்பவர்களைத் தமிழர் திருநாள் மேடைகளில் ஆண்டுக்கு ஒருவராகத் "திருவாளர் முன்னேற்றம்" என்று அறிமுகப்படுத்துவது பெரிதும் பயன்விளைக்கும் என்பது எனது கருத்தாகும்.

தமிழர் திருநாளைக் கொண்டாடுகிறவர்கள், போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்குவது, பொதுக்கூட்டம் - கலைநிகழ்ச்சி ஆகியவற்றோடு ஒவ்வோர் ஆண்டும் தமிழர் திருநாள் மூலம் குறிப்பிடத்தக்க நன்மை அந்த வட்டார மக்களுக்குக் கிடைக்கிற மாதிரி உருப்படியாக ஏதாவது செய்வது அவசியம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். கூடிப்பேசிக் கலைந்து விடுகிற கூட்டமாக மட்டும் அமையாமல் திருநாளுக்குத் திரட்டுகிற நன்கொடையில் கணிசமான ஒரு பகுதியை நினைவில் நிற்கக்கூடிய ஒரு நல்ல காரியத்திற்குப் பயன்படுத்த முன்வர வேண்டும். வழக்கமான விழாச் செலவுகளில் பலவற்றைச் சிக்கனப் படுத்துவதற்கு மார்க்கம் இருக்கிறது. விழாவில் கலந்து கொள்கிற பிரமுகர்களுக்கெல்லாம் நினைவுப் பரிசுகள், விழாவுக்கு வருகிறவர்களுக்குச் சட்டையில் குத்திவிடுகிற அடையாளப் பூக்கள், விளம்பரங்களை வாங்கி அச்சுக்கூலியாகக் கொடுத்து முடித்துவிடுகிற பொருள் வரவில்லாத சிறப்பு மலர்கள் முதலான பல விரயங்களைத் தவிர்த்துக் கூடுமான வரை விழாவைச் சிக்கனமாக நடத்தி நல்ல தொகையை மிச்சப் படுத்தி உருவான ஒரு காரியத்தை நடத்துவது, மக்களிடையே தமிழர் திருநாள் செல்வாக்குப் பெறுவதற்கு உதவியாக இருக்கும். அத்தகைய உருவான காரியங்களுக்குச் சில எடுத்துக்காட்டுக்களையும் குறிப்பிட நான் விரும்புகிறேன்.

அந்த வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு பண்பட்ட முதிய எழுத்தாளரின் நூலை அச்சேற்றித் தமிழர் திருநாள் நினைவாக வெளியிடலாம். அவ்வட்டாரத்திலுள்ள தமிழ்ப்பள்ளிக்கூடத்திற்கு மின்விசிறி, சமையல் பாத்திரங்கள் போன்ற தேவைகள் இருந்தால் அவற்றைத் தமிழர் திருநாள் நினைவாக வாங்கிக் கொடுக்கலாம். மேல் படிப்புக்கு வசதியற்ற நிலையில் தவிக்கும் அந்த வட்டாரத்தைச் சேர்ந்த மாணவனுக்குத் தக்க பொருளுதவியைச் செய்யலாம். அவ்வட்டாரத்தில் தையல் படிக்க விரும்பும் பெண்களுக்கு உதவியாகத் தையல் இயந்திரம் வாங்கிக் கொடுக்கலாம். அவ்வட்டாரத்தில் இலக்கிய வகுப்பைத் தொடங்கி அது நீடித்து நடப்பதற்கு ஆசிரியர் சம்பளம் போன்ற உதவிகளைச் செய்யலாம். இதுபோன்ற பலன் விளைவிக்கக்கூடிய ஒவ்வோர் உருப்படியான காரியத்தைத் தத்தம் சக்திக்கேற்ற அளவில் ஒவ்வோர் ஊரிலும் செய்வதே தமிழர் திருநாளைக் கொண்டாடுகிற குழுவினரின் திட்டமாக இருக்க வேண்டும்.

போட்டிகளுக்குக் கொடுக்கின்ற பரிசுகள்கூட சுழற்கேடயம், சுழற்கிண்ணம் தவிர்த்து மற்றவை தமிழ் நூல்களாக இருப்பது, தமிழ் நூல்களின் விற்பனைக்கு உதவுவதோடு மக்களிடையே தமிழறிவு பரவுவதற்கும் வழி வகுக்கும்.

தமிழ்ப் பள்ளிக்கூடங்களும் அங்கு பயில்கிற மாணவர்களும் தமிழர் திருநாள் கொண்டாட்டங்களின்போது சிறப்புச் சலுகை பெறுவதற்கு உரியவர்களாவர். அவர்களுக்கென்று தனிப்போட்டிகள், பரிசுகள் வழங்குவதும் தமிழ்ப்பள்ளிகளின்பால் பெற்றோர்களின் கவனத்தை மேலும் ஈர்ப்பதற்கு துணைபுரியும்.

அவியல்

திரெங்கானு மாநிலம் நாளொன்றுக்கு 30,000 பீப்பாய் வீதம் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் மொத்த உற்பத்தியில் இது 14 சதவிகிதமாகும். 1979ஆம் ஆண்டுக்குள் திரெங்கானுவின் எண்ணெய் உற்பத்தி நாளொன்றுக்கு 120,000 பீப்பாயாக உயரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. திரெங்கானுவில் பூலாய், தாபிஸ் ஆகிய இடங்களில் "எஸ்ஸோ" நிறுவனத்தால் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் நிறுவப்படவிருக்கும் இரு எண்ணெய்க் கிணறுகள் மூலம் இந்த எண்ணெய் உற்பத்தி சாத்தியப்படும். தீபகற்ப மலேசியாவிலேயே முதன்முதலாக நிறுவப்படவிருக்கும் எண்ணெய்க் கிணறுகள் இவையாகும்.

ஸ்பெயின் நாட்டின் "மெட்ரிக்" நகரத்தில் ஒரு மெக்கானிக்கான மரியோ மார்க்கோஸ் மார்ட்டின் என்பவர் 300 பெஸதாஸ் [8 மலேசிய வெள்ளி] கொண்ட தனது பணப்பையைத் திருடர்களிடம் பறிகொடுத்தார். ஆனால் அதிர்ஷ்டம் அவர் பக்கம் இருந்தது என்றே கூறவேண்டும். அப்பையினுள் இருந்த இரண்டு கிறிஸ்மஸ் சிறப்புக் குலுக்கு லாட்டரிச் சீட்டுகளுக்கு ஒரு கோடி பெஸதாஸ் (280,000 மலேசிய வெள்ளி) பரிசு அடித்திருந்தது. கைநழுவிப் போன மார்க்கோஸின் அதிர்ஷ்டச் சீட்டுக்கள் போலீசாரால் மீட்கப்பட்டன. பரிசுத் தொகையில் ஒரு பெரிய வீடு வாங்கப் போவதாக அதிர்ஷ்டக்காரர் மார்க்கோஸ் கூறினர்.

இந்த ஆண்டு ஜூன்வரை எண்ணெய் விலையில் ஏற்றமோ மாற்றமோ இருக்காது என "ஓபெக்" எனப்படும் எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் அறிவித்துள்ளன. கடந்த டிசம்பரில் வெனிசுலாவில் நடைபெற்ற "ஓபெக்" நாடுகளின் மாநாட்டில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

கடந்த வருடத்தில் தீபகற்ப மலேசியாவில் சாலை விபத்துக்களினால் 2,405 பேர் மரணமடைந்துள்ளனர். அதாவது நாளொன்றுக்கு ஏழுபேர் மரணமடைந்துள்ளனர்.

தேசியச் சேமிப்பு வங்கி பொது மக்களுக்கென புதிய சேமிப்புத் திட்டத்தை அறிவித்துள்ளது. இதன் மூலம் ஒவ்வொருவரும் பத்து வெள்ளியைச் செலுத்தி ஒரு சேமிப்புச் சீட்டுப் பெறலாம். ஒவ்வொரு சீட்டுக்கும் ஓர் எண் உண்டு. ஒருவர் 1000 சீட்டுக்கள் வரை பெறலாம். மூன்று மாதத்திற்கு ஒரு முறை இச்சீட்டு எண்கள் குலுக்கப்படும். வெற்றி பெறும் அதிர்ஷ்ட எண்களுக்கு முதல் பரிசான 50,000 வெள்ளியிலிருந்து கடைசிப் பரிசான 100 வெள்ளிவரை பரிசுகள் உண்டு. இத்திட்டத்தின் மூலம் அடுத்த பத்தாண்டுகளில் நாட்டு மேம்பாட்டுக்காக சுமார் 25 கோடி வெள்ளி திரட்ட அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது.

இத்தாலியில் ஒரு டாக்டருக்கு நான்கு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனைக்கான காரணம், அந்த டாக்டர் ஓர் அறுவைச் சிகிச்சையின் போது 11 அங்குல நீளமுள்ள ஓர் அறுவைச் சிகிச்சை ஆயுதத்தைத் திருமதி அஞ்சேலா என்னும் மாதின் வயிற்றுள் மறதியாக வைத்துத் தைத்து விட்டதுதான்.

அவன் ஒரு தும்பைப்பூ

மா. இளங்கண்ணன்

கண்ணைப் பறிக்கும் வண்ண மலர்களின் சிறுசிறு குவியல்கள் நிறைந்த மேசை.

அம்மேசை முன் கிடந்த முக்காலியில் அமர்ந்திருந்த மாணிக்கம் மாலை கட்டிக்கொண்டிருந்தான்.

அவன் மலர்களை மட்டும் எடுத்து மாலை கட்டவில்லை; மனத்தில் எழுந்த கருத்துப் பூக்களை அடுக்கிச் செண்டாகவும் கட்டிக்கொண்டிருந்தான்.

"எங்கெங்கோ பிறந்து இங்கே வருகின்றன! மாலையாக, மலர்ச்சரமாக மாறிக் கோவிலுக்குச் செல்கின்றன! மனம் ஒருமித்த காதலர்களைத் திருமணம் எனும் பெயரில் இணைத்து வைக்கின்றன! தலைக்கனம் பிடித்தவர்களை நொடிப்பொழுதேனும் தலை குனிய வைத்துக் கழுத்தில் ஏறிக்கொள்கின்றன! கல் நெஞ்சங்களையும் கனியச் செய்கின்றன! நறுமணத்தை நல்குகின்றன. அனைவராலும் விரும்பப்படுகின்றன! அது மட்டுமா? ஊனத்தை உடம்பையும் கழுவி பாவப் பிறவிகளின் பாவத்தையும் போக்குகின்றன!

மனிதனுடன் கடைசிவரை செல்கின்றன!

ஒரே எழுத்தைக் கொண்ட பூ!"

இப்படி எண்ணிக் கொண்டுதான் மாலை கட்டினான்.

அவன் உதடுகளின் ஓரத்தில் முல்லை மொட்டவிழ்ந்தது; சிரித்துக்கொண்டான்!

அப்போது அவனுக்கு தன்னைக் கவர்ந்துவிட்டிருந்த இன்னொரு பூவின் நினைவு வந்தது.

அந்தப் பூவை முகர்ந்து பார்க்கவும் உள்ளம் துடித்தது!

கொண்டை மாலையைக் கட்டி முடித்ததும் கால் பெருவிரலில் செருகியிருந்த வாழை நாரை எடுத்தான்.

மாலையை அழகாக இருக்கிறதா என்று தூக்கிப் பார்த்தான். அடுக்கடுக்காகத் தொடுத்திருந்த மாலையில் நீட்டிக்கொண்டிருந்த காம்புகளைக் கத்தரித்துவிட்டு நீர் தெளித்து மரச்சட்டத்தில் அடித்திருந்த ஆணியில் தொங்கவிட்டான்.

அப்போது அங்கு "பாப்பா" வந்தாள். வாயில் விரலை வைத்தால் கடிக்கத் தெரியாத பாப்பா இல்லை; பெயர்தான் பாப்பா.

பாப்பாவைப் பார்த்ததும் அவனுக்கு முல்லைப் பூவின் நினைவு! மேசை மீது இருந்த முல்லைப் பூவை ஒரு முறை பார்த்துக்கொண்டான்; அவள் சிரிக்கும்போது பற்கள் முல்லை மொட்டுகளை நினைவு கூர்வதால்!

அவள் கட்டியிருந்த புடவையில் மட்டும் பூ பூத்திருக்கவில்லை; முகத்திலும் முல்லை பூத்திருந்தது. சிரித்தபடி வந்து மடல் பிரிக்காத தாழம்பூவைப் போல் அவன்முன் நின்றாள்.

மாணிக்கம் முக்காலியில் அமர்ந்திருந்தபடியே அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

அவள் கண்களிலிருந்து அல்லி மலர்களையும், வாயிலிருந்து முல்லைமொட்டுகளையும், கன்னங்களிலிருந்து செந்தாமரைப் பூக்களையும், உதடுகளிலிருந்து ரோஜாப் பூக்களையும் பறித்தான். அவள் இடையிலேயே நாலெடுத்துத் தன் மனத்திற்குள் அழகான மாலை தொடுத்தான்.

பாப்பாவின் அழகில் சொக்கியிருந்த அவன் மனம் விடுபட சில நொடிப்பொழுது சென்றது.

ஆணியில் தொங்கவிட்டிருந்த கொண்டை மாலையை எடுத்து நீட்டியபடி, "நலமா?" என்றான்.

"நலந்தான்!" என்றவாறு அவள் கொண்டை மாலையை வாங்கிக்கொண்டு சிரித்தாள். அந்தச் சிரிப்பில் பொருள் இருந்தது.

அடுத்து அவளுக்காக எடுத்துப் பொதிந்து வைத்திருந்த எழுவகை உதிரிப் பூக்கள் உள்ள பொட்டலத்தை எடுத்துக் கொடுத்தான். மலர்க்கையை நீட்டி அவள் வாங்கிக்கொண்டாள்.

அவள் ஒவ்வொருநாளும் கொண்டை மாலையும், ஏழுவகை உதிரிப் பூவும் வாங்கிச் செல்வது வழக்கம்.

கொண்டை மாலையைத் தலையில் சூடிக்கொள்வாள். எழுவகை உதிரிப் பூக்களை நீர்த் தொட்டியில் போட்டு வைப்பாள்.

விடிந்ததும் கசங்கிவிட்டிருக்கும் கொண்டை மாலையைக் குப்பையில் போட்டுவிட்டு உதிரிப் பூக்கள் போட்ட நீரில் குளிப்பாள். இது அவளுடைய அன்றாடப் பணி!

மாணிக்கத்திற்கு அகவை முப்பத்திரண்டு ஆகிவிட்டது. திருமணம் ஆகவில்லை.


"தங்கைகளுக்குத் திருமணம் செய்த பின் தான் நான் திருமணம் செய்துகொள்வேன்." என்று பெற்றோரிடம் சொல்லிவிட்டான்.

மாணிக்கத்தின் பொறுப்புணர்ச்சியை நினைத்துப் பெற்றோர் பூரித்தனர்.

தங்கையர் இருவருள் மூத்தவளின் கழுத்தில் மாலை விழுந்துவிட்டது. பெரிய இடமாக இல்லை என்றாலும் நல்ல இடம்! திருமணமாகி அவள் கணவன் வீட்டுக்குப் போய்விட்டாள். இளையவள் இன்னும் யாரிடமும் கழுத்தை நீட்டவில்லை.

அவளைக் கட்டிக்கொடுக்க நல்ல இடமாகப் பார்த்துக் கொண்டிருந்தான் மாணிக்கம்.

மாலை வேளையில் வீட்டில் சும்மாதானே இருக்கிறோம் என்றெண்ணி பூக்கடை வைத்தான். அது மனதிற்கு மகிழ்ச்சி அளித்தது. வியாபாரம் நன்கு நடந்தது. புதுப்புது ஆட்களின்



தொடர்பு கிடைத்தது. குடும்பச் செலவுக்குத் தண்ணைக் கட்டியது.

ஒருவர் பூ வாங்க வந்தார்.

அவரைப் பார்த்ததும் மாணிக்கத்திற்குத் தாழம்பு நினைவுக்கு வந்தது!

அவர் சோற்றுக்கடை வைத்திருக்கிறார்.

சந்தைக்குச் சென்று கழித்துக் கட்டிய காய்கறிகளை வாங்கிக்கொண்டு வந்து சமைப்பார்! பழைய கறிகளைப் புதுக்கறியாக மாற்றிவிடும் மாயக்கலையையும் கைவரக் கற்றிருந்தார்.

அந்தக் கலையால் வரும் பாவத்தைப் போக்கத்தான் அவர் பூச்சரம் வாங்க வந்திருந்தார்.

பூச்சரத்தை வாங்கிக் கொண்டுபோய்ச் சாப்பாட்டுக் கடையிலுள்ள 'ஷோகேசில்' மாட்டியிருக்கும் தெய்வப் படத்திற்கு அணிவித்து, ஊதுவத்தி கொளுத்தி வைத்து, சாம்பிராணி புகை காட்டி கும்பிடுவார். அப்படிக் கும்பிடும்போது கூட தெய்வப் படங்களுக்குக் கீழே பழையன கழியாமலே புதியனவாக மாறியிருக்கும்!

தாழம் பூவைப்போல் அவர் மனம் நல்ல மனந்தான்! ஆனால் பேராசை என்ற நாகம் அவரிடம் குடி கொண்டிருந்தது. அதனால்தான் மாணிக்கத்திற்கு அவரைப் பார்த்ததும் தாழம் பூ நினைவுக்கு வந்தது.

"உன் சின்னத் தங்கச்சிய நல்ல இடத்திலே கேக்கிறாங்க. ஆனா ஒண்ணு..." என்று அவர் இழுத்தார்.

மாணிக்கம் பூச்சரத்தை இழுத்து முழம் போட்டபடி, "என்ன?" என்றான்.

"அந்தப் பையனுக்கு உன் தங்கச்சியெ கட்டினா நீ அந்தப் பையன் கூடப் பிறந்த தங்கச்சிய கட்டிக்கிறணுமாம். அப்படினா பெண் எடுத்து பெண் கொடுக்கிறது!" என்றபடி மாணிக்கத்தின் முகத்தைப் பார்த்தார்.

அவர் நினைத்தபடி அவன் முகத்தில் முல்லை பூத்தது.

"செஞ்சிட்டாப் போகுது!" என்றான்.

"அந்தப் பெண்ணைப் பார்த்தா நீ வேண்டாம்னு சொல்லிடுவே! அவ்வளவு கறுப்பு!" என்றார்.

அடுத்து ஒருவர் வந்தார்.

அவர் முகத்தில் ரோஜா இதழ்கள்.

உடலுக்கு நன்மை பயக்கும் தன்மையுடைய ரோஜாப் பூவை மாணிக்கம் நினைத்துக்கொண்டான். அவரால்தான் பெரிய தங்கைக்கு நல்ல இடத்தில் திருமணம் செய்ய முடிந்தது.

"வாங்க... கோப்பிக்குச் சொல்லட்டுமா?"

"வேண்டாம் இப்பத்தான் குடிச்சிட்டு வர்றேன்!" என்றார்.

மாணிக்கம் கதம்பப் பந்தை எடுத்தான்.

"தேனீ பூவின் நிறத்தைப் பார்த்தா தேனெடுக்கிறது! நிறம் கறுப்புனா என்ன? குணம் நல்லா இருந்தா சரி!" என்றான்.

"நீ சிவப்பா இருக்குறீயே! இரண்டு பேரும் சேந்து போனா கதம்பத்தைப் போலவுல இருக்கும்!"

"நீங்க அதைத்தானே காசு கொடுத்து வாங்கி தெய்வப் படத்திற்குப் போடுறீங்க!" வந்தவர் முகத்திலும் பல வண்ணப் பூக்கள். மாணிக்கத்தின் நல்ல மனத்தை எண்ணி மகிழ்ந்தார்.

கதம்பம் கைமாறியது. அவர் காசு எடுக்கப் பைக்குள் கையை விட்டார்.

அடுத்து ஒருத்தி வந்தாள்.

அவளைப் பார்த்ததும் மாணிக்கத்திற்கு ரோஜாப் பூதான் நினைவுக்கு வந்தது

அவள் பூ வாங்கியதும் உதிரிப் பூ கொடுங்கள் என்று கேட்பாள்! அவளிடம் வியாபாரம் செய்வதே மாணிக்கத்திற்கு பெரும் பாடாக இருக்கும். சமயத்தில் ரோஜா முள்ளைப் போல் குத்தியும் விடுவாள்.

அதற்கடுத்து மற்றொருத்தி வந்தாள். அவளுக்குப் பெயர் செந்தாமரை. அவள் நல்லவள். ஆனால் அவள் பிறப்பு சேற்றில்.

அறிமுகம் ஆனவர்களுக்கு ஒவ்வொரு பூவின் பெயரையும் வைத்திருந்தான்.

அவன் வைத்த பெயர்

சிலருக்குப் பொருத்தமாக இருந்தது. சிலருக்குச் சிறிதும் பொருத்தமில்லாமல் இருந்தது. வாய்ப்பேச்சில் மயங்கி அவர்களைத் தவறாக எடை போட்டிருந்தான்.

அறிமுகம் அற்றவர்கள் பூ வாங்க வந்தால் கதம்பம் அவன் நினைவுக்கு வரும்.

ஆனால் அவன் தனக்கென ஒரு பூவின் பெயரைத் தேர்ந்தெடுக்க முடியாமல் தடுமாறினான்.

கொம்பற்ற கொடி போல் ஆடிக்கொண்டிருந்த அவன் மனம் அருகிலிருந்த கள்ளிச் செடியைப் பற்றிப் படர தாவிக் கொண்டிருந்தது.

முல்லைப் பூவைப் பார்த்தான். பாப்பாவின் நினைவு வந்தது.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது.

வியாபாரம் முடிந்ததும் எழுவகை உதிரிப் பூக்களை எடுத்துக் கொண்டு நடந்தான்.

அந்தப் பூ அவனுக்குத் தான்!

நீரில் போட்டு வைத்து காலையில் எழுந்ததும் அந்த நீரில் குளிக்கவேண்டும் என எண்ணியே எடுத்துச் சென்றான்.

வீட்டிற்குச் சென்றதும் கல்லா கட்டிய காசைப் பெற்றோரிடம் கொடுத்து விட்டு இரவுச் சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு வெளியே கிளம்பினான்.

அவன் அதற்கு முன் அந்த நேரத்தில் அப்படி உடுத்திக் கொண்டு வெளியே சென்றது இல்லை.

"எங்கே அண்ணே போறீங்க?" என்று அவன் தங்கை வினவினாள்.

"படம் பார்க்க" என்று சற்றும் தயங்காமல் ஒரு குண்டைப் போட்டான்.

தங்கையிடம் அவன் போட்ட முதல் குண்டும் அது தான்.

அதுவும் வெடிக்கவில்லை; மாறாக ஆவலைத் தூண்டியது.

"படம்னா நானும் வர்றேண்ணே! படம் பார்த்து ரொம்ப நாளாச்சு!" என்றாள் அவள்.

அவனுக்குத் தேனீ கொட்டியதைப் போல் இருந்தது. அடுத்த நொடியே சுதாரித்துக் கொண்டு, "ரொம்பத் தொலைவு போகணும்!" என்று சொல்லி விட்டு நிற்காமல் விரைந்தான்.

அவன் நடந்து கொண்டிருந்தாலும் அவன் மனக்கண் முன் தங்கை முகம் தெரிந்தது. தங்கையிடம் பொய் சொல்லி விட்டுச் சென்றதால்.

நேர் பாதையில் நடந்து சென்றவன் நின்றான். நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தான். பாதை தூய்மையாகவே இருந்தது.

யாரும் தன்னைப் பார்க்கிறார்களா என்று பார்த்துவிட்டு ஒரு திருப்பத்தில் திரும்பினான். வளைந்து வளைந்து செல்லும் பாதையைக் கடந்து குறுக்குப் பாதையில் சென்றான். பல சாலைகளைக்கடந்து மங்கலாக வெளிச்சம் உள்ள பகுதிக்குள் நுழைந்து விட்டான்.

அங்கு ஒரே நாற்றம். குப்பைத் தொட்டி நிறையக் குப்பை இருந்தது. கீழேயும் சிந்திக் கிடந்தது.

தெருவில் வழிந்து நின்ற கூட்டம் அதைப் பொருட்படுத்தவில்லை.

அக்கூட்டத்தில் வெம்பல்கள் மட்டுமில்லை. பழங்களும் கூட கலந்திருந்தன.

அவர்களுள் மாணிக்கத்திற்குத் தெரிந்தவர்களும், அன்று மாலை கடையில் அந்திமந்தாரைப் பூ வாங்கியவர்கள் சிலரும் இருந்தனர்.

மாணிக்கத்தைப் பார்த்ததும் அவர்களின் முகம் பேயறைந்தாற் போல் மாறியது. பலர் அவசர அவசரமாக கைக்குட்டையை எடுத்து முகத்தை மறைத்துக்கொண்டு நடந்தனர், யாரும் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக.

முழுக்கக் குளித்துவிட்ட சிலர், பார்க்காதவர்களைப்போல் சென்றனர், குறும்பாகச் சிரித்துக்கொண்டு.

தான் சூட்டியிருந்த பூக்களின் பெயர்கள் சிலருக்குப் பொருத்தமில்லை என்று அவனுக்கு அப்போதுதான் தெரிந்தது.

அதே நேரத்தில் அங்கு சென்ற அவன் மனம் "திக் திக்" என்று அடித்துக்கொண்டிருந்தது. திருடச் சென்றவனைப் போல் சுற்றும் முற்றும் பார்த்தான்.

சந்தைக் கடையைப்போல் இருந்த கூட்டத்தில் யார் கண் யார் யார் மேல் விழுகிறதோ என்ற அச்சம் எழுந்தது. ஏதோ தவறு செய்யப் போவதைப் போன்ற உணர்வும் பிறந்தது.

மனம் குழம்பிய நிலை.

அப்போது "பட்" டென்ற ஒலி; "பளிச்" சென்ற ஒளி!

லைட்டரைத் தட்டி ஒருவர் வெண்சுருட்டுப் பற்றவைத்தார்.

அந்த வெளிச்சத்தில் இரவில் பூத்திருந்த அல்லிப் பூக்களும், தண்டுகளும் நன்கு தெரிந்தன.

அந்தப் பூக்களை நெருங்கி உற்று நோக்கிப் பேரம் பேசியவர்கள் வெளிச்சத்தைக் கண்டு பயந்து தலை குனிந்தனர். அவ்வெளிச்சம் சிலரின் பகல் வேடத்தையும் கலைத்தது.

"யாரும் பார்த்துவிட்டால்! பலரும்பலவாறு பேசுவார்களே! தங்கைக்கு நல்ல இடமாக மாப்பிள்ளை பார்த்துக்கொண்டு இருக்கும் இந்தச் சமயத்தில் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யும் அவர் காதில் விழுந்தால் என்ன நினைப்பார்! ச்சே!"

காற்று பலமாக வீசியது.

மாணிக்கத்தின் மனத்தில் மட்டும் வீசவில்லை; வெளியிலும் வீசியது. கூடவே "சட சட" என்று மழைத் துளியும் விழுந்தது. கூட்டம் விழுந்தடித்து ஓடியது.

நல்ல வேளை, பள்ளத்தில் விழவில்லை.

மாணிக்கம் ஐந்தடியில் ஓடிப்போய் நின்றான்.

மழை கொட்டியது.

சாலைகளிலும், சாக்கடைகளிலும் படிந்திருந்த அழுக்கை அடித்துக்கொண்டு சென்றது.

பள்ளங்களில் விழுந்து எழுந்தவர்களும், விழவிருந்தவர்களும் ஒதுங்கி நின்றனர்.


மழைவிட்டதும் மாணிக்கம் வீட்டிற்குச் சென்றான்.

எழுவகைப் பூக்கள் உள்ள பொட்டலத்தைப் பிரித்தான். பூக்கள் அவனைப் பார்த்துச் சிரித்தன. அவன் அப்பூக்களைப் பார்த்துச் சிரித்தபடி மீண்டும் பொதிந்து வைத்தான்.

மறுநாள் கடைக்குப் போகும்போது எடுத்துச் சென்றிருந்த அப்பூக்களை நீர் தெளித்து மேசை மீது வைத்தான், யாருடைய பாவத்தை யாகிலும் போக்கப் பயன்படும் என்று!

தமிழறிவுப் போட்டி
பரிசு $100

தமிழறிவுப் போட்டி — 11



இறுதி நாள் 10.2.1978

பெயர். ______________________

அடையாள அட்டை எண். ______________________

முகவரி ______________________

____

____

கையொப்பம்.

இடமிருந்து வலம்:-

1. காக்கும் கடவுளின் நிறம் கொண்ட ஐம்பூதங்களில் ஒன்று.
2. இந்தப் பிராணியின் பெயருக்குள் மற்றொரு பிராணி ஒளிந்துள்ளது.
3. முதுமை ஏற ஏற இது குறையும்.
5. மற்றொன்றின் துணையின்றி இதனால் வாழ முடியாது.
6. இது இல்லாத மனிதனும் உண்டோ?
7. மூவேந்தர்களில் ஒருவர்.

மேலிருந்து கீழ்:-

1. ஒரு மரம்.
2. இவரையும் கடவுளாக நினைத்து வழிபடுவோர் உண்டு.
4. இருபதாம் நூற்றாண்டின் அரசர்கள் கைவசம் இருக்கும் ஆயுதம்.
5. பெரும்பாலும் இரவில்தான் இது வெளியே வரும்.

விதிகள்:

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக்கொண்டு கட்டங்களை நிரப்பவேண்டும்.
2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.
3. அழித்தல், அடித்தல், திருத்தல் கூடாது. "பால் பாயிண்ட்" பேனாவால் எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.
4. சரியான விடை எழுதியவர் வெ. 100 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.
5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ. 10 வழங்கப்படும். ஒரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ. 10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சிய வெ. 90 அடுத்த போட்டிக்கான பரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.
6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப்படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
7. கூப்பனில் எழுதப்படும் பெயர், அவரவரின் அடையாளக் கார்டில் உள்ளதன்படியே எழுதப்படவேண்டும்.
8. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.
9. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
10. இறுதிநாள் 10- 2-1978.
11. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-

"புதிய சமுதாயம்"

131, Jalan Tuanku
Abdul Rahman, [2nd Floor]
P.O. Box 2066 Kuala Lumpur

இளைய சமுதாயத்துக்குத் தொண்டாற்றும் ஏடு

டைரக்டர். எஸ்.பி. முத்துராமன்



"புதிய சமுதாயம்" பத்திரிகையைப் பார்த்து படித்து மிக மகிழ்ந்தேன். ஏனென்றால், அதன் ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியம் அவர்கள் எங்கள் குடும்ப நண்பர். நான் பள்ளியில் படித்த காலத்தில் அவர் நடத்திய "பொன்னி" பத்திரிகையின் வாசகன். இன்றைய புதுமைப் பத்திரிகைகளின் மூலம் "பொன்னி" என்று கூறினால் தவறில்லை. பொன்னியால் உருவாக்கப்பட்ட பாரதிதாசன் பரம்பரை, கவிஞர்கள், கதாசிரியர்கள், ஓவியர்கள் ஏராளம்! ஏராளம்! அவர்கள் அனைவரும் இன்றைய தமிழகத்தில் சிறப்பான இடத்தை வகிக்கிறார்கள்.

"பொன்னி" இதழ் இன்று வருவதில்லையென்றாலும், அது நடைபோட்ட அழகும், அது படைத்த சரித்திரங்களும் இன்றும் பசுமையாக இருக்கின்றன.

அதனைப் படைத்த இலக்கியக் கர்த்தர்களான திரு முருகு சுப்பிரமணியம் அவர்களுக்கும், பெரியண்-ணன் அவர்களுக்கும் தமிழகத்தின் பத்திரிகை உலகில் சிறப்பான இடமுண்டு.

இந்த அளவு சரித்திரம் படைத்த திரு. முருகு சுப்பிரமணியம் அவர்கள், சிங்கப்பூர், மலேசியாவில் பல்லாண்டு எழுத்தாளராகப் புகழ் பெற்று, இன்று "புதிய சமுதாயம்" என்ற பத்திரிகையைத் துவங்கியிருக்கிறார்கள். பத்திரிகையின் பெயரிலேயே அவரின் வேகம் தெரிகிறது. இளைய சமுதாயத்துக்கு "புதிய சமுதாயம்" தொண்டாற்றப் போகிறது என்பதைக் கூறாமல் கூறுகிறார். அவர் எழுத்தில் புதுமைகள், கருத்தில் ஆழம், அமைப்பில் அழகு அத்தனையும் அமைந்திருக்கின்றன "பொன்னி" புதுக்கோலம் கொண்டு "புதிய சமுதாயம்" என்ற பெயரில் வருகிறது. அது வளர, வாழ வாழ்த்துகிறேன்.


புதிய சமுதாயத்தின் மூலம் மலேசியா, சிங்கப்பூர் மக்களை சந்திப்பதில் பெருமை கொள்ளுகிறேன. தமிழ்த் திரை உலகம் சரிந்த நிலையிலிருந்து நிமிரத் தொடங்கியிருக்கிறது. படங்கள் ஓடத் துவங்கியிருக்கின்றன. தமிழர்கள் தமிழ்ப் படத்தையும் பார்க்கத் துவங்கியிருக்கிறார்கள். கதைகளில் மாற்றமும், நடிப்பில் இயற்கையும், ஒளிப்பதிவில் மாறுதலும், இசையில் இனிமையும், இன்றைய சமுதாயத்திற்குத் தேவை என்பதை ஓரளவு புரிந்துகொண்டுவிட்டோம். அவர்கள் எங்களை விட்டாலும், நாங்கள் அவர்களை விடவில்லை (விட முடியாது) அவர்கள் எண்ணத்தை புதிய கோணத்தில் சொல்லி வெற்றி பெற முயற்சிக்கிறோம்.

கதையில் புதுமை இருந்தால், மற்றதில் தானே புதுமை வந்து சேர்ந்துவிடும். சட்டியில் இருந்தால் அகப்பையில் வந்து விடுமல்லவா? அதனால்தான் இன்று கதையைத் தேடுவதில் முழு கவனம் செலுத்துகிறோம்.

நடிகர்களைப் பொறுத்தளவு திறமை உள்ள திலகங்கள், கலைஞர்கள் நம்மிடம் உண்டு. திறமை உள்ள புதிய நடிகர்கள் வருவதும் திரை உலகுக்கு நல்லதே!

தொழில் நுணுக்கக் கலைஞர்களைப் பொறுத்தளவு எதையும் செய்து காட்டக்கூடிய வல்லவர்கள், வல்லுனர்கள் இங்கு இருக்கிறார்கள்! வசதி கொடுத்து வாய்ப்பளித்தால், சாதனை புரிந்து காட்டுவார்கள்.

நிறைய எழுத ஆசை. அடுத்து எழுதுவேன் என்று கூறி, வெளிநாட்டில் உள்ள உங்களுக்கு எங்கள் குழுவின் சார்பில் அன்பான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



'பாப்பா! நீ படவுலகுக்குப் புதுசு...
நான் பழைய காலத்து ஆளு...
என்கிட்டேயே மோதப் பார்க்கிறியே!'

என்று ஸ்ரீதேவியிடம் கூறுகிறாரோ ராஜசுலோசனா (திரை: "காயத்ரி")

பால்மரக் காட்டினிலே

அகிலன்

20. பங்கோர் தீவில்...

ஈப்போ ஓட்டலில் இரண்டு மணிநேரம்கூடச் சரியாக அவர்கள் தங்கவில்லை. அவர்கள் புறப்பட்டபோது ஓட்டலின் பணியாள் வந்து மதுப்புட்டிகளில் குறைந்திருந்த பானங்களின் அளவைக் கணக்கெடுத்துக்கொண்டான். தங்கியது, சாப்பிட்டது, குடித்தது எல்லாவற்றுக்குமாகச் சேர்த்து எழுபது வெள்ளிக்குமேல் "பில்" வந்தது. கொடுத்துவிட்டு ராதாவுடன் காருக்கு வந்தான் முருகன்.

எதையோ நினைத்துக்கொண்டு இந்த ஓட்டலுக்கு ஏற்பாடு செய்திருந்தான் அவன். இதற்குப் பதிலாக ஈப்போவில் எங்காவது ஒரு சாப்பாட்டுக் கடையில் சாப்பிட்டிருக்கலாம். மரத்தடியில் காரை நிறுத்திக் காரில் இருந்தபடியே சற்று ஓய்வெடுத்துக் கொண்டிருக்கலாம். ஐந்து வெள்ளிகூடச் செலவாகியிருக்காது.

தேனிலவுக்காக ராதாவின் அப்பா அவனுக்கு ஆயிரம் வெள்ளி கொடுத்திருந்தார். தானும் வசதியுள்ளவன் என்று காட்டிக்கொள்வதற்காக ஓரிடத்தில் ஆயிரம் வெள்ளி கடன் வாங்கியிருந்தான் முருகன். கார் மட்டும் ராதாவின் அப்பாவால் அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கப்பட்டது.

வழியில் சாலையோரங்களில் மலாய் மக்கள் வாழும் கிராமங்களான கம்பங்கள் சில குறுக்கிட்டன. தங்கள் கிராமங்களில் விளைந்த பழங்களைத் தெருவோரத்துக் கடைகளில் கொண்டு வந்து வைத்து அவர்கள் விற்பனை செய்தார்கள். கூரை வேய்ந்த பெட்டிக் கடைகளில் ரம்புத்தான், மங்குஸ்தின், டொரியான் முதலிய பழங்கள் ஏராளமாய்க் காணப்பட்டன.

ரம்புத்தான் பழம் என்றால் ராதாவுக்கு உயிர். பசுமையும் ரத்தச் சிவப்பும் கலந்த வெல்வெட் போன்ற தோலால் மூடப்பட்ட பழம் அது. கோழி முட்டையின் வடிவத்தில் ஒரு கொத்தில் பத்துப் பதினைந்து பழங்கள் இலைகளினூடே காணப்படும். கடைகளில் அவற்றைக் கொத்துக் கொத்தாகத் தொங்கவிட்டிருந்த காட்சி கண்கவரும் காட்சியாக இருந்தது.

ஒரு கடையினருகில் காரை நிறுத்தி ஐந்தாறு கொத்துக்களை வாங்கி ராதாவிடம் கொடுத்தான் முருகன். ராதாவும் மறுக்காமல் அவற்றை வாங்கிக்கொண்டாள். கார் தொடர்ந்து புறப்பட்டது. மேலே உள்ள வெல்வெட் போன்ற சதைப் பகுதியை நகத்தால் கீறி எளிதில் உள்ளே நுங்கு போல் காட்சியளிக்கும் சுளையை எடுத்து விடலாம். வாயில் போட்டால் தன்னால் கரைந்துவிடும். ஒருவகையான நறுமணமும் இனிய சுவையும் கொண்ட பழம் அது. ராதா இயந்திர கதியில் பழங்களைக் கீறிச் சாப்பிட்டுக்கொண்டே வந்தாள். தனக்கும் அவள் கீறிக்கொடுக்க வேண்டுமென அவன் எதிர்பார்த்தான். அவன் காரோட்டிக்கொண்டு வந்ததால், பழத்தின் சுளையை எடுத்து அவனுடைய வாயில்தான் அவள் போடவேண்டும்.

"எனக்கும் கொஞ்சம் ரம்புத்தான் தர்றியா?" என்று கேட்டான் முருகன்.

எப்படி அதைக் கொடுக்க வேண்டுமென்று அவன் எதிர்பார்க்கிறான் என்பது ராதாவுக்குத் தெரியாமல் இல்லை. அதைப் புரிந்து கொள்ளாதவள்போல் ஒரு கொத்துப் பழத்தை எடுத்து முகத்துக்கு எதிரே நீட்டினாள். "பழத்தைச் சாப்பிட்டுவிட்டு அப்புறம் கார் ஓட்டுங்களேன்! இல்லை, நான் கொஞ்ச நேரம் கார் ஓட்டட்டுமா?"

அவள் கொடுத்ததை இடது கரத்தால் வாங்கி ஒரு பக்கமாக வைத்து விட்டு முன் போலவே அவன் காரை ஓட்டிவந்தான். அவளிடம் அதற்குமேல் எதுவுமே அவன் பேசவில்லை. "இப்படி இவ திடீர்னு மாறிப் போனதுக்கு என்ன காரணம்? என்னோட பிறப்பு வளர்ப்பைப்பத்தி யாரும் இவகிட்ட சொல்லியிருப்பார்களா? அதனாலே தான் எஸ்டேட்டுக்குப் போகணும்னு வீம்பு பண்ணினாளோ?" முருகன் தனக்குள் இப்படி எதை எதையோ எண்ணிக் குழம்பலானான். கல்யாணத்துக்கு முன்பு வரையிலும் அவனுடைய பார்வையில், பேச்சில், பழக்கத்தில், ஸ்பரிசத்தில் மெழுகாய் உருகிப் போய்க் கொண்டிருந்த பெண் அவள். இப்போது திடீரென்று அவளுக்கு என்ன வந்து விட்டது?

பங்கோர்த் தீவுக்கு எதிரில் இருந்த கடற்கரைச் சிறு நகரத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். படகுத் துறையை ஒட்டியிருந்த விடுதியில் சொல்லிக் காரை ஒப்படைத்தார்கள். படகுத்துறைக்கு வந்து அங்கிருந்த விசைப்படகில் ஏறிக்கொண்டார்கள். இருபத்தைந்து முப்பது பேர் ஏறக்கூடிய அந்தப் படகில் பத்துப் பதினைந்து பேர்களே காணப்பட்டனர். அவர்களில் உல்லாசப் பயணிகள் சிலர். தீவைச் சேர்ந்த கிராமவாசிகள் சிலர்.

மாலை நேரத்து மஞ்சள் வெயில் கடலெங்கும் பொன்னை உருக்கி வழிந்தோட விட்டிருந்தது. தொலைவில் பெரியதொரு பூங்காவைப் போல் காட்சியளித்தது தீவு. மின் விசைப் படகும் கரையை விட்டுப் புறப்பட்டது. அவர்களோடு பயணம் செய்தவர்களில் அவர்களைப்போலவே இளம் சீனத் தம்பதியர் இருவர் இருந்தார்கள். ஒருவேளை அவர்களும் தங்கள் தேனிலவைக் கொண்டாடவே அந்தத் தீவுக்குப் புறப்பட்டிருக்கலாம். சீன இளைஞன் அந்தப் பெண்ணின் கழுத்தில் கையைப் போட்டு வளைத்துக் கொண்டு தன் காதலிக்கு அந்தத் தீவைச் சுட்டிக் காட்டி மகிழ்ந்தான்.

விசைப்படகு விநோதமான ஒலி எழுப்பிக் கொண்டே கடலைக் கிழித்தபடி மேலே பாய்ந்து கொண்டிருந்தது. குன்றுகள் சூழ்ந்த அந்தத் தீவு கணத்துக்குக் கணம் அவர்களை நோக்கி நெருங்கி வருவதுபோல் தோன்றியது. முதலில் பசுமை குலுங்கும் குன்றுகள் மட்டிலும் தென்பட்டன. அடுத்து அங்கங்கே உள்ள வீடுகளின் கூரைகள் தோன்றின. அதை அடுத்து அந்தத் தீவின் கடற்கரையையொட்டியிருந்த சின்னஞ்சிறு மர வீடுகள் காட்சியளித்தன.

கரையை ஒட்டிய கடலுக்குள்ளே மரங்களை நட்டு, அவற்றுக்கு மேல் பலகையடித்துப் பரண் வீடுகள் கட்டியிருந்தார்கள். கூரை வேயப் பெற்ற சின்னஞ்சிறு வீடுகள்; அழகழகான வீடுகள். கடல் அலைகள் மீது அந்த வீடுகள் வரிசை வரிசையாக மிதப்பது போல் தோன்றியது.

முருகன் ராதாவைக் கட்டாயப்படுத்திப் பேச்சுக்கு இழுத்தான். அளவு கடந்த உற்சாகத்தோடு பேசிக்கொண்டே வந்தான். படகின் விளிம்பில் உட்கார்ந்துகொண்டிருந்த ராதாவின் கேசமும் மேலாடையும் கடற்காற்றில் பறந்த காட்சி அவனுக்கு அற்புதமாக இருந்தது. ஆனாலும் அவள் உயிரற்ற கற்சிலை போல் எவ்வித உணர்ச்சிப் பிரதிபலிப்பும் காட்டாமல் வந்ததைக் கண்டபோது, அவளை அப்படியே பிடித்துக் கடலுக்குள் தள்ளிவிடலாமா என்றுகூட அவனுக்குத் தோன்றியது.

தீவு நெருங்கிக்கொண்டிருந்தது. உல்லாசப் பயணிகள் சிலர் அங்கே அடிக்கடி வந்துபோய்க் கொண்டிருந்தாலும் அந்தத் தீவு இன்னும் தன்னுடைய கன்னித்தன்மை கெடாமல்தான் இருந்தது. மலாய் மக்களான மீனவர்கள் வசிக்கும் கிராமம் அது. பயணிகள் தங்குவதற்காக

ஒரு பெரிய ஓட்டலை மட்டும் அங்கே கட்டியிருந்தார்கள். பயணிகளின் வசதிகளுக்காகச் சில கடைகள் அங்கே திறக்கப்பட்டிருந்தன. மற்றப்படி இதர நகரங்களின் செயற்கை நாகரிகம் அதன் அழகைப் பாழ்படுத்தவில்லை.

அங்கே வரவேண்டுமென்று ஆசைப்பட்டவள் முதலில் ராதாதான். முன்பு ஒருமுறை தன் தந்தையோடு அவள் அங்கு வந்ததிலிருந்து அதன் நினைவு அவளைவிட்டு அகலவே இல்லை. முருகனோடு அங்கு வந்து எப்படி எப்படியெல்லாமோ பொழுதைக் கழிக்க வேண்டுமென்று அவள் ஆசைப்பட்டிருக்கிருள். ஆனால் ஏனோ அந்த ஆசை கைகூடிய சமயத்தில் அவளுக்கு இந்த உலகத்தின் மீதே வெறுப்பு ஏற்பட்டுவிட்டது.

அவளுடைய மனத்தின் ஒரு மூலையில் "அந்தப் பயணத்தை வீணாக்கிவிடக்கூடாது" என்ற எண்ணம் இல்லாமல் இல்லை. ஆனால் அந்த எண்ணம் ஒரு மூலையில் மட்டுந்தான் இருந்ததே தவிர முன் போல அது அவள் இதயம் முழுவதும் நிரம்பி வழியவில்லை.

அந்தத் தீவையே வெறித்துப் பார்த்துக்கொண்டு வந்தவளின் கண்கள் கலங்கிப் போயிருந்தன. "இங்கே வராமலேகூட இருந்திருக்கலாம்" என்று நினைக்கலானாள்.

படகுத் துறை வந்தது. மற்றவர்களோடு சேர்ந்து அவர்களும் கரைக்கு வந்தார்கள். ஓட்டலின் பெயரைச் சொல்லி வழிகேட்டுக் கொண்டு நடந்தான் முருகன். ராதா அவனை மௌனமாகப் பின்பற்றினாள். ஓட்டல் மட்டிலும் எல்லா வசதிகளும் நிறைந்த ஓட்டலாக இருந்தது. தங்களுக்கென்று முன்னதாகவே ஒதுக்கியிருந்த அறைக்கு அவர்கள் சென்றார்கள். கைகால் முகம் கழுவிக்கொண்டு காப்பி வரவழைத்துக்குடித்தார்கள். ஓட்டலுக்குப் பின்புறத்திலேயே கடற்கரை பரந்து விரிந்துகிடந்தது. கடற்கரையை ஒட்டினாற்போல் மரங்களும், புதர்களும், குன்றுகளும் மாலை ஒளியில் மயங்கிக்கொண்டிருந்தன.

"காலாறக் கொஞ்சம் வெளியிலே போய் நடந்திட்டு வரலாமா?" என்று ராதாவிடம் கேட்டான் முருகன். பதில் அளிக்காமல் அவள் புறப்பட்டாள்.

வாதுமை மரக்கூட்டம் அடர்ந்த கடற்கரையில் சிறிது தூரம் அவர்கள் நடந்தார்கள். கடற்கரை மணலெங்கும் வாதுமைக் கொட்டைகள் விழுந்து கிடந்தன. யாரும் அவற்றை அங்கே தேடுவார் இல்லை.

"நாம பாதம் அல்வா சாப்பிடறமில்ல, அதுதான் இது!" என்று ஒரு கொட்டையை உடைத்து அதற்குள் இருந்த பருப்பை எடுத்து அவளிடம் நீட்டினான். சாப்பிட்டுப் பார்த்தாள். பாதாம் பருப்புத்தான் அது. அந்தத் தீவில் வசித்த மக்களுக்கு இன்னும் அதன் பயனே தெரியாது போலும்!

அங்கங்கே உட்புறத்தில் மீனவர்களின் பரண் வீடுகள் தெரிந்தன. தரையில் வீடுகள் கட்டினால் மழை நீராலோ அல்லது காட்டு மிருகங்களாலோ தங்களுக்குத் தொல்லை வரக்கூடும் என்று நினைத்து அவர்கள் பலகையால் பரண் அமைத்து வீடுகள் கட்டிக்கொண்டிருந்தார்கள். ஏணிப்படிகள் வழியாகத்தான் அவர்களுடைய வீடுகளுக்குள் போக முடியும்.

இன்னும் சற்றே தாண்டி நடந்த போது அவர்கள் கண்ணெதிரே ஒரு காதற்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. புதர்களும் செடி கொடிகளும் மண்டிக் கிடந்த மனித சஞ்சாரம் இல்லாத ஒரு பகுதியில் அவர்களோடு பயணம் செய்த சீனத் தம்பதியர் ஓடிப் பிடித்துப் பாய்ச்சல் காட்டிக்கொண்டிருந்தார்கள். முருகனும் ராதாவும் தொலைவில் வருவதை அவர்கள் கவனிக்கவில்லை. பிறகு சட்டென்று இருவரும் ஒரு புதருக்குள் மறைந்து விட்டார்கள். காட்டுப் பறவைகளைப் போலவோ, வன விலங்குகளைப் போலவோ, ஆதி மனிதர்களான ஆதாம் ஏவாள் போலவோ அவர்கள் தங்கள் தனிமை இன்பத்துக்கு அந்த இடத்தை ஏற்றதாக நினைத்திருக்கலாம்.

முருகன் சுற்றுமுற்றும் பார்த்தான். ஆள் அரவமே இல்லாத இடம் அது. ஆளுயரத்துக்குமேல் மண்டிக் கிடந்த புதர் ஒன்றின் இடைவெளியில், இயற்கை, அழகியதோர் பசும்புல் மெத்தையை அமைத்திருந்தது.

"அவங்களைப் பார்க்கிறப்ப ஆதாமும் ஏவாளும் இப்படித்தான் இருந்திருப்பாங்கன்னு நினைக்கத் தோணுது. நாமும் ஏன் இப்படி? நீ என்ன சொல்றே ராதா?"" கொஞ்சுவது போல் கேட்டான் முருகன். ராதாவுக்குள்ளேயும் அந்தச் சூழ்நிலை ஆசை அலைகளைப் பொங்கி வீசத்தான் செய்தது. அவளால் மறக்கவும் முடியாத மறுக்கவும் முடியாத - வாழ்க்கையில் எப்போதோ நேரக்கூடிய கட்டந்தான் அது. ஆனால் அவள் சட்டென்று எதையோ நினைத்துக்கொண்டு அவனை வெறித்துப் பார்த்தாள்.

"என்ன ராதா?"

"தோட்டக்காட்டிலே இப்படித்தான் கூலிங்க புரளுவாங்கன்னு நான் கேள்விப்பட்டிருக்கேன்."

ஆயிரம் சவுக்குகள் கொண்டு அவள் அவனை அடித்தால் அவனுக்கு எப்படியிருக்குமோ அப்படி இருந்தது முருகனுக்கு. வெலவெலத்துப் போனான் அவன். விரைவிலேயே அவர்கள் இருவரும் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளாமல் ஓட்டலுக்குத் திரும்பினார்கள். அவளுக்குச் சாப்பிடப் பிடிக்கவில்லை. அவன் மட்டும் சாப்பிட்டு முடித்தான்.

நாற்காலியில் சாய்ந்தபடி மேற்கூரையைப் பார்த்துக்கொண்டிருந்தாள் ராதா. பார்வை மேற்கூரையிலும் பதியவில்லை. எங்கோ சூனியத்தைத் துளைக்க முயன்றுகொண்டிருந்தது.

"ராதா, நான் கேக்கறேன். நீ உண்மையைச் சொல்லமுடியுமா? உனக்குத் திடீர்னு இப்ப என்ன வந்திடுச்சு? ஏன் இப்படி மாறிப் போயிட்டே?"

மேலிருந்த விழிகளைத் தாழ்த்தி அவன் கண்களைச் சந்தித்தாள் ராதா. அந்தப் பார்வையை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

"என்ன ராதா இது?"

"நீங்க எனக்கு உண்மையைச் சொல்லமுடியுமா? நான் கேட்கிற



கேள்விக்கு நீங்க நேரடியான பதிலைச் சொல்றிங்களா? நீங்க யாரோட பிள்ளை? உங்க அப்பாவுக்கு, அம்மாவுக்கு, தம்பிக்கு, தங்கச்சிக்கு எஸ்டேட்டிலே என்ன வேலை?"

நிலைகுலைந்து போய்த் தலையைக் கீழே தொங்கவிட்டுக்கொண்டான் முருகன். பதில் பேச அவனால் முடியவில்லை.

"சொல்லுங்க!" என்று கத்தினாள் ராதா.

"என் தம்பி பாலனைத் தவிர மத்த எல்லாரும் கூலி வேலை தான் செய்யறாங்க!"

"ஏன் இதை எங்கிட்ட நீங்க முன்னாடியே சொல்லலே? எதுக்காக எங்கிட்டே உண்மையை மறைச்சுப் பொய் பேசினீங்க?"

"..............."

"சொல்லுங்க!"

"சொன்னா நீ எங்கே என்னோடே பழகறதை நிறுத்திடுவியோன்னு..."

"நான் உண்மையைச் சொல்லட்டுமா? நீங்க என்னோடை அழகுக்காகவோ, குணத்துக்காகவோ, வயசுக்காகவோ என்னைக் கல்யாணம் செய்துக்கலே. எங்கப்பாவோட பணந்தான் உங்க கண்ணை உறுத்தியிருக்கு. எங்கிட்டே பொய் பேசி என்னை ஏமாத்திட்டீங்க; என்னைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிட்டீங்க; என்னோடை வாழ்க்கையையே பாழடிச்சிட்டீங்க."

"உண்மையிலேயே நான் உன்னை..."

உண்மைங்கிற வார்த்தையை இனிமே நீங்க உங்க வாயாலே பேச வேண்டாம். பொய், பொய்; பொய்! அத்தனையும் பொய்! உங்களோட உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைவரையில பொய். ஒரு பொய்யை மறைக்க இதுவரையிலே எங்கிட்ட ஆயிரம் பொய் சொல்லியிருப்பிங்க. கல்யாணத்துக்கு முதல் நாள்தான் எனக்கு உங்க ரகசியமெல்லாம் தெரிஞ்சுது. தெரிஞ்சு என்ன செய்ய? அதுக்கு முன்னாலே நம்ப ரகசியம் ஊரறிஞ்ச ரகசியமாப் போயிடுச்சே? நாமதான் எத்தனையோ தேனிலவைக் கொண்டாடிட்டமே?"

"நடந்ததுக்காக என்னை மன்னிச்சுக்க ராதா!"

"எங்கிட்ட இனிமேலும் நாடகம் நடிக்காதிங்க. உண்மை அப்பவே தெரிஞ்சிருந்தால் ஒருவேளை உங்களை நான் கல்யாணம் செய்துக்கச் சம்மதிச்சிருப்பேன். உங்களை ஓர் ஆண் பிள்ளைன்னு மதிச்சிருப்பேன். இப்ப நீங்க ஒரு ஏமாத்துக்காரர்; வஞ்சகர்; சூழ்ச்சிக்காரர்!"



"ர்ாதா!"

"கழுத்திலே தாலி விழுந்தப்பறம் தெரிஞ்சால் தெரிஞ்சிட்டுப் போகுதுங்கற துணிச்சல் தானே உங்களுக்கு? உங்களாலேதான் என்னை ஏமாத்த முடியும்னு பார்த்திங்களா?"

ராதாவின் காலடியில் உட்கார்ந்து அவள் பாதங்களைப் பற்றப் போனான் முருகன். சட்டென்று அவள் அங்கிருந்து விலகிக் கொண்டாள்.

"தயவு செய்து என்னை நீங்க தொடவேண்டாம். அதையும் மீறி நீங்க என்னைத் தொட்டீங்க, அப்பறம் நான் எப்படி நடந்துக்குவேன்னு சொல்ல முடியாது."

"அப்படீன்னா, நாம எதுக்காக இங்கே வந்தோம்?"

"இப்பவே "போட்" இருந்தால் நாம திரும்பிப் போயிடலாம்; புறப்படுங்க."

"இப்போ இருட்டிப் போச்சு ராதா; இனிமேல் காலையிலேதான் படகு விடுவாங்க."

"சரி, காலையிலேதான் திரும்பலாம்; ஊருக்குப் போன பிறகுதான் நாம என்ன செய்யறதுங்கிறதை முடிவு செய்யணும். அதுவரையிலே எங்கிட்ட நெருப்போட பழகருப்பிலே நீங்க பழகக் கத்துக்குங்க. கிட்ட நெருங்கிடாதீங்க."

முருகன் பதில் ஏதும் பேசவில்லை. ராதா எழுந்து போய்க் குளிர் பதனப் பெட்டியை வேகமாய்த் திறந்தாள். பிராந்திப் புட்டி ஒன்றை எடுத்து மேசைமீது வைத்துக் கொண்டு அதைக் கண்ணாடிக் கிண்ணத்தில் ஊற்றிக் குடிக்கத் தொடங்கி விட்டாள்.

(தொடரும்)



"என்னிடம் நூற்றுக்கணக்கான புத்தகங்கள் இருக்கின்றன. ஆனால் ஒரு புத்தக அலமாரி கூட இல்லை"

"ஏன்"

"இன்னும் புத்தக அலமாரியை யாரும் இரவல் கொடுக்கவில்லையே!

உலகெங்கும் பளபளக்கும் 'ஸ்டெயின்லெஸ்ஸ்டீல்' பாத்திரங்கள்

சவூதி அரேபியாவின் சுறுசுறுப்பான துறைமுகம் ஜித்தா. பலநாடுகளின் சுற்றுப் பயணிகளும் தொழிலதிபர்களும் சூழும் நகரம். அங்கே ஓர் அழகான ஓட்டல். அதில், அடுத்தடுத்திருந்த அறைகளில் அறிமுகமில்லாத இளைஞர் இருவர் தனித்தனியாகத் தங்கியிருந்தனர்.

ஒருவர் மலேசிய இளைஞர்; மற்றவர் தமிழகத்தைச் சேர்ந்தவர். முன்னவர் தமிழகம் போய்வந்தவர். பின்னவர் மலையகம் வந்துபோனவர். இருவருமே தொழில் வளமுணர்ந்த வல்லுநர்கள். ஆனால், அறிமுகமோ தொடர்போ அவர்களுக்கிடையே இருந்ததில்லை!

தனியாக இருந்த தமிழக இளைஞரின் அறையிலே பேச்சொலி எழுந்தது! மலேசிய இளைஞரின் செவிகளிலே அவ்வொலி பாய்ந்தது! காதைக் கூர்மையாக்கினார்! உள்ளத்திலே எழுந்த களிப்புக் கண்களிலே ஒளியாக வீசியது! அவரைக் கவர்ந்திழுத்த அந்த ஒலி யாது? அமுதத் தமிழ்!

வேற்று நாடான சவூதி அரேபியாவின் ஜித்தாவிலே அமுதூறும் தமிழ் ஒலியா?! தன் காதுகளையே நம்பமுடியவில்லை அவரால்! அறையைவிட்டு விரைந்து வெளியே வந்தார். அதே நேரத்தில் அடுத்த அறையிலிருந்த நண்பர்களும் வெளியே வந்தார்கள்! மொழியால் இணைந்த அவர்களின் விழிகள் உறவாடின! தாங்கள் தமிழர்கள் என்பதை அறிந்து கொண்ட அவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையா இருக்கமுடியும்?

"வெளிநாடுகளில் வியாபார நிமித்தம் பிரயாணம் செய்தபோது, தங்களுக்கேற்பட்ட நினைவிலே நிற்கும் அற்புதமான நிகழ்ச்சிகளில் ஏதேனும் ஒன்றைக் கூறமுடியுமா?" என்ற கேள்வியைப் போட்ட போது, திரு. ராம. பழநியப்பன் கூறிய இனிய செய்திதான் அது.


சிரித்த முகம்; சிவந்த மேனி! சிந்தனைசெறிந்த சுறுசுறுப்பு; செய்கின்ற தொழிலை மேம்படுத்தத் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் திடமான மனம்; செழிப்பான அன்பு! இப்படியே அடுக்கிக் கொண்டு போகலாம்! இத்தனையும் சேர்ந்த மொத்த உருக்கொண்டவர்தான் திரு. ராம. பழநியப்பன்!

ஜித்தாவிலே அவர் சந்தித்த தமிழக இளைஞரும் நமக்கு நன்கு அறிமுகமானவர்தான். தமிழகத்தின் பிரபலமான தொழிலதிபர்களில் ஒருவரான திரு. வி ஜி. பி. சந்தோசம்தான் அவர். அவருடன் தமிழில் பேசி திரு. ராம. பழநியப்பனின் ஆவலைத் தூண்டியவர், ஜித்தாவிலிருக்கும் இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்த ஒரு தமிழன்பராவார். இப்படிப்பட்ட, நெஞ்சில் நிற்கும் நினைவலைகள் ஏற்படுவது மிகவும் அபூர்வந்தானே!

முன்னேறிவரும் மலேசிய நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத் தங்களாலான நல்ல பங்கினை ஆற்றிவரும் நிறுவனங்களில் "லெட்சுமி ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்" நிறுவனமும் ஒன்றாகத் திகழ்கின்றது. அவர்கள் தயாரிக்கும் எவர்சில்வர் பாத்திரங்கள் மிகவும் பிரபலமானவை.

பினாங்கு மாநிலத்தின் தொழிற்பேட்டை பிறை. அங்கேதான், "ஸ்டெயின்லெஸ் புரொடக்ஸ் சென்டிரியான் பெர்ஹாட்" என்ற பெயரைக் கொண்ட லெட்சுமி எவர்சில்வர் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. பல்வேறு சிறப்புச் சலுகைகளுடன் கூடிய முன்னோடி அந்தஸ்தையும் அரசாங்கம் அவர்களுக்கு வழங்கியுள்ளது. இது மலேசிய இந்தியர்களுக்குச் சிறப்பைத் தரக்கூடிய ஒரு தொழிற்சாலையாகும்!

தொழிலில் அனுபவம் நிறைந்த பதின்மர் ஒருங்கிணைந்து உருவாக்கிய தொழி




ராம. பழநியப்பன்

லாகும் இது. இந்த லெட்சுமி எவர்சில்வர் தொழிற்சாலை அமைவதற்கு மூல முதற் காரணமாக இருந்த திரு. சி. ராமனாதன் செட்டியார் புதல்வரான திரு. ராம. பழநியப்பன் தொழிலில் ஈடுபட்டு அதன் நுணுக்கங்களையெல்லாம் நன்கு கற்றுத்தேர்ந்தவராவார். சுமார் 37 வயதைக் கொண்ட அவர், நிர்வாக இயக்குநராக இருந்து தொழிலைக் கவனித்துக் கொள்ளுகிறார் என்பதை அறியும் போது, மலேசிய இளைஞர் சமுதாயமும் மகிழ்ச்சிகொள்ள நிறைய இடமிருக்கின்றது.

மலேசிய மக்களுக்குத் தேவையான பாத்திரங்கள், பொதுவாக வெளிநாடுகளிலிருந்தே வருவதுண்டு. ஆனால் வளர்ந்துவரும் மலேசியாவின் புதிய சமுதாயத்துக்குத் தேவையானவைகளை அங்கிருந்து முழுமையாகப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுக்கொண்டிருந்ததால் லெட்சுமி எவர்சில்வர் தொழிற்சாலை இந்த நாட்டிலே உருவாக்கப்பட்டுள்ளது.

"வெளிநாடுகளிலிருந்து வரும் சாமான்களைக் காட்டிலும், இங்கே தயாரிக்கப்படும் எவர்சில்வர் பாத்திரங்கள் தரத்தில் மிகவும் உயர்ந்தவையாக இருக்கின்றன. விலையும் மலிவாக உள்ளது" என்று திட்டவட்டமாகக் குறிப்பிடும் திரு. ராம. பழநியப்பன், "லெட்சுமி



எவர்சில்வர் பாத்திரங்களை உபயோகிக்கின்றவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. வெளிநாடுகளிலிருந்தும், சரக்கின் தரத்தைப் பாராட்டிக் கடிதங்களும் புதிய ஆர்டர்களும் மேலும்மேலும் வந்து கொண்டிருக்கின்றன" என்று பூரிப்போடு கூறுகின்றார்.

சுமார் இரண்டரை ஆண்டுகளே ஆனாலும்கூட லெட்சுமி எவர்சில்வர் நிறுவனம், அதன் செயலாற்றல்மிக்க நிர்வாகத் திறமையாலும் தொழில்நுட்ப வல்லுநர்கள்— தொழிலாளர்கள் ஆகியோரின் அயராத ஒத்துழைப்பாலும் பெரிதும் முன்னேற்றம் கண்டுவருகிறது.

அந்த நிறுவனம், மலேசியாவுக்குத் தேவையானவற்றை மட்டுமின்றி வெளிநாடுகளுக்குத் தோதான எவர்சில்வர் பாத்திரங்களையும் தயாரித்து ஏற்றுமதி செய்துவருகிறது. அதனால், அந்நிய நாட்டுச் செலாவணியையும் மலேசியாவுக்கு ஈட்டித்தந்து சிறப்பான வளர்ச்சியையும் கண்டுவருகிறது.

லெட்சுமி எவர்சில்வர் பாத்திரங்களின் உற்பத்தி காரணமாகவும், பாத்திரங்களை ஏற்றுமதி செய்வதன் காரணமாகவும் திரு. ராம.பழநியப்பன் இதுவரை உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்று வந்துள்ளார். அவற்றில் ஹாங்காங், தாய்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேசியா, இந்தியா, ஓமான், ஐக்கிய அரபுச் சிற்றரசுகள் எகிப்து, நைஜீரியா போன்ற நாடுகளோடு கென்யா, அடீஸ் அபாபா, சவூதி அரேபியா, லண்டன், குவைத், பாஹ்ரின், தோஹா முதலிய நாடுகளும் குறிப்பிடத்தக்கவை.

இதற்கு முன் ஒருமுறை மத்திய கிழக்கு நாடுகளில் பயணம் மேற்கொண்டபொழுது, லெட்சுமி எவர்சில்வர் பாத்திரங்களை அங்கே அறிமுகப்படுத்திவிட்டு வந்தார் திரு. ராம. பழநியப்பன். அதன் விளைவாக அப்பாத்திரங்களின் உபயோகம் அந்நாடுகளில் விரும்பி வரவேற்கப்பட்டுள்ளது என்பதை அந்நாட்டினர் விடுத்த அழைப்பு உறுதிப்படுத்திவிட்டது. ஆகவே, அவர்களின் அழைப்பினை ஏற்று மீண்டும் அந்நாடுகளில் பயணம் மேற்கொண்டு அதிகப்படியான விற்பனைச் சந்தையை அங்கே உருவாக்கி வந்திருக்கிறார் திரு. பழநியப்பன்.

அனைத்துலக விற்பனைச் சந்தையில், லெட்சுமி எவர்சில்வர் சாமான்கள் தக்கதொரு முத்திரையைப் பதித்து முன்னணியில் நின்றுகொண்டிருப்பது நமக்குக் கிடைத்திருக்கும் பெரிய வெற்றியாகும்.

அழகும் கவர்ச்சியும் பளபளப்பும் தரமும் நிறைந்த தங்களின் பாத்திரங்களை, அவர்கள் புதிய பல உத்திகளைக்கையாண்டு தயாரிக்கின்றார்கள். இந்நாட்டில் வாழும் இந்தியர்கள் மட்டுமன்றி மலாய்க்காரர்கள், சீனர்கள், ஆங்கிலேயர்கள் உட்பட அனைவரும் விரும்பி வாங்கும் விதத்தில் மிக நன்றாகத் தயாரித்துத் தொழிலை விரிவாக்கி வருகின்றார்கள்.

வெளிநாட்டு வியாபாரம் என்றால், அதைச் சுலபமாகவா செய்துவிடமுடிகிறது? பல்வேறு போட்டிகளையும் சிக்கல்களையும் சந்திக்கவேண்டிய நிலையும் லெட்சுமி எவர்சில்வர் நிறுவனத்திற்கு ஏற்படத்தான் செய்கிறது. என்றாலும் பயன்படுத்துவதற்குத் தேவையான தரமும் மலிவும், அழகும் பொலிவும் நிறைந்த நல்ல தயாரிப்புக்களை அவர்கள் வழங்குவதால், அவற்றை எல்லாரும் விரும்பி வாங்கிப் பயனடைகின்றார்கள் என்று குறிப்பிடுகின்றார் திரு. பழநியப்பன்.

இல்லங்களுக்குத் தேவையான எவர்சில்வர் பாத்திரங்கள் மட்டுமல்லாமல், மருத்துவமனைகளுக்குத் தேவையான நூதன மிக்க பாத்திரங்களையும் தயாரித்து விற்பனை செய்துவருவதோடு, இன்னும் புதினமான சாமான்களையும் எவர்சில்வரில் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார்கள்.

சுமார் 90 தொழிலாளர்களைக் கொண்டது லெட்சுமி எவர்சில்வர் நிறுவனம். சுமுகமான உறவு முறைகளின்வழி இணைந்து செயலாக்கம் கண்டுவருகின்ற அவர்கள், தாங்கள் தயாரிக்கும் சாமான்களை நல்ல விளம்பரங்களின் மூலமும், வியாபாரிகள் பொதுமக்கள் ஆகியோரின் அன்பான ஆதரவுடனும் விற்பனைசெய்து சலியாத தங்களின் உழைப்பினால் நாட்டுக்குத் தேவையான நன்மைகளையும் செய்துவருவது மிகவும் பாராட்டுக்குரிய செயலாகும்.

இன்னும் புதிய புதிய கண்டுபிடிப்புக்களைச் செய்து வேலை வாய்ப்புக்களையும் விற்பனைச் சந்தையையும் விரிவாக்கும் ஆர்வம் அவர்களிடம் மண்டிக் கிடக்கின்றது. கனடா, ஆஸ்திரேலியா, ஸ்ரீலங்கா, பிஜி தீவுகள் போன்ற நாட்டினரும் தற்போது ஆர்வத்துடன் தங்களின் எவர்சில்வர் சாமான்களை நிறைய வாங்கிவருவதைக் குறிப்பிட்ட திரு. ராம. பழநியப்பன் "எல்லா நிலைகளிலும் எங்கள் முழு உழைப்பையும் நல்கி முனைந்து செயலாற்றிக் கொண்டிருக்கின்றோம்" என்று களிமேவும் உளத்தோடு கூறுகின்றார். அவருடைய அந்தக் களிப்பு மலேசிய அன்னைக்குப் பொதுவானதல்லவா!

சுறுசுறுப்பும் நிர்வாகத் திறமையும் சலியாத உழைப்பும் ஒரு தொழிலுக்குரிய பிரதான மூலதனங்களாகும். அவை, லெட்சுமி எவர்சில்வர் நிறுவனத்தினரிடம் நிறைவாக இருக்கின்றன. ஆகவே மலேசியா விரும்பும் புதிய சமுதாயத்துக்குத் தேவையான அனைத்தையும் அவர்களால் செய்துகாட்ட முடியும் என்பதே நமது நம்பிக்கை.

—"மகிழ்நன்"

மதிப்புரை

கிழக்காசிய நாடுகளில் தமிழ் மணக்கிறது

பயணங்கள் கல்வி, கலை, அரசியல், வணிகம், பொழுது போக்கு முதலிய பல காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுள் இலக்கியப் பயணம்குறிப்பிடத்தக்க ஒன்று. தாங்கள் மேற்கொண்ட பயணத்தில் பெற்ற அனுபவங்களை இலக்கியப் படைப்பிற்குப் பயன்படுத்திக் கொள்வது ஒருவகை. அவ்வாறல்லாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே இலக்கியப் பயணம் மேற்கொள்வது மற்றொரு வகை. இவ்வகைப் பயணங்கள் நூல் வடிவமும் பெறும்போது, அவை அறிவிற்கும் இலக்கிய இன்பத்திற்கும் மட்டுமல்லாமல் வரலாற்றிற்கும் உரியதாகி விடுகிறது.

"சங்கொலி" ஆசிரியர் திரு. சோலை—இருசன் சில ஆண்டுகளுக்கு முன் மேற்கொண்ட ஒரு பயணம் இவ்வாறு நூல் வடிவம் பெற்றுள்ளது. கிழக்காசிய நாடுகளில் தமிழ் மணக்கிறது" என்ற இலக்கியப் பயண நூல் இவ்வகையில் தமிழகத்திற்கும் சில கிழக்காசிய நாடுகளுக்கும் குறிப்பாக மலேசியாவிற்கும் ஓர் உறவுப் பாலமாக அமைகின்றது என்றே கூறலாம். அங்கும் இங்குமாகச் சில கட்டுரைகளே அல்லாமல் இதுவரை இத்துறையில் ஒரு தனிநூல் உருவாகவில்லை. இந்நிலையில் இம்முயற்சி பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

கடல் கடந்த நாடுகளில் தமிழும், தமிழ்க் கலையும், தமிழ்ப் பண்பாடும் எவ்வாறுள்ளன என்று கண்டறிந்து எழுதுவதையே தம் நோக்கமாக நூலாசிரியர் கொண்டுள்ளார். மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் இந்நோக்கத்தை மனத்திற்கொண்டே அவர் பயணம் செய்துள்ளார் என்பது நூல் முழுக்கவும் நன்கு தெரிகின்றது. எனினும் மலேசியாவைப் பற்றிய குறிப்புக்களே நூலில் பெரும்பகுதி இடத்தைப் பிடித்துள்ளன. இந்நூலில் உள்ள முப்பத்தொரு கட்டுரைகளில் தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய இரு நாடுகளைப் பற்றி ஒவ்வொரு கட்டுரையே உள்ளது. இதற்குக் காரணம் இங்குத் தமிழர்கள் பெருமளவில் வாழ்வதும், தமிழ் இலக்கியம், கலை முதலியன வளர்ந்து வருவதும் எனலாம். தம்மால்முடிந்த அளவு குறிப்புக்களைத் திரட்டி, பெருமுயற்சிஎடுத்து இந்நூலினை ஆசிரியர் வெளிக்கொண்டு வந்துள்ளார். இலக்கியத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களை மட்டுமின்றி, கலை, பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களையும், சமுதாய அரசியல் பணியாளர்களையும், இலக்கிய ஆர்வலர்களையும் கண்டு, அவர்களைப் பற்றிய குறிப்புக்களை ஆசிரியர் தொகுத்துத் தந்துள்ளார். இத்துறையில் அவர் காட்டியுள்ள ஆர்வம் போற்றப்பட வேண்டிய ஒன்று.

கிழக்காசிய நாடுகளில் தமிழ் மணக்கிறது. சோலை-இருசன்: ஸ்ரீ லட்சுமி பிரிண்டர்ஸ், சேலம் விலை $10. கிடைக்குமிடம்: புதிய சமுதாயம், 131, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், அஞ்சல் பெட்டி எண்: 2066, கோலாலம்பூர் 01-08.

இவ்வாறு குறிப்புக்களை மட்டும் நிரலே தொகுத்துத் தரும் ஒன்று "யார்? எவர்?" என்ற வகையில் அமையும் நூலாகவன்றிப் பயண நூலாகி விடாது. இதனைக் கருத்திற்கொண்டு நூலாசிரியர் ஓர் அருமையான உத்தியைப் பயன்படுத்தியுள்ளார். தம் பயண அனுபவங்களைச் சில பக்கங்களில் சுவையாக விளக்கிச் சென்று அதன் பின் அதனோடு தொடர்புடைய சிலரைப் பற்றிய குறிப்புக்களை அவர் தொடர்ந்து தருகிறார். இந்த அமைப்பு முறை, இதனை ஒரு நல்ல பயனுள்ள பயண நூல் ஆக்குகின்றது.

சோலை இருசன் பயணம் மேற்கொண்ட காலம் குறுகியதாயினும், அக்குறுகிய காலத்தில் பலவகைப்பட்ட வாழ்க்கை முறைகளையும் சமுதாய அமைப்பினையும் அவர் கண்டுள்ளார். தமிழர்களை மட்டும் அல்லாமல் பிற இந்தியர்கள், மலாய்க்காரர்கள், சீனர்கள் முதலியோருடைய வாழ்க்கை, பண்பாடு பொருளாதார நிலை ஆகியவற்றையும் அவர் சுவையோடு விளக்கியுள்ளார். "டொரியான் மகிமை ரகசியம்", "சம்சு அரக்கன் பிடியில்", "அந்த லும்பூர் தானா?" ஆகிய கட்டுரைகள் சுவையுடனும் கருத்துடனும் அமைந்துள்ளன. அவருடைய கருத்துக்களை எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதில்லை. ஆனால் அவருடைய பார்வை எங்கெங்கெல்லாம் ஊடுருவியுள்ளது என்பதை நன்கு புரிந்துகொள்ள முடிகின்றது.

நூலின் அமைப்பு சிறந்திருந்தாலும், அளவற்ற அச்சுப் பிழைகள் காணப்படுகின்றன.

இதில் சற்றுக் கவனம் செலுத்தி இருக்கலாம்.

தமிழகத்தில் உள்ள தமிழர்களுக்கு, தாங்கள் காணாத நாடுகளில் தங்கள் மொழியினர் வாழும் பகுதிகளில் சென்று வந்த அனுபவம்; இங்கு வாழ்பவர்க்கோ அறிந்தவற்றைச் சுவையுடன் படிக்கும் அனுபவம்-இவ்விரண்டையும் ஒருங்கே இப்பயண நூல் தருகின்றது. கிழக்காசிய நாடுகளில் தமிழ் மணப்பதைக் கூறும் இந்த நூலும் மணக்கவே செய்கிறது.

'-குன்றன்'



—மதன், பெட்டாலிங்

பிரிவுகள்

"...சசே! என்ன சமுதாயம் இது? பரம்பரை பரம்பரையாகத் தாழ்ந்துபோன இந்தச்சமுதாயத்துக்கு ஏதாவது நல்லதைச் செய்ய ஒரு சிலர் முயற்சி எடுத்துக்கொண்டாலும், அதைக் குட்டிச் சுவரா வளர விடாம தடுப்பதற்கு எத்தனைப் பேரு எதிர்மாற "உழைக்கிறுங்க" இறைவா! இந்தச் சமூகத்திற்கு விமோசனமே கிடையாதா? சொந்தமாக உழைத்து முன்னேறத் தான் தெரியில. அதற்கு வழி காட்டிகளா பந்தம் ஏந்தி முன் செல்றவங்களேயே எரித்திடுறுங்களே! இவ்வளவு சீரழிந்தும் மற்ற சமூகத்தினரின் முன்னேற்றத்தைப் பார்த்து வெட்கப்படாம, ஒரு பெருமூச்சு விட்டுட்டு, பழைய பாதையிலேயே போயிடுறுங்களே! அதற்குப் பரிகாரம் தேடநினைச்சா எத்தனை எதிர்ப்புங்க? எத்தனைப் பிரிவுங்க? இந்தச் சமூகத்திற்கு ஏன் இந்தச சாபக்கேடு?" சுவரில் மாட்டப்பட்ட "ஃபிரேமில்" உள்ள படத்தைப் போல் அந்தச் சன்னலின் ஊடே எதிர்ப்புறம் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் அந்த வட்டார ஆலயத்தின் கோபுரத்தை நோக்கியவாறு ஒருவித இறையுணர்வுடன் தன் உள்ளத்திற்குள் புலம்பிக் கொண்டிருந்தார் கந்தசாமி.

"இறைவா, உன் ஆலயங்களின் கோபுரங்களை உயர்த்தி உள்ளம் பூரிப்பதைப் போல் நம் "சமூகம்" என்ற கோபுரத்தை உயர்த்தித் தலை தூக்கிப் பார்க்கத் தவறிவிட்ட இந்தச் சமுதாயத்திற்கு, நீயாவது ஏதாவது நல்லதைச் செய்யக்கூடாதா?" என்று வேண்டினார் அவர். காலைப் பனியாய்க் கண்களை நீர் முத்துக்கள் மூடிமறைக்க "தெய்வானை நான் இன்னைக்கு ஒரு முக்கியமான கூட்டத்துக்குப் போவணும். வர கொஞ்ச நேரமாகும். நீ என்னை எதிர்பார்த்து பட்டினியா சாப்பிடாமே இருக்காதே. அப்ப நான் போயிட்டு வரட்டுமா?" என்று கூறி மனைவியிடம் விடைபெற்றுக்கொண்டு வாசற்படியைத் தாண்டுவதற்குள் பழனி, அவசர அவசரமாக தான் ஓட்டிவந்த அந்தக்காரின் இயந்திரத்தையும் நிறுத்தாமல் காரின் கதவைத் திறந்தபடியே விட்டுவிட்டு, கந்தசாமியை நோக்கி ஓடி வந்தார்.

"என்ன பழனி! என்ன நடந்தது? ஏன் இந்தப் படபடப்பு? ஏதாவது...?" அவரையும் மீறி கந்தசாமியின் உதடுகளும் இருதயமும் துடித்தன. கண்களின் புருவங்கள் சுருங்கின.

"விஷயத்தைக் கேட்டீங்களா அண்ணே! நம்ப இன்னைக்குப் போடப்போற கூட்டத்துல பெரிய கலாட்டா செய்யப் போறதா ரெண்டு மூணு பிரிவுக்காரங்க கங்கணம் கட்டிக்கிட்டு இருக்காங்களாம்! உங்களைத்தான் இந்த வட்டார சனங்க நிச்சயமா தலைவரா தேர்ந்தெடுப்பாங்க என்பதை நினைச்சு, வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கிட்டிருக்கிற, அந்தப் பழைய புள்ளிங்களோட கீழறுப்பு வேலைதாங்க அண்ணே இது. "அந்த மனுசனுக்கு என்ன தகுதியிருக்கு தலைவரா வர? கையில நாலு காசு இருக்கா? பட்டப்படிப்பு இருக்கா? இல்ல நாலு பெரிய மனுசனுங்களோடு சவகாசம் இருக்கா? என்ன தான் யோக்கியதை இருக்கு?" என்றெல்லாம் காப்பிக்கடையிலும், சாலையோரத்திலேயும் வரிசை பிடிச்சி நிற்கிற "ஸ்டால்களிலும்" உட்கார்ந்து நமக்கு எதிரா பிரச்சாரம் செய்யுறுங்களாம்! இந்த வேலை ஒரு வாரமா நடந்துகிட்டு வரதா நம்ப ஆளுங்க சொன்னுங்க"

கந்தசாமிக்கு நெருங்கிய நண்பனாகவும், செவ்வனே பொதுத்தொண்டு புரிய அவருக்கு வலது கையாகவும் இருந்து சேவையாற்றி வரும் பழனியின் குமுறல்தான் அது.

நாணல்

"நீ கவலைப்படாதே பழனி. இறைவன் ஒருத்தன் இருக்கான். நம்ப ரெண்டு பேருந்தானே வீடு வீடா போயி எல்லார்கிட்டேயும், "இது அரசியல் கட்சியில்ல, இந்த வட்டார சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும், முதியவர்களுக்கும். பயன்படக்கூடிய ஒரு ஒருங்கிப்புணைக் கழகம்னு தெளிவா சொல்லிட்டு வந்தோம். அப்புறம் ஏன் நீ கவலைப்படுற. நம்ப ரெண்டு பேரும் சாதாரண வாத்தியாருங்க. இதுவரைக்கும் நம்பளால தனிப்பட்ட முறையிலே முடிஞ்ச சகல உதவிகளையும் நம்ப ஏழ்மையையும் பொருட்படுத்தாமே செஞ்சுட்டு வந்திருக்கோம். அப்படி செய்யுற உதவிகளைவிட, இப்படி பத்து பேரு சேர்ந்து ஒரு கழகம் அமைச்சி, இன்னும் கொஞ்ச பெரிசா சிறப்பா செஞ்சா ரொம்பவும் பயன்மிக்கதா இருக்குமென்ற நல்லெண்ணத்துலதானே, நாம்ப அரும்பாடு பட்டு இன்னைக்கு சில நல்ல மனிதர்களோட பண உதவியுடன் இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருக்கோம். அப்படியிருக்க, கீழறுப்புச் சக்திகள் நம்பளை என்ன செஞ்சிட முடியும். மக்களுக்கு நம்பளை பற்றித்தான் நல்லா தெரியுமே?"

தன் நாணயமும், நேர்மையும் உண்மையும், தன்னலமற்ற சேவையும் நிச்சயம் வெல்லும் என்ற ஆணித்தரமான முடிவில் அவரின் இதயம் அதிகப் படபடப்பின்றி, எப்பொழுதும் போல் இயங்கிக்கொண்டிருந்தது.

"சரியண்ணே உங்க பேச்சுக்கு மறுப்பேது. நீங்க சொன்ன அந்தத் தெய்வமே வந்து சொல்றதா நான் நினைச்சுக்கிறேன். ஏன் தெரியுமா? இந்த வட்டாரத்திலேயே உங்களைப் போல் தெய்வ பக்தியுள்ளவங்க வேற யாரையும் நான் இதுவரை பார்த்ததில்லண்ணே" பழனியின் உள்ளத்திலும் புயல் ஓய்ந்து அமைதி நிலவியது.

பழனி ஒரு சீன நண்பரிடம் அன்று நடைபெறும் கூட்டத்திற்காக, சில மணி நேரம் காரை இரவல் வாங்கிக் கொண்டு வந்திருந்தார். அந்தக் காரின் இயந்திரம் இன்னும் இயங்கிக் கொண்டுதான் இருந்தது. சட்டென்று இருவரும் "அடடே கார் பெட்ரோல் சும்மா வீணாப்போவுதே" என்று எண்ணியவாறு அவசர அவசரமாகக் காரில் ஏறினர்.

"என்னுங்க, அண்ணே, ஒரு மாதிரியா சோர்ந்து போயி உட்காந்துகிட்டு இருக்கீங்க? ஏதாவது அசம்பாவிதம் நடந்திடப் போவுதுன்னு கவலைப் படுறீங்களா?" தன் நெற்றிக்கு நேரே ஓரடி உயரத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் அந்தச் சிறிய கண்ணாடித் துண்டில் பிரதிபலித்த, கந்தசாமியின் களையற்ற முகத்தை நோக்கியவாறு வினவினர் பழனி.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே! நேத்து ராத்திரி சரியா தூங்கலே. அதான் கண்ணைச் சொருகுது" என்றுகூறிச்சமாளித்தார் கந்தசாமி. பழனி அதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. தனக்குள் புன்னகைத்துக் கொண்டார்.

சமூக மண்டபத்திற்கருகே கார் வந்து நின்றது. கந்தசாமியும் பழனியும் புதுத்தெம்புடன் மண்டபத்திற்குள் நுழைந்தனர். காரணம் எதிர்பார்த்ததற்கு ஒரு படி மேலாகவே கூட்டம் நிறைந்திருந்தது. இந்தக் கூட்டத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்த பிரிவுகளின் ஜம்பம் பலிக்கவில்லையென்று நினைத்து இருவரும் உள்ளம் பூரித்துப் போயினர். கைகூப்பி எல்லோரையும் வரவேற்கும் பாணியில் மேடையில் போய் அமர்ந்தனர்.

இன்னும் ஐந்து நிமிடங்கள் கழித்து, அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி கூட்டத்தைத் துவக்க இருவரும் தயாராக இருந்தனர். நேரமும் கனிந்தது. பழனி வரவேற்புரை ஆற்றிய பிறகு, கந்தசாமியைச் சொற்பொழிவு ஆற்றும்படி கேட்டுக் கொண்டார்.

கந்தசாமி கூட்டத்தைப் பார்த்து ஒரு கணம் பிரமித்துப் போனாலும், இறைவனை நினைத்து, எல்லாம் நல்லபடியாக நடக்கவேண்டுமென்று மனதில் வேண்டிக் கொண்டு தன் உரையைத் தொடங்கினர்.

"எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி, மதிப்பளித்து ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தில் நீங்களெல்லோரும் இப்படி திரண்டு வந்திருப்பதைப் பார்த்து உண்மையிலேயே உள்ளம் நெகிழ்கின்றேன். நாம் இன்று தொடங்கப் போகும் சமூகக் கழகத்தின் சார்பாக உங்கள் எல்லோருக்கும் முன் கூட்டியே என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை இப்படி ஒரு கழகம் இந்த வட்டாரத்தில் அமைக்கப்படவில்லை. ஆகையால் நாம் இன்று உருவாக்கப் போகும் இந்தச் சமூகக் கழகம் எந்தவொரு பிளவுமின்றி, வாழையடி வாழையாக வளர்ந்தோங்க இறைவனை இறைஞ்சுவோம். அடுத்ததாக, இந்தக் கழகம் செவ்வனவே நடைபெற நீங்கள் ஒரு நிர்வாகக் குழுவை தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்." நான்கில் ஒரு பகுதியினர் கை தட்டுகின்றனர்.

பழனி தன் இருக்கையிலிருந்து எழுந்து தற்காலிக தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொண்டார். ஒரு முதியவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரை அழைத்துக் கந்தசாமியின் பக்கத்தில் அமரச் செய்தார் பழனி. பிறகு தலைவர், துணைத்தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகிய ஐந்து பிரத்தியேக உறுப்பினர்களையும், மற்றும் பத்து நிர்வாக உறுப்பினர்களையும், இரண்டு கணக்காய்வாளர்களையும் தேர்ந்தெடுக்கும்படி வேண்டிக் கொண்டு, முதலில் தலைவரைத் தேர்ந்தெடுக்குமாறு கோரினர். தலைவராக நிச்சயம் கந்தசாமி அண்ணனைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். செயலாளராக நிச்சயம் தன்னைத் தான் தேர்ந்தெடுப்பார்கள் என்பதில் பழனிக்குத் துளிகூட சந்தேகமில்லை.

ஒருவர் எழுந்து நின்று "இவ்வளவு நாட்களாக நமக்கு எல்லாவகையிலும் பொதுச் சேவை செய்து, அரும்பாடுபட்டு இந்தக் கூட்டத்திற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்த கந்தசாமி அவர்களைத் தலைவராகவும், பழனி அவர்களை செயலாளராகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுப்போம்" என முன்மொழிந்தார்.

"என்னய்யா மூளையில்லாம பேசுறீங்க. தலைவரா வர ஒரு தனி அந்தஸ்து, படிப்பு, நாலு காசு வேண்டாமா? ஒரு நல்லா படிச்ச மனுசனை, நாலு பெரிய மனுசனுங்களோட பழகத் தெரிஞ்சவராப் பார்த்துத் தேர்ந்தெடுங்கய்யா. அவரைத் தலைவராப் போட்டா, அவரைவிட அதிகமா படிச்ச ஒரு அந்தஸ்து உள்ளவங்க அவருக்குக் கீழே எந்தப் பதவியாவது வகிக்க முன்வருவாங்களா? அப்புறம் படிப்பு வாசனை இல்லாதவங்களைத்தான் நிர்வாகஸ்தர்களா போடணும்" மற்றொரு பிரிவிலிருந்து எழுந்த ஒருவரின் கூக்குரல் அது. "ஆமாம் அவரு



சொல்றதுதான் சரி" மற்ற பிரிவினர்களும் ஒரே உறுதியுடன் ஆமோதிக்கின்றனர்.

கந்தசாமி எந்த விதச் சலனமுமின்றிச் சிலையாக அமர்ந்திருந்தார். ஆனல் அப்படிப்பட்ட பெருந்தன்மை பழனியின் இரத்தத்தில் ஊறவில்லை. அவரின் உதடுகள் விளக்கில் விழுந்த விட்டில் பூச்சியைப் போல் துடித்துக் கொண்டிருந்தன. அவரின் கண்கள் நல்லெண்ணெய்த் துளிகளை விட்டதுபோல் சிவப்பேறிக் கொண்டிருந்தன.

"கிரீச்" நாற்காலியை சட்டென்று இழுத்துத் தள்ளிவிட்டு "இப்படிப் பேசறது உங்களுக்கெல்லாம் நல்லாயிருக்குதா? இந்த வட்டாரத்திலேயே நம்மவர்களுக்குச் சேவை செய்யக் கூடிய சமூகக் கழகம் ஒன்று கூட இல்லையே என்ற குறையைப் போக்கத்தானே. கந்தசாமி அண்ணன் இவ்வளவு கஷ்டப்



பழனியின் கைகள் எப்படி காரின் "ஸ்டியரிங்" கை வலது புறமாகவும் இடதுபுறமாகவும் சுற்றுகிறதோ, அதற்கேற்ற வாறு காரும் திசைமாறாமல் ஓடிக்கொண்டிருந்தது. ஆனால், குறிஞ்சி மலர்களைப்போல் எப்பொழுதாவது தோன்றும் சில சமூகத் தொண்டர்கள் வகுக்கும் நற்பாதையில் செல்லாமல், பிரிவுகள் என்ற விஷக்கிருமிகளால் அவர்களையே கொன்றுவிடுகிறதே இந்தச் சமுதாயம்? காரின் ஸ்டியரிங் கந்தசாமியின் கண்மணிகளில் பிரதிபலித்துக்கொண்டிருக்கும் போது, அவரின் எண்ண அலைகள் முட்டுக்கட்டைகள் என்ற பாறைகளின் மீது மோதி, மீண்டும் நீர்த்துளிகளாகத் தெறித்துச் சிதறிக் கொண்டிருந்தன.

எத்தனையோ சமூகக் கழகங்கள் அந்த வட்டாரத்தில் தோன்றி விண்மீன்களாய் மறைந்துவிட்டன. பதவி, பட்டம், அஸ்தஸ்து, கௌரவம் என்ற கரையான்களால் அரிக்கப்பட்டு இறுதியில் எல்லாமே ஓய்ந்து விடும். சும்மா வீணே கிடக்கும் நிலத்தைக் கொத்தி அதிலுள்ள லாலான்களை அகற்றி, வியர்வை சிந்தி, காய்கறிகளைப் பயிரிட்டு அதை அறுவடை செய்யும் தறுவாயில் அதை ஒரு கூட்டம் கொள்ளையடித்துச் செல்கிறது. "உழைப்பவன் உயரட்டும், நல்லவர்களை, நல்லதை ஆதரிப்போம்" என்று கொஞ்சம் விட்டுக்கொடுத்தால் இந்தச் சமுதாயம் இப்பொழுது எவ்வளவு சீரும்சிறப்புமாயிருக்கும். மூக்குக் கண்ணாடியை உயர்த்தி தன் ஆள்காட்டி விரலாலும், கட்டை விரலாலும் இரண்டு கண்களில் முட்டிக்கொண்டு நிற்கும் நீர்த்துளிகளை ஒரே சமயத்தில் துடைத்துவிட்டுக் கொண்டார் கந்தசாமி.

இன்றைக்கு நடைபெறும் கூட்டமும், அவ்வாறு விழலுக்கிறைத்த நீராகிப் போய்விடுமோ என்று அவரது உள்மனம் புலம்பிக் கொண்டிருந்தது. அதைத்தான் கண்கள் அம்பலமாக்கிக் கொண்டிருந்தன.

தாய்மொழியே எழுதப் படிக்கத் தெரியாமலும், சமயத்தைப் பற்றி சில விழக்காடு கூட அறியாமலும் இருக்கும் வட்டார மக்களுக்குச் சேவை செய்யும் பொருட்டும், ஏழை மாணவர்களுக்கு உதவும் பொருட்டும் சமூகத்தில் நடக்கும் நல்லவை கெட்டவைகளில் பங்குகொள்ளும் பொருட்டும்தான், கந்தசாமியும் பழனியும் இப்படிக் கடந்த சில மாதங்களாக அரும்பாடுபட்டு ஒரு சமூகக் கழகத்தைத் தோற்றுவிக்க இந்தக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள்.

சில வருடங்களாக பொது மக்களுக்கு உதவும் பொருட்டு அங்கு எந்தக் கழகமும் அமைக்கப்படவில்லை. பலர் முயற்சி செய்தும்பாதியிலே விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். தான் எண்ணியபடி இன்று பெரும்பாலோர் ஆதரவில் ஒரு சமூகக் கழகம் அமைக்கப்பட்டுவிட்டால், எதிர்வரும் வெள்ளிக்கிழமை அருகிலுள்ள திருமுருகன் ஆலயத்திற்குச் சென்று, அபிசேகம் செய்து புதிய பட்டாடை போர்த்தி உபயம் செய்ய வேண்டுமென்று மனதிற்குள் வேண்டிக் கொண்டார் கந்தசாமி. அத்துடன் விநாயகருக்குத் தேங்காய் உடைக்கவும் மனம் விரும்பியது. ஆனால் எத்தனை தேங்காய் உடைக்க வேண்டுமென்பதை, தேர்ந்தெடுக்கும் அங்கத்தினர்களின் எண்ணிக்கையைக் கொண்டு கணித்துக் கொள்வோம் என்று தனக்குள் சமாதானப்படுத்திக் கொண்டார்.

பட்டு, இந்த அரிய முயற்சியை எடுத்துக்கிட்டாரு. இப்படிச் சமூகச் சேவை செய்யவே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட அண்ணனைப் போன்றவர்களைத் தேர்ந்தெடுக்காமல், இது வரை இப்படி ஒரு கழகத்தை உருவாக்கிற எண்ணத்தை கனவில் கூட நினைத்துப் பார்க்காதவர்களைத் தேர்ந்தெடுப்பதுல என்னய்யா நியாயம் இருக்குது. கொஞ்சம் முந்தி சொன்னீங்களே நல்லா படிச்சவங்களா, நாலு காசு உள்ளவங்களா, ஒரு அந்தஸ்து உள்ளவங்களா நாலு பெரிய மனுசனுங்களோட பழகத் தெரிஞ்சவங்களா, பார்த்து தலைவரா தேர்ந்தெடுக்கணும்னு, நான்தான் தெரியாமே கேக்குறேன்! அப்படிப்பட்ட தலைவருங்க இதுவரைக்கும் என்னய்யா செஞ்சிக்கிட்டு இருந்தாங்க? அப்படிப் பட்டவங்க நீங்க முன்ன சொன்னீங்களே அந்த நாலு பெரிய மனுசனுங்க அவங்களோட சேர்ந்துக்கிட்டு ஊரைச்சுத்திக்கிட்டு, நம்பளை மறந்திடுவாங்கய்யா?" கந்தசாமி பலமுறை தடுத்தும் பழனி தன் ஆத்திரத்தையெல்லாம் கொட்டித் தீர்த்துக்கொண்டிருந்தார்.

"இங்கப்பாருங்கய்யா! இது பொதுக்கூட்டம். இங்க "மெஜாரிட்டி" தேர்ந்தெடுக்கிற முடிவைத்தான் நாங்க ஏத்துக்குவோம். இப்படி இங்குள்ள பத்து பெரிய மனுசனுங்களை உதறித். தள்ளிபேசறதாலே நீங்க பதவிக்கு வந்திட முடியாது."

"ச்சி யாருக்கய்யா வேணும் உங்கப்பதவி. சமுதாய உணர்வு என்னை அப்படிப் பேசவைக்குதய்யா" பழனி மேலும் காரசாரமாகப் பேசத் தொடங்குமுன் அவர் கையைப்பிடித்துக் கட்டாயமாக இருக்கையில் அமரச் செய்து "மக்கள் விருப்பப்படியே இந்தத் தேர்வு நடக்கட்டும். நமக்கு வேண்டியதெல்லாம் ஒரு சமூகக் கழகம். அதை யார் நடத்தினால்தால் என்ன. நல்லபடி நடந்தால் சரி. நமக்குள் பிளவு வேண்டாம்; பிரிவுகள் வேண்டாம்" சற்றும் கன்னிதானத்தை இழக்காமல் முன்மொழியப்பட்ட பெயர்களைக் கரும்பலகையில் எழுதினார் கந்தசாமி அவரின் பொறுந்தன்மையைக் கண்டு பழனி தலைகுனிந்தார். இப்படிப்பட்ட ஒரு மனிதரைச் சமுதாயம் புறக்கணிக்கிறதே என்ற வேதனையுடன் தன் கைகளைப் பிசைந்தவாறு நாற்காலியில் இருதலைக்கொள்ளி எறும்பைப்போல் துடித்துக் கொண்டிருந்தார் அவர்.

ஒவ்வொரு பிரிவும் ஒருவரின் பெயரை முன்மொழிந்தது. எல்லாம் பெரிய புள்ளிகள். கூட்டத்தில் வாக்குவாதம் எழுந்தது. ஒரே கலாட்டா... அடிதடி. நாற்காலிகள் பறந்தன. "ஐயோ அம்மா...!" என்ற அலறல் ஒரு சிலருக்குக் கடுமையான காயம் சிலர் அவசர அவசரமாகக் காரில் ஏற்றப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். கூட்டம் கலைந்தது. "எல்லாம் அந்த ரெண்டு பேரால் வந்த வினை" என்ற சொற்களைக் கேட்டதும் பழனி கந்தசாமியை விடாப்பிடியாக இழுத்துக் காரில் ஏற்றிக்கொண்டு வீட்டிற்குப் பறந்தார். வழி நெடுகிலும் கந்தசாமியின் இதயத்தில் இரத்தம் கசிந்துகொண்டே வந்தது. இருதய நோயாளியாக இருந்தால் அங்கேயே பிணமாகியிருப்பார்.

இரண்டு நாட்கள் சென்றன. வெள்ளிக்கிழமையும் வந்தது. கந்தசாமி வேண்டிக் கொண்டபடி இன்று கந்தப் பெருமானுக்கு அபிஷேகம் செய்து, பட்டாடை உடுத்தி, அங்கத்தினர்களின் எண்ணிக்கைபடி தேங்காய் உடைக்கும் நாள். ஆனால் அதுதான் கானல் நீராய்ப் போய்விட்டதே! இருப்பினும் கந்தசாமி பழனியை அழைத்துக்கொண்டு ஆலயத்திற்குச் சென்றார். காணிக்கையைச் செலுத்தினார். இருவருக்கும் சேர்த்து இரண்டு தேங்காய்களையும், "சமுதாயம்" என்ற ஒன்றையும் சேர்த்து மூன்று தேங்காய்களாக உடைத்தார்.

வீடு திரும்பும்போது பழனி மெதுவாகக் கேட்டார்: "என்னிடம் சொல்லக்கூடாதா அண்ணே! உங்க வேண்டுதல் நிறைவேறாமல் போயும் ஏன் காணிக்கையைச் செலுத்தினீங்க?"

கந்தசாமி மிகவும் அமைதியாகக் கூறினார்; "நம் சமூகத்தை விடாப்பிடியாகத் தொற்றிக் கொண்டிருக்கும் பிரிவுகள் என்னும் நோய்க்கிருமிகளை ஒழித்து விமோசனம் அளிக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டேன்!"

சாப்பிடுவது எப்படி?

1. ஒரே வஸ்திரம் அணிந்து கொண்டு புசிக்கக் கூடாது.
2. தண்ணீரில் கால்களைக் கழுவி காலில் ஈரம் இருக்கும் போதே புசிக்க வேண்டும். ஈரக் காலுடன் சாப்பிடுகிறவர் தீர்க்காயுளாக இருப்பார்.
3. சந்தியா காலத்தில் சாப்பிடக் கூடாது.
4. கையைத் தரையில் ஊன்றிக் கொண்டு சாப்பிடக் கூடாது.
5. எள் சம்பந்தப்பட்ட பதார்த்தங்களை இரவில் புசிக்கக் கூடாது.
6. அன்னத்தை வயிற்றில் பாதிப் பங்கும், நீர் கால் பங்குமே நிரப்பி கால் பங்கு வாயு சஞ்சரிப்பதற்கு விட வேண்டும்.
7. ஆயுளை விரும்புகின்றவர் கிழக்கு முகமாயும், கீர்த்தியை விரும்புகின்றவர் தெற்கு முகமாயும் சம்பத்தை விரும்புகின்றவர் மேற்கு முகமாயும் சத்தியத்தை விரும்புகின்றவர் வடக்கு முகமாயும் அமர்ந்து புசிக்கவேண்டும்.
8. சாப்பிட்ட பிறகு குளிக்கக் கூடாது.

–திருமதி கோமதி,
கங்கார், பெர்லிஸ்



நெல்லை அண்ணாச்சி

தனது சிறுவயதில் ஆதரவை நாடி தனது மாமாவிடம் செல்ல... "சோப்பு" வியாபாரம் செய்த அவர் "இந்த சோப்புகளை விற்று வியாபாரம் செய்து வா" என்று கூற 1½ ரூபாய்க்கு வியாபாரம் செய்து 3½ ரூபாய்க்கு சாப்பாட்டை ருசி கண்டதினால்... "நீ எங்கேடா வியாபார தொழில் செய்து உருப்படப் போற, நீ உருப்படவே மாட்டாய்" என மாமாவிடம் பேச்சு வாங்கிக் கட்டியவர், இன்று ஒரு "பைனான்ஸ்" நிறுவனத்திற்கும், போட்டோ ஸ்டுடியோவிற்கும் உரிமையாளராகத் திகழ்கின்றார்.

ஆம், பத்தாங் பெர்சுந்தையில் நெல்லை பைனான்ஸ் கார்ப்பரேஷன், நெல்லை போட்டோ ஸ்டுடியோ ஆகிய நிறுவனங்களின் உரிமையாளர் உயர்திரு நெல்லை அண்ணாச்சியைத்தான் குறிப்பிடுகின்றேன்.

நமது மலேசியாவில் போட்டோ ஸ்டுடியோ என்றால் அதிகமாக அதனை நடத்துபவர்கள் சீனர்கள் தாம். இருப்பினும் அவர்களுக்குச் சரிநிகரான அளவிலும், நவீன அளவிலும் ஓரளவு பிரமிக்கும் வகையில் நம் நாட்டில் இந்தியர்களில் ஒருவரால் நடத்தப்படும் போட்டோ ஸ்டுடியோ அநேகமாக இந்த நெல்லை போட்டோ ஸ்டுடியோ ஒன்றாகத்தான் இருக்கும் எனலாம்.

இளம் வயதிலேயே தமக்குப் புகைப்படம் எடுப்பதிலும் அதே வேளையில் இயற்கைக் காட்சிகளை ரசிப்பதிலும் ஏற்பட்ட இயற்கையான ஆசையுமே இந்த போட்டோ ஸ்டுடியோவை உருவாக்கியதற்கு ஒரு காரணம் என்றார்.

"தாங்கள் வேலைக்கு அமர்த்தியிருக்கும் இளைஞர்களைப் பார்த்தால் மிகவும் இளமையானவர்களாக இருக்கிறார்களே?"

"இளமையானவர்கள் மட்டுமல்ல, உடல் ஊனமுள்ள சிலரும் உள்ளனர். இந்தத் தொழிலில் இந்த மாதிரி அங்கவீனமான இளைஞர்களை அமர்த்தி அவர்களின் எதிர்காலத்திற்கு வழிகாட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடும், வாழ்க்கையை அமைப்பதற்கும் இது உறுதுணைபுரியும் என நினைத்ததால் இதனை நான் செய்துள்ளேன்" என்றார்.

இதனைக் கேட்ட எனக்கு உள்ளத்தில் பூரிப்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டதில் வியப்பில்லையே...!


அண்மையில் நெல்லை அண்ணாச்சி, நல்லெண்ணத் தேநீர் விருந்துடன் நடத்திய தீபாவளிச் சிறப்புப் பரிசு நிகழ்ச்சியின் போது பிடித்த படம். இடமிருந்து மா. வ. ஜானகிராமன், சிறப்புரையாற்றும் தமிழ்மலர் இணை நிர்வாக ஆசிரியர் பி. எல். கே. ராஜன், நெல்லை அண்ணாச்சி, ம. இ. கா. மத்திய செயலவை உறுப்பினர் எம். ஜி. பண்டிதன், ஆசிரியர் முருகு, சிலாங்கூர் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு டத்தோ என். எஸ். மணியம்.


நெல்லை அண்ணாச்சி தமது அலுவலகத்தில்...

அங்கவீனமானவர்களுக்கு அவர் வேலை வாய்ப்பைக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் நமது நாட்டில் இருக்கும் அங்கவீன, கண் பார்வையற்ற சங்கங்களுக்கும் இன்னும் சமூக இயக்கங்களுக்கும் இனவேறுபாடின்றி "இல்லை" என்று கூறாமல் நிதி உதவி செய்யும் இவ ரின் தொண்டுள்ளத்தை எண்ணிய போது ஒரு மகிழ்ச்சி என் உள்ளத் தில் ஏற்படுகின்றது.

சோப்புத் தொழிலைச் செய்ய ஆர்வம் கொடுத்த தனது மாமா விடம் சண்டை போட்டுக்கொண்டு வெளியேறிய இவர் தன்னோடு எடுத் துச் சென்ற 35 ரூபாயையும்; துணி மணிகள் அடங்கிய பெட்டியையும் "திடீர்" நண்பர் ஒருவரிடம் கொடுத்து ஏமாந்ததால் என்ன செய்வது என்று புரியாமல் மதுரை மீனாட்சி அம்மனின் ஆலயத்தில் படுத்துறங்கியதை நினைவு கூருகின் றார்.

அன்று இரவு மீனாட்சி அம்மனே கனவில் தோன்றி, "உனக்கு ஒன்றும் குறையில்லை, மகிழ்ச்சியோடு இருப் பாய்; எனது துணை உனக்கு உண்டு" எனக்கூறினாராம்.

இருப்பினும் மனம் குழம்பிய நிலையில் ரயில்வே ஸ்டேஷனில் உட்கார்ந்திருந்தார். பர்மாவிற்குப் போய்ப் போர் செய்ய பட்டாளத் திற்கு ஆள் திரட்டப்படுவதைக் கேள்விப்பட்டு அதில் சேர்ந்தார். "ராணுவத்தில் சாதாரண சிப்பா யாக சேர்ந்து ஒரு 'குவார்ட்டர் சார்ஜன்டா.' உயர்ந்ததற்கு உழைப்புத்தான் காரணம்" என் கிறார் அவர்.

சுங்கை திங்கி தோட்டத்தில் ஒரு "பிட்டராக" மறுவாழ்க்கையைத் துவங்கிய நெல்லை அண்ணாச்சி அவர் கள் 8 ஆண்டுகளுக்குப் பின் இந்தியா விற்கு சென்றபோது தனது பழைய நண்பர்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் கண்டு வியப் படைந்து அவர்களைப்போல் நாமும் முன்னுக்கு வரமுடியவில்லையே என ஏக்கம் கொண்டதாகக் கூறுகின்றார்.

எப்படியும் முன்னுக்கு வர வேண்டும் என்ற எண்ணம் அப் போதே அவர் உள்ளத்தில் ஊற விட்டதாம்.

மலேசியா திரும்பியவுடன் இவர் நண்பர்களின் உதவியுடன் கொடுக்கல் வாங்கல் (Nellai Financial Corporation) தொழிலைச் செய்தாராம். கூட்டாக ஆரம்பித்த அந்தத் தொழிலை இப்போது தன்னிச்சையாக தன்னம்பிக்கையுடன் தானே சொந்தமாக செய்து வருவதாகச் சொல்லுகிறார்.

இந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு முன் மிளகாய்த்தூள், நல்லெண்ணெய், புகையிலை போன்றவற்றை விற்று மக்களிடம் ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டதாகக் கூறும் இவர் வியாபாரத்திற்குப் "பழக்கம்" தேவை என்பதை வலியுறுத்துகின்றார்.

"தங்களின் வாயிலாகச் சில இந்தியர்கள் பத்தாங் பெர்சுந்தை வட்டாரத்தில் நில உரிமையாளராக இருப்பதாக அறிகின்றேன். அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?" என அவரிடம் நான் கேட்டபோது...

"இந்த மாதிரி நிலத் திட்டங்களில் இந்திய குடும்பங்களை குடியேற்றுவதற்குக் காரணம் இந்திய குடும்பங்களும் நில உரிமையாளராகி இந்திய குடும்பங்கள் வாழும் கிராமப் புறங்களை உருவாக வேண்டும் என்னும் எனது விருப்பமே" என்கின்றார்.

முதலில 10 ஏக்கர் நிலத்தை வாங்கிப் பிரித்துக் கொடுத்து இதுவரை 200 ஏக்கர் நிலங்களில் 250 குடும்பங்களைக் குடியேற்றியதாக கூறுகின்றார்.

அப்போது குறைந்த விலையில் பெரிய நிலங்களை வாங்கிப் பிரித்து



வார்ட்டர் சார்ஜெண்டாக...!

அதிக விலைக்குக் கொடுக்கிறார் என்று பலர் பலவாறாகப் பேசினார்களாம். இதைப்பற்றிக் கவலைப்படாமல் இந்த வேலையைத் தொடர்ந்து செய்தாராம்.

அதோடு அந்த நேரத்தில் கையில் பணம் இல்லாதவர்களுக்கும், ஏன் லாயர் செலவு கூடக் கட்டமுடியாத நிலையிலுள்ள தனது நெருங்கிய நண்பர்களுக்கும், நம்பிக்கையோடு வந்தவர்களுக்கும் உதவினார். அவர்களை மாதாமாதம் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்த ஆலோசனை கூறினாராம்.

அப்போது விற்ற அந்த நிலங்களின் "மதிப்பு" மும்மடங்கான விலையில் இப்போது உள்ளது என்றும், அந்தக் காலத்தில் வாங்க விரும்பாதவர்கள், தடுத்தவர்கள் இப்போது தன்னிடம் வருத்தம் தெரிவிப்பதாகவும் கூறுகின்றார்.

திட்டத்தில் வியாபார நோக்கம் ஒருபுறம் இருந்தாலும் "சமூகப் பார்வை"யும் அவரிடம் இருப்பதை எண்ணி மகிழ்ச்சியடைந்தேன்.

"நமது இந்திய இளைஞர்கள் நிறைய பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களோ அல்லது மற்றவர்களோ தொழிலில் இறங்க உங்களுடைய ஆலோசனை என்ன?"

"நான்கூட பாருங்க கடந்த காலங்களில் மிளகாய்த்தூள், நல்லெண்ணெய், புகையிலை போன்றவற்றைக்கூட எடுத்துக்கொண்டு தோட்டம் தோட்டமாக, வீடுவீடாகச் சென்று வியாபாரம் செய்திருக்கின்றேன். இதை ஏன் கூறுகின்றேன் என்றால் தொழிலில் முதல்ல "வெட்கம்" இருக்கக்கூடாது. நல்ல அறிமுகம் இருந்தால்தான் எல்லோரும் தொழில் செய்து முன்னுக்கு வர முடியும்" என்கிறார்.

"நாம் ஒரு தொழிலில் ஈடுபட வேண்டுமானால் அது உள்ளத்தில் தன்னிச்சையாக உதிக்க வேண்டும். உள்ளத்தில் ஓர் ஆசையையும், பற்றையும் வளர்த்தல் அவசியம். ஏனோ தானோ என வியாபாரம் செய்யக் கூடாது. நம்முடைய கவனம், சிந்தனை எல்லாம் வியாபாரத்தில் இருந்தால்தான் நாமும் தொழில் அபிவிருத்தி செய்ய முடியும் அதிக முதலீடு போட்டுப் பெரிய தொழிலைத் தொடக்காவிட்டாலும் சிறிய முதலே போதும். ஆனால் அதிக உழைப்பும் முயற்சியும் இருந்தால் தொழிலில் நிச்சயம் வெற்றியடைய முடியும்" என்கிறார் திரு. நெல்லை அண்ணாச்சி.

"நம்பிக்கை, நாணயம் தொழிலுக்கு மிகவும் முக்கியம். இதை இழந்தால் வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பது கடினம்" என்று நினைவுபடுத்தினார்.

"சில சிறு தொழில்களைக் கூறுங்கள்?" என நான் அவரிடம் வினவியபோது, "புத்தக வியாபாரம், கோல்டு கவரிங் நகைகள் விற்பது, துணி மணிகள், புடவைகள், காய்கறி விற்பது, கடலை விற்பது, பத்திரிக்கை போடுவது போன்ற தொழில்கள்கூட நல்ல வருவாயை ஈட்டிக் கொடுக்கக் கூடிய தொழில்கள். எந்தத் தொழிலை எடுத்துக் கொண்டாலும் லாபம் இல்லாத தொழிலே இல்லை" என்கிறார். சிறு தொழில்களில்தான் நல்ல வருவாய் ஈட்ட வாய்ப்பிருக்கின்றது எனக் கூறும் இவர் இடத்தையும், சூழ்நிலையையும் பொருத்தே நாம் அதற்கேற்றவாறான தொழிலை ஆரம்பிப்பதே பொருத்தமானதாகும் என்று திட்டவட்டமாகச் சொல்லுகின்றார்.

"உங்களின் எதிர்காலத் திட்டம் என்ன?"

"வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் ஒரு ஏஜண்டாக ஆகி தொழிலை உயர்த்த ஆசையிருப்பதாகவும், வெளிநாட்டவர்களுடன் தொடர்பு கொண்டு தொழில் செய்வதற்கும் மனதில் ஒரு எண்ணம் இருப்பதாகவும் கூறுகின்றார்.

இப்படிப் பெரிய அளவிலே ஈடுப்படப்போகும் அவரின் முயற்சிக்கு எனது வாழ்த்தைத் தெரிவித்துக் கொண்டேன்.

ஆரம்பக் கல்விவரை மட்டுமே பயின்றுள்ள இவர் வாழ்க்கை மேம்பாட்டிற்குக் "கல்வி" ஒரு பிரச்சனை என்ற போதிலும் கடின உழைப்பும், தன்னம்பிக்கையும் இருந்தால் முன்னுக்கு வரலாம் என்கிறார்.

"ஓய்வு இல்லாமல் தொழிலில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் தங்களுக்குச் சில நேரங்களில் ஓய்வு கிடைத்தால் என்ன செய்வீர்கள்..."

"அப்போது கூட மற்றவர்கள் எப்படித் தொழில் துறையில் முன்னுக்கு வந்தார்கள் என ஆராயத் தொடங்குவேன்" என்றார். இவர் பழைய நண்பர்களின் நினைவுகளை அறிய, தான் கடந்த காலங்களில் எடுத்து வைத்துள்ள "மூவி" படங்களைப் போட்டுப் பார்ப்பதில் ஆவல் உள்ளவராக இருக்கின்றார்.

"மறந்து விட்டேன்... உங்கள் குடும்பத்தைப் பற்றி கேட்க...?" என்றேன்.

"மனைவியும் 2 ஆண் பிள்ளைகளும், 4 பெண் பிள்ளைகளும் இருப்பதாக கூறும் இவர் பிள்ளைகளை முடிந்த அளவு கல்லூரிவரை படிக்கச் செய்துள்ளாரம்.

சிறு வயதில் கல்வியைப் பொருட்படுத்தாத தான் பிள்ளைகளை யாவது நல்ல முறையிலாவது படிக்க வைக்க ஆர்வம் காட்டி வருவதாக தெரிவிக்கின்றார்.

"உங்கள் பேரே "நெல்லை அண்ணாச்சி"தானா"? என்றேன். "நெல்லை மாவட்டத்தில் பிறந்ததால் என்னை எல்லோரும் "நெல்லை அண்ணாச்சி" என்று அன்பாக அழைக்கின்றார்கள். இயற் பெயர் பொன்னுசாமி" எனக் கூறுகின்றார். 55 வயதுடைய இவரை நெல்லை அண்ணாச்சி என்றால்தான் அந்த வட்டாரத்தில் மற்றவர்களுக்குத் தெரியும்.

பேட்டி:

மா. வ. ஜானகிராமன்

உலகளாவிய தமிழ்த் தொண்டர்



இர. ந. வீரப்பன்

படைப்பாளன் கற்பனைச் சிறகு கொண்டு பறக்கலாம்; வானத்து வெண்ணிலவை மண்ணுக்கு வரவழைக்கலாம்; கடலின் மேல் களித்து விளையாடலாம்; பரவெளியில் பறவை போல் பறக்கலாம். ஆனால் திறனாய்வாளன்...? படைப்பாளன் எப்படிப் பறக்கிறான், எப்படி நடக்கிறான் என நோட்டமிட முடியுமேயன்றி கற்பனைச் சிறகில் மனம்போல் பறக்க இயலாது. படைப்பாளன் 'கனி' என்பதைக் "காய்" என்றும், 'அமுதம்' என்பதை "நஞ்சு" என்றும் கூறிப் படைப்பாளனின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்பவன் திறனாய்வாளன். அதேநேரத்தில் தட்டிக் கொடுத்து ஊக்கமூட்டுபவனும் அவனே!



ஒருவர்: இவர் பெரிய எழுத்தாளர்.

மற்றொருவர்: எந்த எந்தப் பத்திரிகையில் எழுதியிருக்கிறார்?

ஒருவர்: அப்படி ஒன்றும் இல்லை இவருடைய எழுத்துத்தான் பெரிது பெரிதாக இருக்கும்.

–வி. ஆனந்த்,
லாபு தோட்டம்,
நெகிரி செம்பிலான்.

திறனாய்வாளனுக்குரிய இந்த இரண்டு பணிகளையும் குறைவற நிறைவேற்றிவருபவர்தான் நண்பர் திரு இர. ந. வீரப்பன் அவர்கள். மலேசிய இலக்கிய உலகில் திறனாய்வுத் துறை வளர முன்னோடியாக இருந்தவர் இவரே என்றால் மிகையாகாது. மராட்டிய நாவலாசிரியர் காண்டேகரின் நாவல்களில் பலவற்றை இவர் திறனாய்வு செய்துள்ளார். உருவகக் கதை இலக்கியம் பற்றி இவர் "பொன்னி" இதழில் எழுதிவந்த நீண்ட தொடர்கட்டுரை அரிய நூலாகும் தகுதி வாய்ந்தது. சிறுகதைச் செல்வர் திரு. சி. வடிவேலு அவர்களின் சிறுகதைகள் பற்றிய திறனாய்வுக் கருத்தரங்கைக் கூட்டியதன் மூலம், இந்நாட்டில் திறனாய்வுத் துறையில் புது மலர்ச்சி ஏற்பட வழியமைத்தார். தொடர்ந்து திரு.மா. இராமையா அவர்களின் படைப்பிலக்கியங்கள் பற்றிய கருத்தரங்கம் கவிவாணர் ஐ. உலகநாதன் அவர்களின் சந்தனக் கிண்ணம் பற்றிய கருத்தரங்கம் முதலியவற்றின் வழி திறனாய்வுத்துறையை வளப்படுத்தினார்.

விருப்பு வெறுப்பு இன்றி, வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று பாராமல் துணிந்து எழுதும் நெஞ்சுரம் கொண்டவர். தமிழ் உணர்வும், தமிழ்க் கல்வி வளர்ச்சியில் நம்பிக்கையும் கொண்டவர். இலக்கியக் கழகத்தின்வழி இனிய தொண்டாற்றும் திரு. வீரப்பன் அவர்கள் உலகத் தமிழ்ப் பண்பாட்டு (உ.த.ப) இயக்கத்தின் மலேசியக் கிளையை அமைத்து அதன் செயலாளராகப் பணிபுரிபவர். டாக்டர் சாலை இளந்திரையன் உ. த. ப. இயக்கத்தின் தலைவர் பொறுப்பிலிருந்து விலகியதும், உலக நாடுகளின் பல கிளைகள் முன்மொழிய திரு. வீரப்பன் இடைக்காலத் தலைவரானார். இவர் பொறுப்பேற்ற பின்னரே உ. த. ப. இயக்கம் புத்தொளி பெறத் தொடங்கியது.

உலகமெங்கும் பரந்து பல நாடுகளிலும் வாழும் தமிழர்கள் நாட்டால் வேறுபட்டாலும் பழமைமிக்க பண்பாட்டால் உலகத் தமிழர்களெல்லாம் ஒன்றித்த உணர்வு பெறவேண்டும் என்ற குறிக்கோளில் தம் ஆற்றலுக்கு மேற்பட்ட உழைப்பை நல்கும் பெருமகன் வீரப்பன் அவர்களின் தொண்டு குறிப்பிட்ட ஒரு துறையோடு மட்டும் நிற்கவில்லை. மலேசியாவில் தமிழ்க்கல்வி பற்றிய சிக்கல் எழுந்தபோது ஏறுபோல் எழுந்து எழுச்சிக் குரல் கொடுத்தவர். பல மாநாடுகள் கூட்டித் தமிழ் மக்களின் உணர்வுகளை அரசுக்கு உணர்த்தினார். தமிழுக்குப் புதுப்பாடத்திட்டம் உருவாகும் இவ்வேளையில், தமிழ் நெஞ்சங்களின் கருத்துக்களைத் திரட்டிப் பாடத்திட்ட அமைப்புக்கான பரிந்துரைகளைப் பாடத்திட்டக் குழுவுக்கு வழங்கினார்.

மேலும் தமிழக அறிஞர்களோடு குறிப்பாக டாக்டர் மு.வ., புலவர் தணிகை உலகநாதன் ஆகியோரோடு தொடர்பு கொண்டு சென்னை மாணவர் மன்றம் மலேசியத்தமிழ்ப்பள்ளி ஆசிரியர் தேசிய சங்கம் இரண்டும் இணைந்து தமிழ்மணி தேர்வு நடத்தச் செய்தார். மூன்றாண்டுகள் தொடர்ந்து தேர்வு எழுதி பலர் "தமிழ்மணி" விருது பெற்றனர். இந்நாட்டில் தமிழில் பட்டம்பெற வாய்ப்பளித்த முதல் முயற்சி இதுவேயாகும்.

இப்படிப் பல்லாற்றானும் தொண்டுபுரியும் உறுதிமிக்க உள்ளத்தவரான வீரப்பன் அவர்களின் நற்பணிகள் நாளும் வளர வாழ்த்துவோம்!

–முரசு நெடுமாறன்

ஜனவரி 11 முதல் ஜனவரி 25 வரை

15 நாள் பலன்

கும்பம் (ஜன. 20 — பிப். 18)

தொலைபேசி, கடித வாயிலாக மகிழ்ச்சிகரமான செய்திகள் வரும். பொதுச் சேவைகளில் ஈடுபடவேண்டியிருக்கும். தவறான புரிந்துணர்வால் நண்பர்களிடம் மனக்கசப்பு ஏற்பட வழியுண்டு மற்றவர்களை, குறிப்பாக ஐயத்திற்கு இடமானவர்களை நம்ப உங்களுக்கு இது ஏற்ற தருணமல்ல.

நல்ல நாட்கள்: 13, 18
எச்சரிக்கை நாட்கள்: 12, 19

மீனம் (பிப். 9- மார்ச்சு 20)

உங்களது விருப்பங்கள் நிறைவேறும் வகையில் பெரியோர்களின் உதவி கிடைக்கும். சக தொழிலாளர்கள் உங்களுடன் இணக்கமாக இருப்பார்கள். பண விஷயத்தில் நண்பர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். நீங்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்திருக்கும் விஷயங்கள் சம்பந்தமாக முக்கிய செய்திகள் வரும்.

நல்ல நாட்கள்: 12, 13
எச்சரிக்கை நாட்கள்: 18, 21

மேஷம் (மார்ச்சு 21 - ஏப். 20)

தற்போது எடுத்துவரும் முயற்சிகள் பூர்த்தியாகும். உங்களின் புதிய திட்டங்களுக்கு நண்பர்கள் உதவியாக இருப்பார்கள். பொது விஷயங்களில் செல்வாக்கும் தன்னம்பிக்கையும் கிட்டும். பெண் சம்பந்தப்பட்ட வகையில் பிரச்சனைகள் உருவாக வாய்ப்புண்டு.

நல்ல நாட்கள்: 16, 18
எச்சரிக்கை நாட்கள்: 12, 21

ரிஷபம் (ஏப். 21 - மே. 20)

வெளியூர்ப் பயணங்களுக்கு நல்ல நேரம். பொருளாதாரத்தில் சிக்கல் ஏற்பட்டாலும் 13-ம் தேதிக்குப் பிறகு அது சீராகும். உங்களது பொறுமையைச் சோதிக்கும் சந்தர்ப்பங்கள் வரலாம். அப்போது பொறுமையாக இருங்கள். குடும்பத்தில் வாக்குவாதம் நிகழ வாய்ப்பு உண்டு.

நல்ல நாட்கள்: 13, 21
எச்சரிக்கை நாட்கள்: 19, 23

மிதுனம் (மே 21 - ஜூன் 20)

கூட்டு வியாபாரத்தில் ஈடுபட முயல்வீர்கள். உடலாரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். எதிலும் கையெழுத்திடுவதைக் கூடுமானவரை தவிர்த்துவிடுங்கள். உங்களின் புத்திக்கூர்மையான வேலைகளுக்குப் பாராட்டும் பரிசும் கிடைக்கும். வேலைப்பளு அதிகமாகும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

நல்ல நாட்கள்: 12, 20
எச்சரிக்கை நாட்கள்: 13, 18

கடகம் (ஜூன் 21- ஜூலை 20)

பொருளாதாரத்தைப் பெருக்கும் திட்டங்களில் ஈடுபட முனைவீர்கள். அதனை இந்த மாதக் கடைசிக்கு ஒத்திவையுங்கள். மனைவி மக்கள் தங்களுடன் ஒத்துப்போவார்கள். பெரியோர்களின் ஆதரவு அவ்வளவு திருப்திகரமாக இராது.

நல்ல நாட்கள்: 13, 24
எச்சரிக்கை நாட்கள்: 15, 20

சிம்மம் (ஜூலை 21 - ஆக.21)

செய்தொழிலில் மேன்மை அடையும் சந்தர்ப்பம் ஏற்படும். கடின உழைப்பால் உடல்நலம் பாதிக்கலாம். நண்பர்களுடன் கவனமாகப் பழகுங்கள். அவர்களிடம் பேசும்போதும் கவனம் தேவை. நீங்கள் எதிர்நோக்கியிருக்கும் உதவிகள் தாமதமடையும். தேதி 20க்கு மேல் நண்பர்கள், உறவினர்கள், தொழில் ரீதியிலான பங்காளிகள் உங்களுக்குச் சாதகமாக இருப்பார்கள். முக்கியமான ஒரு தகவல் கிடைக்கும்.

நல்ல நாட்கள்: 20, 21
எச்சரிக்கை நாட்கள்: 12, 16

கன்னி (ஆக. 22 - செப். 22)

தேங்கிக் கிடக்கும் வேலைகளைச் செய்யவேண்டிய அவசியம் ஏற்படும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடு தோன்றலாம். வழக்கு சம்பந்தப்பட்ட விஷயங்களில் தோல்வியே கிட்டும். குறிப்பாக 20-ஆம் தேதி செய்யும் முயற்சிகள் வெற்றியைத் தரலாம். மனம் மகிழத்தக்க நிகழ்ச்சிகள் நடக்கும் சாத்தியம் உண்டு.

நல்ல நாட்கள்: 20, 21
எச்சரிக்கை நாட்கள்: 16, 17

துலாம் (செப் 23-அக். 22)

தொழில் துறையில் அதிர்ஷ்ட காலம் ஆரம்பித்திருக்கிறது. அதே வேளையில் பயணங்கள், நம்பிக்கைகள், கல்வி ஈடுபாடு ஆகியவற்றில் நீங்கள் எதிர்பார்ப்பதுபோல் நடவாது. முக்கியமான பிரச்சனைகளில் முடிவெடுப்பதைச் சில நாட்கள் ஒத்திப்போடுங்கள். குடும்ப விவகாரங்களில் நண்பர்கள் தலையிடுவதை அனுமதியாதீர்கள்.

நல்ல நாட்கள்: 11, 15
எச்சரிக்கை நாட்கள்: 18, 19

விருச்சிகம் (அக் 23-நவ. 22)

பொருளாதாரம் பெருகுவதற்குச் சில வழிகள் உண்டாகும். கடிதப் போக்குவரத்தில் நன்மை கிடைக்கும். வாயினிக்கப் பேசுபவரை நம்பி ஏமாந்துவிடாதீர்கள். தற்போதைக்கு எந்தப்பிரச்சனையைத் தொட்டாலும் இழுபறியாகவே இருக்கும் என்பதால் சில நாட்களுக்கும் பிறகு எதிலும் ஈடுபடுவது நல்லது.

நல்ல நாட்கள்: 12, 16
எச்சரிக்கை நாட்கள்: 13, 20

தனுசு (நவ. 23 - டிச. 20)

நீங்கள் இப்போது ஈடுபட்டிருக்கும் பணம் பெருக்கும் முயற்சிகள் மந்தமாகக் காணப்பட்டாலும் பிறகு வெற்றியைத் தரும். குடும்பப் பிரச்சனைகளில் அதிகக் கவனம் செலுத்த வேண்டியிருக்கும். பிறருடைய முக்கியமான விவகாரங்களில் நீங்கள் ஆலோசனை கூற நேரலாம். திருமண முயற்சிகள் கைகூடி வரும்.

நல்ல நாட்கள்: 14, 21
எச்சரிக்கை நாட்கள்: 12, 18

மகரம் (டிச. 21- ஜன.19)

திருமணமாகாதவர்களுக்குத் திருமணம் கைகூடும் சாத்தியமுண்டு. ஆடம்பரச் செலவுகள் ஏற்படலாம். செய்தொழில் பாதிக்கும் சூழ்நிலை உருவாகலாம் என்பதால் அதில் கவனமான இருங்கள். உங்களை நம்பியிருப்போருக்கு விசேஷமான உதவிகளை நீங்கள் செய்ய வேண்டியிருக்கும். பொருளாதார நிலை நன்றாக இருக்கும்.

நல்ல நாட்கள்: 15, 20
எச்சரிக்கை நாட்கள்: 17, 18

-தஞ்சை நகுலன்

கலையுலக வினா-விடை

பரிதாமணாளன்

என். கோவிந்தராஜு, பினங்கு

கே: "மகரிஷி"யின் நாவல்களான "பத்ரகாளி", "புவனா ஒரு கேள்விக்குறி", "சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு" முதலியவை தவிர வேறு ஏதாவது படமாக வந்துள்ளதா?
ப: "மகரிஷி" முதன்முதலாக எழுதிய நாவல் "பனிமலை". இது "என்னதான் முடிவு?" என்னும் தலைப்பில் படமாக வந்தது. இதை கே. எஸ். கோபாலகிருஷ்ணன் இயக்கியிருந்தார்.

கே: "மகரிஷி" இதுவரை எத்தனை நாவல்கள் எழுதியுள்ளார்?
ப: "சுமார் நாற்பது நாவல்கள்" என்கிறார் மகரிஷி.

சி. ராமசாமி, ஈப்போ

கே: எம்.ஜி.ஆர். முதலமைச்சராகி விட்டதால் நடிகை லதாவின் படஉலக மார்க்கெட் "டல்"லாகி விட்டதா?
ப: அப்படி ஒன்றுமில்லை. நடிகை லதா நடிக்கும் ஒரு படத் துவக்க விழாவில் எம்.ஜி.ஆர். உட்பட ஒன்பது அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள். நிதியமைச்சர் மனோகரன் தான் கிளாப் அடித்தாராம். நிலைமை இப்படியிருக்கும் போது அவர் மார்க்கெட் எப்படி டல்லாகும்?

எஸ். வெங்கிடாசலம், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: அமரர் ஆழி. அருள்தாசன் இறுதியாக மலேசியாவில் படைத்த நாடகம் எது?
ப: "கடாரம்" நாடகத்தை அவர் கடைசியாகப் படைத்தார். "முல்லைத்தேர்" நாடகம் தயாரிப்பில் இருந்தபோது அவர் திடீரென மறைந்துவிட்டார். அந்த "முல்லைத்தேர்" நாடகம் மார்ச் முற்பகுதியில் அரங்கேற விருப்பதாகத் தெரிகிறது.

எஸ். மணிராஜ், தொங்கா மொரிப், பந்திங்

கே: தமிழ்ப்பட உலகில் அதிக வண்ணப் படங்களில் நடித்த நாயகர் யார்?
ப: எம். ஜி. ஆர். தான்.

கே: "உலகம் சுற்றும் வாலிபன்" படச் சாதனையை முறியடித்த வேறு படங்கள் யாவை?
ப: இன்னும் வரவில்லை.

எஸ். டி. மனோ, குளுனி தோட்டம், சிலிம்ரிவர்

கே: நடிகர் நடிகைகளுள் பொறுமை கொள்வதுண்டா?
ப: அவர்களிடையே உள்ள பொறுமை அளவு வேறெங்கும் கிடையாது.

ஊதாப்பூ ராமச்சந்திரன், பத்தாங்காலி தோட்டம், பத்தாங்காலி

கே: ராணி சந்திராவின் முதல் தமிழ்ப்படம் எது?
ப: "தேன் சிந்துதே வானம்."

ஏ. எஸ். சிவநேசன், குளுவாங்

கே: எம்.ஜி.ஆர். சினிமாவில் நடிக்காததால் சினிமா மோகம் குறைந்து விடுமா?
ப: நான் அப்படி நம்பவில்லை. எம்.ஜி.ஆர். ரசிகர்களுக்கு அவர் படம் அடிக்கடி வரா திருப்பது ஏமாற்றமாக இருக்கும். இதற்காக சினிமா மோகமே குறைந்துவிடாது.

கே: மறைந்த தமிழ்வாணன் தயாரித்த "காதலிக்க வாங்க" ஒரு வெற்றிப் படமா?
ப: இல்லை.

எம். சுலோசனா, சிரம்பான்

கே: "படாபட்" ஜெயலட்சுமிக்கு "படாபட்" என்னும் சொல் எப்படி வந்தது?
ப: இவர் நடித்த முதல் படமான "அவள் ஒரு தொடர்கதை"யில் "படாபட்" என்னும் சொல்லை அடிக்கடி பயன்படுத்தினார். இதுவே இவருக்கு அடைமொழியாகச் சேர்ந்து கொண்டது.

எம். ராஜ்குமார், சிம்பாங் பெக்கோ, மலாக்கா

கே: எம்.ஜி.ஆர். நடித்த "இன்றுபோல் என்றும் வாழ்க" இங்கு ஓட்டம் எப்படி?
ப: சுமாரான ஓட்டமே கண்டது.

எம். வேலு, கோலாலம்பூர்

கே: "சிரித்து வாழவேண்டும்- பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே" என்னும் பாடலை எழுதியவர் யார்?
ப: "ஆயிரம் நிலவே வா" என்னும் பாடலை எழுதிய புலவர் புலமைப்பித்தன்.

கே: பாலசந்தரின் அடுத்த தயாரிப்பு என்ன?
ப: கல்யாணச் சந்தை.

செல்வராஜு குமரன், கிள்ளான்

கே: "மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்" எப்போது வெளிவரும்?
ப: பொங்கலுக்கு வருவதாக அறிவித்திருக்கிறார்கள்.



"போதும் உந்தன் ஜாலமே
புரியுதே உன் வேஷமே" என்று
சிவகுமாரை தாஜா செய்பவர் ஜெயலலிதா
திரை: ஸ்ரீகிருஷ்ண லீலா

சிறுகதை

அதிசய 'மம்மி'

பி.பாலகோபால்

சென்ற நூற்றாண்டில் ஒரு நாள் ஓர் அராபிய வியாபாரி தலையைச் சொறிந்து கொண்டார்; கையைப் பிசைந்து கொண்டார்.

திடீரென்று அவர் வியாபாரம் படுத்துவிட்டது?

"உன்னிடம் வைத்திருக்கும் அந்த "மம்மி"யைத் தலையைச் சுற்றி எறிந்துவிடு. அதற்கு ஏதோ சாபத் தீட்டு இருக்கிறது." என்று சில பேர் சொன்னார்கள்.

இறந்து போன அரசர்களையும், குருமார்களையும் "பாடம்" பண்ணிப் பல நூற்றாண்டுகளுக்கு அப்படியே வைத்திருப்பார்கள். அதுதான் மம்மி, அந்த அராபிய வியாபாரியிடம் அப்படிப்பட்ட மம்மி ஒன்று இருந்தது.

மூன்று ஆங்கிலேய இளைஞர்கள் மிகு மகிழ்ச்சியுடன் அந்த மம்மியை வாங்கிக் கொண்டார்கள். "சாபமாவது மண்ணாவது" என்று சிரித்தார்கள் அவர்கள்.

நைல் நதியில் ஓர் உல்லாசக் கப்பலில் மம்மியுடன் அந்த மூன்று இளைஞர்களும் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். மூன்று பேரிலும் இளைஞன் ஒருவனின் அறையில் மம்மி வைக்கப்பட்டிருந்தது. திடீரென்று அன்று இரவு ஒரு துப்பாக்கி வேட்டு ஒலித்தது, அவன் அறையில். அலறி எழுந்தான் அவன். கையிலே இரத்தம் கொட்டியது. ஆம்! அவனைத் துப்பாக்கியால் யாரோ சுட்டுவிட்டார்கள்! கையையே வெட்டி எடுக்கும்படி நேர்ந்துவிட்டது.

யார் சுட்டார்கள் அவனை? எதற்காகச் சுட்டார்கள்? யாருக்கும் தெரியவில்லை.

மறுநாள் இரவு, மூவரிலும் வயதில் மூத்த இளைஞனின் அறையில் மம்மியை வைத்தார்கள். அன்று இரவு அவர் காணாமற் போய் விட்டார்! சுவடே காணோம்! இரவு நேரத்தில், அவர் தவறிப்போய்க் கடலில் விழுந்து இறந்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டனர். பாவம், அவருக்கு நீச்சல் தெரியாது. எப்படிக் கடலில் விழுந்தார்? ஏன் உதவி கேட்டுக் கூச்சல் போடக்கூடாது?

ஒருவழியாக உல்லாசப் படகு கெய்ரோவை அடைந்தது. மூன்றாமவர், அந்த மம்மியுடன் ஓட்டலுக்குச் சென்றார். அவருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அறையில், மேஜை மீது ஒரு கடிதம் காத்திருந்தது.பிரித்தார். பைத்தியமே பிடித்து விடும்போல் ஆயிற்று.

அவருடைய வாழ்நாள் சேமிப்பு மொத்தத்தையும் போட்டு வைத்திருந்த "பேங்" திவாலாகி விட்டது! அதுதான் கடிதத்தில் கண்டிருந்த சேதி! கையில் ஒரு பைசா கூட இல்லை. அந்த மம்மிதான் ஒரே சொத்து.

துரதிர்ஷ்டம் பிடித்த மம்மியை அவர் அடுத்த வினாடியே விற்றுத் தொலைத்ததில் ஆச்சரியமில்லை. கொஞ்ச நாளைக்கு அந்த மம்மியைப் பற்றி எதுவும் தகவல் இல்லாதிருந்தது.

மேடம் பிளவாட்ஸ்கி என்ற பிரம்மஞான விஞ்ஞான சங்கத் தலைவி, இங்கிலாந்தில் ஒரு கிராமப்புற மாளிகைக்குச் சென்றார். எல்லா வசதிகளும் நிரம்பிய அந்த இடத்தில் இரண்டொரு நாள் ஓய்வெடுத்துக்கொள்ள எண்ணியிருந்தார் அவர். வீட்டுச் சொந்தக்காரர்கள் விழுந்து விழுந்து உபசரித்தார்கள் அவரை. அப்படியும் ஏனோ மேடம் பிளவாட்ஸ்கிக்கு இருப்புக் கொள்ளவில்லை. என்னமோ ஒரு திகில் ஏற்பட்டது.

"ஏதேவொரு தீயசக்தி இங்கே உலாவுகிறது. என்னால் தூங்கவே முடியவில்லை," என்று சொல்லி விட்டுத் திடீரென்று ஊருக்குப் புறப்பட்டார்.

வீட்டுக்காரருக்கு ஒரேதிகைப்பு. தன் வீட்டில் எவ்விதத் தீயசக்தியும் இல்லையென்றும் சத்தியம் பண்ணியதோடு, "வாருங்கள். நீங்களே மாளிகையின் எல்லாப் பாகங்களையும் சுற்றிப் பார்க்கலாம்" என்று சொல்லி மேடம் பிளவாட்ஸ்கியை அழைத்துச் சென்று வீட்டைச் சுற்றிக்காட்டினார். இருவருமாக மூலை முடுக்கு விடாமல் ஆராய்ந்தார்கள். ஓரிடத்திலும் ஒன்றும் தென்படவில்லை.

இறுதியில் வீட்டுக்குள் உள்ள ஒரு மச்சின்கீழ் வந்தார்கள். "இங்கேதான்!...அந்தக்கெடுதலான பொருள்" இங்கேதான் எங்கேயோ இருக்கிறது! அதை என்னால் உணர முடிகிறது" என்றுமேடம் பிளவாட்ஸ்கி கூறினார்.

மச்சின் மீது ஏறிப் பார்த்தார்கள். இருண்ட மூலையில் புழுதியடைந்து கிடந்தது அந்த மம்மி. யாரோ எப்போதோ வாங்கி அதை அங்கே வைத்திருந்தார்கள்!

மேடம் பிளவாட்ஸ்கி அந்த மாளிகைக்கு முன் பின் வந்தவரல்ல. மம்மி ஒன்று அங்கே இருப்பது அவருக்குத் தெரியவே தெரியாது! அப்படியும் அந்தத் "தீய சக்தி"யை அவரால் உணரமுடிந்தது!

மாளிகை சொந்தக்காரர். அவசர அவசரமாக அந்த மம்மியைப் பிரிட்டிஷ் மியூசியத்திற்கு விற்று விட்டார். மியூசியக் கட்டிடத்திற்குள் இரண்டு கூலியாட்கள் அதை எடுத்துச் சென்றார்கள், அவர்களில் ஒருவன் கால் இடறிவிழுந்து, காலை முறித்துக் கொண்டான். மற்றவன் அடுத்த நாள் திடீரென்று இறந்து போனான், ஒரு வித நோய் நொடியும் இல்லாமல்.

மியூசியத்தின் மம்மி பிரிவுத் தலைவரான டாக்டர் "பட்ஜ்" இந்தக் கதைகள் பூராவையும் கேள்விப்பட்டார். அதைப்பற்றி ஆராய வேண்டி, ஒரு பிரபல புகைப்பட ஸ்டுடியோவில் மம்மியை ஒரு புகைப்படம் எடுத்துத் தரும்படிக் கேட்டுக் கொண்டார். ஸ்டுடியோ ஆள் ஒருவன் வந்து புகைப்படம் எடுத்துச் சென்றான். மறுநாள் ஓட்டமாய் ஓடி வந்தான் டாக்டர் பட்ஜிடம்.

அவன் முகம் பேயறைந்த மாதிரி இருந்தது. மம்மியின் மீது வழக்கமாகத் தீட்டப் பட்டிருக்கும் எகிப்திய முகம் புகைப்படத்தில் இல்லையாம். அதற்குப் பதில் உயிருள்ள ஒரு பெண்ணின் முகம் தெரிகிறதாம்! பார்க்கவே பயங்கரமாக. சூனியக்காரி போல் தோன்றுகிறதாம். "என் காமிரா லென்ஸில் ஏதாவது கோளாறு? என்னவென்றே புரியவில்லை" என்றார் புகைப்படக்காரர்.

டாக்டர் பட்ஜ் சும்மா இருக்கக் கூடாதா? அந்த மம்மியைப் பற்றிப் பல கதைகள் உலவுவதைச் சொன்னார். புகைப்படக்காரர்பித்துப்பிடித்த மாதிரி வீட்டுக்குத் திரும்பினார். படுக்கையறைக்குச் சென்று தாளிட்டுக்கொண்டார். துப்பாக்கியை எடுத்தார். சுட்டுத் தற்கொலைசெய்து கொண்டார்!

பிரிட்டிஷ் மியூசியம் தலைவருக்குக் கிலி பிடித்தது. இவ்வளவு பயங்கர சக்திகொண்ட மம்மியைத் தங்களிடம் வைத்துக் கொண்டிருப்பதா என்று நடுங்கிப்போய், அமெரிக்கக் கோடீசுவரர் ஒருவரைப் பிடித்தார்கள். எகிப்து சம்பந்தப்பட்டது எதுவானாலும் வாங்குபவர் அவர். இந்த மம்மியை அவருடைய தலையில் கட்டினார்கள்.

பிரம்மாண்டமான உல்லாசக் கப்பலொன்றில், தமது விலைமதிக்க வொண்ணாத பொக்கிசத்துடன் புறப்பட்டார் அந்த அமெரிக்கக் கோடீசுவரர். ஆயிரத்தைந்நூறு பிரயாணிகளுக்கு மேல் அதே கப்பலில் சென்றார்கள்.

அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் அக்கப்பல் மூழ்கியது! அந்தக் கப்பலின் பெயர் "டைட்டானிக்." உலகிலேயே பெரிய கப்பல் விபத்து அதுதான்!

அந்த விபத்துடன் மம்மியின் கதையும் முடிந்தது. ஆழ் கடலின் அமைதியில் இன்றைக்கும் துயில் கொண்டிருக்கும் அந்த மம்மியினால் யாருக்கும் இனி ஆபத்தில்லை.

அலைஓட்டம்

வானொலி

நாடகம்

[சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

14-1-78 "நிம்மதி" எழுத்து: தைப்பிங் என். வரதராசன். இது பொங்கலை ஒட்டிய சிறப்பு நாடகம் ஆகும்.

21-1-78 "இயற்கைக்கு அப்பால்" எழுத்து: எஸ். வைரக்கண்ணு.

மனச்சூழல்

(ஞாயிறுதோறும் காலை 10.30க்கு ஒலிபரப்பாகிறது)

15-1-78" ஓர் இரவு விடிய மறுக்கின்றது"எழுத்து: எஸ். வைரக்கண்ணு.

22-1-78 "எட்டாவது தலை" எழுத்து: சுங்கை பாகாப் ஈஸ்வரிராஜ்.

சிறுகதை

(ஞாயிறு தோறும் இரவு 8.45க்கு ஒலிபரப்பாகிறது)

15-1-78 "பாசக் குமுறல்" எழுத்து: தலைநகர் இரா. முத்தரசன்.

22-1-77 ''ஓர் ஆத்மாவின் கதை" எழுத்து: பத்தாங் பெர்ஜுந்தை ஏ. ஐயாக்கண்ணு.

இஸ்லாமிய நாடகம்

(வியாழக்கிழமைகளில் இரவு 8.30க்கு ஒலிபரப்பப்படுகிறது)

19-1-78 "நிக்காஹ்" எழுத்து: எஸ். ஓ. ஏ. சையத் ஜபார் பாஷா.

சிரிப்புச் சித்திரம்

(சனிக்கிழமைதோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது)


14-1-78 எம் சின்னத்தம்பி எழுதிய "இன்ஜினியர் மாப்பிள்ளை."

21-1-78 "ஜடாமுனி சாமியார்" எழுத்து: செர்டாங் ஆர். சந்திரன்.

தொடர் நாடகம்

(திங்கள் இரவு 7.15 மணிக்கு)

"ஆடும் வரை ஆட்டம்" எழுத்து: எஸ். வைரக்கண்ணு.



தொலைக்காட்சி

12-1-78 வியாழன் மாலை மணி 5.32க்கு துலாபாரம். இந்தச் சமூகப் படத்தில் ஏவி. எம். ராஜன், கலர் நாயகி காஞ்சனா, "ஊர்வசி" சாரதா நடித்துள்ளனர்.



15-1-78 ஞாயிறு மாலை 4 மணிக்கு PADOSAN இந்திப்படம்.

19-1-78 வியாழன் மாலை மணி 5.32க்கு APRADHI இந்திப் படம்.



22-1-78 ஞாயிறு மாலை மணி 4க்கு வாணி ராணி. வாணிஸ்ரீ இரு வேடங்களில் தோன்றி நடித்திருக்கும் இப்படத்தில் சிவாஜி கணேசன், முத்துராமன் போன்றவர்களும் நடித்துள்ளனர். இசை: கே.வி. மகாதேவன்.

26-1-78 வியாழன் மாலை மணி 5.32க்கு வஞ்சிக்கோட்டை வாலிபன். ஜெமினி கணேசன், வைஜயந்திமாலா, பத்மினி, வீரப்பா போன்றவர்களின் சிறந்த நடிப்புடன் விறுவிறுப்பான பத்மினி–வைஜயந்தி நடனப் போட்டியும் இப்படத்தில் இடம்பெற்றுள்ளது.





சரோ மணியம், பிஞ் சி தோட்டம், பேரா

கே: தற்பொழுது வரும் தலைவர்கள் தோட்டப்புறங்களைப் பற்றியே பேசுகிறார்களே, ஏன்?

ப: தோட்டப்புறங்களில் தான் சமுதாயம் அடங்கி இருக்கிறது என்பதை இப்பொழுதுதான் புரிந்து கொண்டிருக்கிறார்கள் போலும்!

எம். சாமிக்கண்ணு, டென்னிஸ் டவுன் தோட்டம், பேரா

கே: மனிதன் ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே, அவன் ஆடி அடங்குவதெல்லாம் மண்ணுக்குள்ளே. அதற்குள் அவன் செய்யும் மிகப் பெரிய சாதனை என்ன?

ப: சோற்றுக்குக் கேடாக வாழ்வதும், தூங்கி முடிப்பதும், சந்ததியைப் பெருக்குவதுமே மனிதனின் சராசரி சாதனைகள்.

எல்விஸ் மணியம், லாபிஸ், ஜொகூர்

கே: நீங்கள் மலாய் மொழியில் கடிதம் எழுதும் முறையைப் புதிய சமுதாயத்தில் வெளியிட்டால் பல வாசகர்களுக்கு உதவியாக இருக்குமே?

ப: நமது மாணவர்களின் தேசிய மொழி அறிவை மேம்படுத்துவதற்கு வினாவிடை பகுதி ஒன்றை விரைவில் ஆரம்பிக்க இருக்கிறோம். தங்கள் ஆலோசனையையும் கவனத்தில் வைத்துக் கொள்கிறோம்.

எல். சாந்திகுமார், தொத்தம்பா தோட்டம், கெடா

கே: தங்கள் வாழ்க்கையில் திடீர் சம்பவம் நடந்தது உண்டா?.



ப: உண்டு! சென்ற மாதத்தில் நாங்கள் பிரயாணம் செய்த வாகனம் படாரென்று வெடித்து எங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அதற்கு ஓர் உதாரணம்.

எஸ். வள்ளி மணாளன், தோன் கிங் தோட்டம், மாசாய்

கே: ஆசிரியர் அவர்களே, உலுத்திராம் பகுதிக்கு வந்த நீங்கள் எங்கள் மாசாய் பட்டணத்திற்கு வராமல் போனது ஏன்?

ப: சந்திப்புக் கூட்டத்திற்கு நீங்கள் ஏற்பாடு செய்திருந்தால் மாசாய் பட்டணத்திற்கும் நிச்சயம் வந்திருப்பேன்.

எஸ். வாசுகி, மலாக்கா

கே: ஒரு சிலர் மாயம் மந்திரம் என்று சொல்லி மோசடி செய்கிறார்களே. அது உண்மையா அண்ணா?

ப: இத்தகைய மோசடிக்காரர்கள் ஒருசிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எம். ஜி. குணசேகரன், சிலம்போ டிவிசன், சுங்கைபபட்டாணி

கே: நம் சமுதாயத்தைத் திருத்தவேண்டிய ஒரு சில பெரியோர்களே வழி தவறிச் சென்று கொண்டிருக்கின்றனர். இவர்களைக் குறித்துத் தாங்கள் கூறும் கருத்தென்ன?



ப; பெரியவர்களைப் பற்றி மூச்சுவிடாமல் இருப்பதே புத்திசாலித்தனம். மறுபடியும் வம்புகளில் மாட்டிக்கொள்ள நான் தயாராக இல்லை.

எம். ராஜாமணி, பேரா

கே: அண்ணா, புதிய சமுதாயத்தில் ஏன் பேனா நண்பர் பகுதியில்லை?

ப: போதிய பக்கங்கள் இல்லாததே காரணம்.

கே: அண்ணா, புதிய சமுதாயத்தின் முதல் இதழ் இருக்கிறதா? அதை அனுப்பமுடியுமா?

ப: 60 காசு தபால்தலை அனுப்பினால் அனுப்பி வைக்கிறோம்.

ஏ. ஜோமாலை, சிமினி, சிலாங்கூர்

கே: இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழ்வோம் என்ற எண்ணம் இப்போதுள்ள பெண்களுக்கு உண்டா?

ப: இருப்பதை மிஞ்சிப் பகட்டுடன் வாழ்வோம் என்று சொல்லும் பெண்களே நம்மைச் சுற்றி நிறைந்திருக்கிறார்கள்.

பெ. செல்லதுரை, கோலாலம்பூர்

கே: தமிழ் அன்னையின் வயிற்றில் பிறந்துவிட்டு, நான் தமிழைப் படிப்பதனால் இந்த மலேசிய நாட்டில் என்ன சாதிக்க முடியும் என்று கேட்கும் சிலருக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன அண்ணா?

ப: மானம் மரியாதையோடு வாழ விரும்பும் எந்த மனிதனுக்கும் தாய்மொழி அறிவு இன்றியமையாதது என்பதை மட்டுமே நான் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பா. பாலன், சிம்பாங் அம்பாட், பு தெங்கா

கே: நம் நாட்டில் பிழைக்கமுடியாத சில இளைஞர்கள் சம்பாதிக்க அரபு நாடுகளுக்குச் செல்கிறார்களே, இவர்களைப் பற்றி...?

ப: தற்காலிகமாக இவ்வாறு செல்வது தவறில்லை. கணிசமான வருமானத்தை ஓரிரு வருடங்களில் ஈட்ட முடியுமானால் அரபு நாடுகளுக்குத் தக்க ஒப்பந்தப் பாதுகாப்புடன் சென்று வரலாம்.

பெ. முத்துசாமி, சுபாங், சிலாங்கூர்

கே: அண்ணா, காக்கை உணவு உண்ணும் போது, கா, கா என்று கத்தித் தன் கூட்டத்தை அழைக்கும். அது அழைக்கும் காரணம், கூடி உண்பதற்கா, தனது பயத்தை போக்கிக் கொள்வதற்கா?



ப: கூடி உண்பதற்கென்றே நாம் இதுவரை கருதி வருகிறோம். நீங்கள் சொல்கிற மற்றொரு காரணத்திற்கு ஆதாரமில்லை.

கே. சுப்பிரமணியம், பேரா

கே: இன்று உலகம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனை என்ன?

ப: விலையேற்றமும், நாணயங்களின் மதிப்புக் குறைவும்.

என். ரவி, தெலுக்கான்சன்

கே: போட்டிக் கூப்பனில் தயவு செய்து முகவரி எழுதுவதற்குக் கொஞ்சம் அதிக இடம் கொடுங்கள்.

ப: தங்கள் ஆலோசனையைக் கருத்தில் கொள்கிறோம்.

கு. சா. சுசீலா கண்ணன், மாடார் தோட்டம், பெர்லிஸ்

கே: கர்ப்பிணிப் பெண்கள் வேலை செய்வது நல்லதா, வீட்டிலேயே இருப்பது நல்லதா?

ப: கடினமான வேலைகளைச் செய்யாமல் சாதாரண வேலைகளைச் செய்வது அவசியம்!

குமாரி ராதா, ரவிசந்தர், சுங்கை திங்கி தோட்டம்

கே: அண்ணா, எட்டாத கனி எனத் தெரிந்தும் விடா முயற்சியுடனும் உறுதியோடும் இருந்தால் அந்தக் கனியை அடையமுடியும் என்பது என்னுடைய கருத்து. தாங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்?

ப: உங்கள் மனவுறுதியைப் பாராட்டுகிறேன். என்றாலும் எட்டாத கனிக்குக் கொட்டாவி விடுவது பைத்தியக்காரத்தனம்.

கே: அண்ணா, என்னை ஒருவர் விரும்புகிறார், ஆனால், நான் இப்போதைக்குத் திருமணம் செய்துகொள்ளப் போவதில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் எத்தனை வருடம்ஆனாலும் காத்திருக்கிறேன் என்று சொல்லுகிறார். அவரை நான் நம்பலாமா?

ப: ஆளைப் பார்க்காமல் யார் என்று தெரியாமல் அவருக்கு நான் எப்படி உத்தரவாதம் கொடுக்க முடியும்?

கே. நடராஜன் வாணி, அலகார் தோட்டம், பேரா

கே: வயது வந்த பெண்ணைப் பெற்றோர் நல்வழியில் பாதுகாக்க அனுபவப்பட்ட நீங்கள் சில ஆலோசனை கூறுவீர்களா?

ப: பெண்களை அதிகம் கட்டுப்படுத்தாமல் விட்டு விட்டால் அவர்கள் பொறுப்புணர்ந்து தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்வார்கள்.

குமாரி இ. சி. ராஜம், சுங்கை திங்கி தோட்டம்

கே: அண்ணா, கோவிலுக்குச் சென்றால் மனம் நிம்மதி அடையும் என்கிறார்களே உண்மையா?

ப: உண்மைதான்!

கே: அண்ணா,எங்கள் வீட்டில் எனக்குத் திருமணம் செய்ய ஏற்பாடு செய்கிறார்கள். ஆனால் எனக்குத் திருமணம் செய்துகொள்ள வெறுப்பாக இருக்கிறது. எனவே நான் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்க தாங்கள்தான் ஒரு நல்ல பதிலைத் தரவேண்டும்.

ப: என்னைச் சங்கடத்தில் சிக்கவைக்கப் பார்க்கிறீர்கள். திருமணத்தின் மீது உங்களுக்கு ஏன் வெறுப்பு ஏற்படுகிறது என்பதை என்னாலும் புரிந்துகொள்ள முடியவில்லை. மறுபடியும் சிந்தித்துப் பாருங்கள்.

மணவாளன், தெலுக்பாரு தோட்டம்

கே: சில மூடர்கள் கண்ட கண்ட பெண்களுக்கு மர்மக் கடிதம் எழுதுகிறார்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

ப: அவர்களை மகா மூடர்கள் என்று சொல்வதே பொருந்தும்

வே. கமலா, கம்போங் ஸ்டேசன், கோலக்கங்சார்

கே: தொழிலாளர் ஆள்பலத் துணையமைச்சர் மாண்புமிகு பத்மநாபன் அவர்களின் முகவரியை அறிய விரும்புகிறேன்.

ப: KEMENTERIAN BURUH DAN TENAGA RAKYAT, WISMA MPI, JALAN RAJA CHULAN, KUALA LUMPUR.

என். எஸ். அப்துல் ஜலீஸ், தஞ்சோங் மாலிம்

கே: காலரா ஒரு தொத்து வியாதியா? எதன் மூலம் அதிக விரைவில் பரவுகிறது?

ப: காலரா தொத்து வியாதிதான்.தண்ணீர் மூலமே பரவுகிறது.

ரெ. பூவேந்தன், பெட்டாலிங்

கே: "நூறாண்டு காலம் வாழ்வது எப்படி" "ஹார்ட் அட்டாக்" போன்ற நூல்கள் எழுதிய ஆசிரியர் தமிழ்வாணன் அவர்கள், அண்மையில் மாரடைப்பால் 51 வயதிலேயே காலமானதைப் பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

ப: மரணக்கெடுவை எவராலும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. நூறாண்டு வாழ்வதற்குக் கூறப்பட்டிருக்கும் ஆலோசனைகள் ஏராளம். அந்தப் புத்தகங்களை வாங்கிப் படியுங்கள்.

எம். தேவி, ஈவூட் தோட்டம், சுங்கை சிப்புட்

கே: இப்போதுள்ள பெண்கள், ஆண்கள் நல்லவர்களா கெட்டவர்களா என்று பார்க்காமல் அரசாங்க வேலை செய்தால் போதும் என்று திருமணம் செய்து கொள்கிறார்கள். இதற்கு என்ன காரணம்?

ப: மாப்பிள்ளை கிடைப்பது கடினமாக இருப்பதே காரணம்.

கே: என் தமக்கை நல்ல சத்துள்ள உணவைச் உட்கொண்டும்சத்தில்லாமல் ஒல்லியாக முகமெல்லாம்வெளுத்துக் காணப்படுகிறாள். இதற்குக் காரணமென்ன?



ப: நிபுணத்துவம் நிறைந்த ஒரு டாக்டரிடம் காட்டி ஆலோசனை பெறுங்கள்.

பி. சாரங்கபாணி கதிரவன், ஜோகூர் ரிவர் தோட்டம், ஜோகூர்

கே: கற்பனைக்கும் கனவிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: கற்பனை என்பது மனம் காணுகிற கனவு. கனவு என்பது நித்திரையில் உருவாகும் கற்பனை.

எம். முனுசாமி, குளுவாங்

கே: இந்த நாகரிகக் காலத்தில் திருமணம் செய்வதற்கு ஜாதி, மத, பேதம் அவசியமா?

ப: அவசியமில்லை.

எஸ். ர. மாடசாமி, பண்பூ தோட்டம், ஜோகூர்

கே: உலகில் மதிப்பு நிறைந்த தொழில் எது?

ப: என்னைக் கேட்டால் பத்திரிகை ஆசிரியர் தொழில்தான் மதிப்பு மிகுந்தது என்பேன்.

குமாரி எம். மகேஸ்வரி, ஸ்கூடாய்

கே: நாம் செய்த உதவியை மறந்து விட்டவர்களை என்னவென்று அழைப்பது?

ப: இப்படி நன்றி மறப்பது இப்பொழுது சர்வ சாதாரணமாகிவிட்டது. ஆகவே பிறருக்குச் செய்த உதவிகளை நாம் மறந்துவிடுவதே நல்லது.

பெ. முத்துசாமி, சுபாங், சிலாங்கூர்

கே: புதிய சமுதாயத்தில் கதை எழுதுபவர்களுக்குச் சன்மானம் கொடுக்கிறீர்களா?

ப: புதிய சமுதாயத்தில் இடம் பெறுகிற எழுத்தோவியங்களுக்குச் சன்மானம் உண்டு.

ஏ. முத்து, பெர்ணம் தோட்டம், பேராக்

கே: சார்! எரியும் மெழுகுவர்த்தியை அணைத்துவிட்டு கேக்கை வெட்டிப் பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்களே, சரியா?



ப: பிறந்தநாளின் போது தீபங்களை ஏற்றி வைக்க வேண்டுமே ஒழிய அணைக்கக்கூடாது. மெழுகு வர்த்தியை அணைக்கும் முறை மேலைநாட்டுப் பழக்கமாகும். அதனை நாம் பின்பற்றத் தேவையில்லை. ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்ற குழந்தை ஐந்து மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்துக் கொண்டாடலாம்.

ஆர். இராமச்சந்திரன், சபாய் தோட்டம், பகாங்

கே: வளைந்து கொடுக்கும் தன்மை வேண்டுமா, நிமிர்ந்து நிற்கும் தன்மை வேண்டுமா?

ப: வளைந்து கொடுக்க வேண்டிய தருணத்தில் வளைந்து கொடுத்து, நிமிர்ந்து நிற்க வேண்டிய சமயத்தில் நிமிர்ந்து நிற்பதுதான் வாழும் வகையாகும்.

கே: மது அருந்தினால்தான் கவிஞர்களுக்குக் கற்பனை வரும் என்பது உண்மையா?

ப: இது பித்தலாட்டம்.

ஆர். கருணாகரன், பூலோ ஆக்கர் தோட்டம், பாரிட்

கே: நமது மலேசிய நாட்டின் மிகப் பெரிய சக்திகளான கே. தோ. தொ. சங்கம், தே. நி. நி. கூ. சங்கம், ம. இ. கா ஆகிய இம்மூன்றும் தங்களுக்குள்ள கருத்து வேறுபாடுகளை மறந்து ஒருங்கே இணைந்து செயல்பட்டு, மலேசிய இந்தியர்களின் குறைகளைத் தீர்க்க முற்பட்டால், பத்தே வருடங்களில் பொருளாதாரத் துறையிலும், மற்றத் துறையிலும் இந்தியர்களை யாருமே மிஞ்ச முடியாது என்பது என் கருத்து. இதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?



ப: தங்களின் பொன்னான கருத்தை நானும் பெரிதும் வரவேற்கிறேன். நமது அமைப்புக்கள், நமது தலைவர்கள் ஆகியோரிடையே எந்தப் பிளவும் இனிமேல் தலைதூக்கக்கூடாது என்பதையும், அனைவரும் சமுதாய முன்னேற்றம் என்னும் ஒரே குறிக்கோளோடு தத்தம் சக்திக்கு ஏற்றவாறு பணிபுரிய வேண்டும் என்பதையும் வலியுறுத்த வேண்டிய தருணம் இது. தாங்கள் குறிப்பிட்டிருக்கும் மூன்று அமைப்புக்களின் தலைவர்களும் இந்தப் பொறுப்பை உணர்ந்து தற்சமயம் தத்தம் பாதையில் எவ்விதமான மோதலுக்கும் இடமின்றிச் செல்வதாகவே நான் கருதுகிறேன். இத்தகைய பொது நோக்கும், சகோதரத்துவமும் நீடிப்பது சமுதாயத்திற்குப் பெருநன்மை பயக்கும்.

ஆர். எஸ். கிருஷ்ணன், பெட்டாலிங், கோலாலம்பூர்

கே: மனிதனுக்கு எதனால் கவலைகள் வருகின்றன?

ப: பொறுப்பை உணர்வதாலும் அதனை நிறைவேற்றக் கருதுவதாலும்.

எஸ். டி. சிகாமணி, தைப்பிங்

கே: விலைவாசிகள் விஷம் போல் ஏற யார் காரணம்?



ப: பணப் புழக்க அதிகரிப்பும் ஒரு சில வியாபாரிகளின் கொள்ளை இலாப ஆசையுமே முக்கியமான காரணங்கள்.



மகிழ்ந்தார் பொங்கலை! மறந்தார் எங்களை!

மதுரம்

தைமுதல் நாளில்
தழல்அலை மேலில்
சங்கர நடம்புரி பொங்கலை

நெய்மணம் என்பார்
நேர்த்தியில் உண்பார்
நினைத்ததும் உண்டோ எங்களை

ஆளொடு பாதி
அவலமும் பாதி
அழற்படு புழுவே வாழ்வியல்

நாளொரு மேனி
நடித்திடும் ஞானி
நல்குவ தெமக்கோ தாழ்வியல்

உலகினில் எல்லாம்
உவந்திடும் வல்லான்
உண்மையில் எம்மிடம் ஊமையோ?

அழகெனும் பூங்கா
அணியினில் நாங்கள்
அவலட் சணமோ, ஆமையோ?

உழைப்பவர் அருமை
உரைப்பதில் பெருமை
உதவிட வந்தவர் யாரடா?

அழைப்பவர் இல்லில்
அலைபவர் செல்வர்
அருளெமக் கருளிய தாரடா?

சகதியில் இறங்கி
சத்துடல் கிறங்கி
சமமன மாட்டுடன் உழைத்தோம்

அகதிகள் நடுவே
ஆணைகள் இடுவார்
அவரிடம் பயன்தனை நுழைத்தோம்

ஏழைகள் கையில்
இருப்பதைப் பொய்யில்
இழுத்துக் கரைக்கலோர் கூட்டமா?

வாழைகள் போட்டு
வடிநீர் ஊற்றி
மக்களை ஏய்ப்பதில் நாட்டமா?

பொங்குது பொங்குது
பொங்குது பொங்கல்
பூரிப் பினிலே இல்லையடா!

மங்குது ஏழைகள்
மாண்புள நாளைய
மலர்ச்சியின் ஏக்கத்தின் எல்லையடா!

நன்றித் திருநாள்



பாதாசன்

"தாந்தமித்தோம் திந்தமித்தோம் தைதை" என்றே
சதிராடித் தைப்பெண்ணாள் வந்த நாளில்
ஏந்திளநீர் தனத்தாளைப் பொங்க விட்டே
எதிர்கொண்டு வரவேற்று வாழ்த்தும் நாளில்
பூந்தேனைச் சுவைத்தறியா வண்டாம் ஆணும்
பூச்சிவிழா மாங்கனியைப் போன்ற பெண்ணும்
மாந்துகின்ற முதலின்பத் திற்கும் மேலாம்
மண்மகளும் உழவாரும் அடையும் இன்பம்!

நெல்விளைக்கும் மண்ணுக்கு நன்றி யாக
நேர்த்திமிகு பானைவனைந் திட்டோம்; பொன்னார்
நெல்கொடுக்கும் அரிசிக்கு நன்றி யாக
நிகரற்ற சுவைகூட்டிப் பொங்கல் வைத்தோம்
நெல்விளைய உதவுகின்ற கதிரோ னுக்கும்
நெஞ்சார்ந்த நன்றி சொன்னோம் பொங்கல் நாளில்
நெல்வயலில் கழுத்தொடிய உழவ ரோடு
நெடிதுழைக்கும் காளைகட்கும் நன்றி சொன்னோம்!

பொங்கலுக்குத் தானமெனத் "தை"மா தத்தைப்
புத்தாண்டின் முதல்மாத மாகத் தந்தோம்
பொங்கலையே தைப்பொங்கல் என்ற ழைத்தோம்
புத்தாடை உடுத்திவர வேற்று நின்றோம்
மங்கலநாள் எனுஞ்சிறப்பைத் தரவே "தை"யை
மணமாத மாய்க்கண்டோம்! "தைதை" என்றே
பொங்கிவரும் மகிழ்ச்சியினால் ஆடும் நெஞ்சைப்
புலப்படுத்த "தை"என்று பெயரை வைத்தோம்!

உண்டிகொடுத் தோர்உயிரைக் கொடுத்தோர் இல்லை
உணர்ந்ததனால் உழவருக்கு நன்றி சொல்லக்
கண்டதொரு திருநாள்தான் பொங்கல் திருநாள்;
காசினியோர் அனைவருக்கும் ஏற்ற தோர்நாள்
பண்டிருந்தே தங்களுக்குச் சோறு போடும்
மண்ணுக்கும் மனிதர்க்கும் நன்றி கூறும்
தண்டமிழர் பண்புக்குச் சான்றாய் வாழும்
தமிழ்த்திருநாள் பொங்கலெனும் தைமு தல்நாள்!



தென்னாப்பிரிக்காவில் பிறந்தவர்

சா. ஆ. அன்பானந்தன்

சி. கோன்—

மலேசியத் தமிழ் எழுத்துலகிலும், கலையுலகிலும் பிரசித்தி பெற்ற பெயர். "சிருஷ்டி" (சிறுகதை) "செவ்வானம்" (நாவல்) "கமலி வீட்டு அமளி", "எல்லாம் தெரிந்த நல்லய்யன்", "பெரிய வீட்டுப் புரளி" (சிரிப்புத் தொடர் சித்திரங்கள்) முதலிய இன்னும் பல படைப்புக்களின் வழி இலக்கிய உலகிலும் கலை உலகிலும் நிலைபெற்றுவிட்ட ஒரு தலைசிறந்த எழுத்தாளர்.

சி. கோன்—

மலேசிய வானொலி, கோலாலம்பூர் ரெடிப்யூசன் வழி நாட்டில் பெரும் செல்வாக்குப் பெற்ற மிகச் சிறந்த நாயக நடிகர், சிரிப்பு நடிகர், உணர்ச்சி நடிகர்.

சி. கோன்—

புகழ்பெற்ற ஓவியர், சிறந்த பாடகர், தேர்ந்த புல்லாங்குழல் இசைஞர், நாடக ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர், பள்ளி ஆசிரியர்- இப்படிப் பலதரப்பட்ட திறமைகளுக்கும் உரியவர். "கமலி வீட்டு அமளி" சிரிப்புச் சித்திரம் நான்கு ஆண்டுகள். கோலாலம்பூர் ரெடிப்யூசன் நிலையத்தில் ஒலியேறியது. "எல்லாம் தெரிந்த நல்லய்யன்" மூன்றாண்டுகள் மலேசிய வானொலியில் ஒலியேறியது. "பெரிய வீட்டுப் புரளி" இரண்டு ஆண்டுகளுக்கு மேல் மலேசிய வானொலியில் ஒலியேறியது. இப்படி நீண்ட காலமாக ஒலியேறிய சிறப்பு இவரின் படைப்புக்களுக்கே அதிகம் வாய்த்தது.

40க்கு மேற்பட்ட சிறுகதைகளும், மூன்று நாவல்களும், 300க்கு மேற்பட்ட வானொலி நாடகங்களும், 500க்கு மேற்பட்ட கலப்படச் சிரிப்பு நடைச் சித்திரங்களும், பத்துக்கு மேற்பட்ட வானொலித் தொடர் நாடகங்களும், நூற்றுக்கு மேற்பட்ட சிறப்பு நாள் சிரிப்புச் சித்திரங்களும் படைத்த புகழுக்குரியவர். "வசந்த மோகன்" "வள்ளி" "எழுதாத நாடகம்" முதலிய மேடை நாடகங்களையும் எழுதிய இவர் பல கவிதை, இசைப் பாடல், கட்டுரைகளையும் படைத்துள்ளவர். ஆனால் அரிய இப்படைப்புக்களுள் எஞ்சியவை ஒன்றிரண்டைத் தவிர மற்றவை யாவும் பாதுகாக்கபடாமல் விடப்பட்டதானது தமிழ் இலக்கிய உலகத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.



தம் குடும்பத்தினருடன் சி. கோன்

சி. கோன்—

இலக்கிய உலகில் 1940ஆம் ஆண்டுவாக்கில் அடியெடுத்து வைத்தார். சி. கோன், ராஜ் எனும் பெயர்களில் அவர் எழுதி வந்தார். ஜனோபகாரி, சங்கமணி, தமிழ் நேசன், தமிழ் முரசு, நவரசம் இன்னும் வெளி வந்த அனைத்துப் பத்திரிகைகளிலும் அவரின் படைப்புக்கள் வெளிவந்துள்ளன. அமரர் கு. அழகிரிசாமியின் நெருங்கிய நண்பரான சி. கோன், வானொலி படைப்புக்களைப் பொறுத்த வரையில் காலையில் கேட்டு மாலையில் நாடகம் எழுதிக் கொடுத்துவிடுவார். எந்தத் திருத்தத்திற்கும் பன்றத்திற்கும் உட்படாமல் நேரடியாகவே தயாரிப்புக்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புக்களையே அவர் எழுதிக் கொடுப்பார். இத்திறமை அவருக்கே உரிய தனித் திறமையாகும்.



நடிகராக சி.கோன், சா.ஆ.அன்பானந்தனுடன்

சி. கோன்—

ஓவியக் கலைஞர். பத்திரிகைகளில் கதைக்கான ஓவியங்களையும், கேலிச் சித்திரங்களையும், தகவல் இலாகாவுக்கான பிரச்சார எழுத்து, ஓவியங்களையும் எழுதியுள்ளவர். தகவல் இலாகாவில் எழுத்தராகவும் ஓவியராகவும் பணியாற்றி வந்தவர். இவை தவிர நாடகத்திற்கான செட்டிங்குகள், திரைச் சீலைகள் கூட வரைந்துள்ளார்.

சி. கோன்—

தென்னாப்பிரிக்காவில் ஜமேய்க்கா என்னும் இடத்தில் 14-7-1924-ஆம் ஆண்டு துரைசாமி-இலட்சுமி அம்மை தம்பதிகளின் இரண்டு பிள்ளைகளில் இரண்டாவதாகப் பிறந்தவர். இவரின் அண்ணன் ஏற்கனவே இறந்துவிட்டார். இவரின் முழுப்பெயர் சிங்கோவன். சிங்கோவன் என்னும் இவரின் பெயரை சி. கோன் என்று சுருக்கி அழைத்தவர் அறிஞர் சுப. நாராயணன் ஆவார்.

தென்னாப்பிரிக்காவிலிருந்து சி. கோன் நான்கு வயதாக இருக்கையில் மலாயாவுக்குக் கொண்டுவரப்பட்டார். கோலாலம்பூர் லொக்யூ (இப்போது சன்பெங் சாலை) சாலை தமிழ்ப் பள்ளியில் ஏழாம் வகுப்புவரை பிரிக்பீல்ட்ஸ் இஷன்டைல் பள்ளியில் ஆங்கிலம் தமிழ் ஏழாம் வகுப்புவரை படித்துத் தேர்ந்தார். திரு. துரைசாமி வாத்தியார் என்பவரிடம் இந்தியையும் ஏழாம் வகுப்பு வரை படித்துத் தேர்ந்தார். பின்னர் 1941இல் இஷன்டைல் பள்ளியிலேயே தமிழாசிரியராக வேலைக்கமர்ந்தார். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு மலாயா தகவல் இலாகாவில் எழுத்தராக (ரைட்டர்) வேலைக்கமர்ந்தார்.

1949இல் கமலாவதியைத் திருமணம் செய்து கொண்டு நான்கு பெண் பிள்ளைகளின் தந்தையானார். இரண்டு பெண்களுக்குத் திருமணம் நடந்துவிட்டது. இரண்டு பெண்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் லண்டன்வரை சென்று தாதிப் பயிற்சி பெற்று வந்துள்ளார்.

"உள்ளதைச் சொல்வோம்" புகழ் திரு. வி டி. பிச்சைப் பிள்ளையையும் பின்னர் அமரர் சி. வீ. குப்புசாமியையும் ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த மலாயா தகவல்துறை ஏடான ஜனோபகாரியில் பல ஆண்டுகள் துணை ஆசிரியராகவும் பணியாற்றி வந்தார்.

சி. கோன்—

1935ஆம் ஆண்டு வாக்கிலேயே கலை உலகில் ஈடுபட்டு விட்டார். திரு. சிவம் இயக்கிப் படைத்த புரட்சிக் கவிஞரின் "எதிர்பாராத முத்தம்" கவிதை நாடகத்தில் நடித்துள்ள அவர், தான் எழுதிய "வசந்த போகன்" முதலிய நாடகங்களிலும் நடித்தார். கலைப் பண்ணையின் "டாக்டர் அல்லி" ஈஸ்டர்ன் ஆர்ட்ஸ் சொசைட்டியின் "கவியின் கனவு" "எது வாழ்வு" மற்றும் சாரி என்பவரின் "கலாராணி" மலாயன் தமிழர் சங்கத்தின் "மாயா" முதலிய நாடகங்களிலும் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்தார். தகவல் இலாகா பிரச்சார நாடகங்களிலும் மற்றும் வானொலி, ரெடிப்யூசன், மலேசியத் தொலைக் காட்சி நாடகங்களிலும் அவர் நடித்தார். அவர் தன்னளவில் மட்டும் உயர்ந்துவிடவில்லை. தன் அன்பர்களையும் நண்பர்களையும்கூட உயர்த்தி உள்ளார்.

இன்று நாடறிந்த நல்ல கலைஞர்களாக விளங்கும் திருவாளர்கள்: சோ. பரஞ்சோதி, எம். செந்திலாதிபன், கே. கணேசன், வ. உ. சி. கணபதி, சிவாஜி ராஜா முதலியோரையும் அவர்களோடு சிறியேன் என்னையும் மலேசிய வானொலியில் அறிமுகப்படுத்தி வைத்த நன்றிக்குரியவர். அவர் அவ்வாறு இன்னும் பல ஆண்-பெண் கலைஞர்களையும் வானொலியிலும் மேடைகளிலும் அறிமுகப்படுத்தியுள்ளார்.

சி. கோன்— அவர்களின் கலைத்திறம் மதிக்கப்படும் வகையில் 15.10.1975-ஆம் நாள் நெகாரா அரங்கில் கோலாலம்பூர் சாந்தி புரொடக்சன்சார் நிகழ்த்திய தமிழகக் கலைக்கூத்து நிகழ்ச்சியில் புரவியாட்டச் சக்கரவர்த்தி திரு. டி. சி. சுந்தரமூர்த்தி அவர்களால் "நடிக வேந்தன்" என்கிற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

தொடர்ந்து 1976ஆம் ஆண்டு மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் தனது ஆண்டு விழாவில் இலக்கியத் துறைக்கு ஆற்றிய சேவைக்காக பாராட்டுக் கேடயமும் பொன்னாடையும் வழங்கிச் சிறப்பித்தது. அதே ஆண்டில் கிள்ளானில் நிகழ்ந்த கலைஞர் மாநாட்டில் "கலைக்கோ" விருதும் பாராட்டிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஏறத்தாழ 30 ஆண்டுகளாக திறமையாக எழுதி, இணையற்று நடித்து, எடுப்பாகப் பாடி, இனிமையாகப் புல்லாங்குழல் இசைத்துக் கலை இலக்கியப் பணிபுரிந்து வந்த திரு. கோன், கடந்த மூன்றாண்டுகளாக இனிப்புநீர், இரத்த அழுத்தம், பக்கவாதம் நோய்களின் கூட்டுத் தாக்குதலினால் பாதிப்படைந்தார். அதன் காரணமாக கடந்த 26-12-1977-ஆம் நாள் காலை 10 மணிக்குக் கோலாலம்பூர் பொது மருத்துவமனையில் 53-ஆவது வயதில் "கலைக்கோ" சி. கோனின் ஆத்மா சாந்தியடைந்தது.



அடுப்படியை விட்டு

வெளியே வாருங்கள்

குமாரி செல்வமணி கிருஷ்ணன்,
கப்பயாங் தோட்டம்,
சிரம்பான்

அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு இவையனைத்தும் சேர்ந்து பெண்களுக்குப் பெருமையைத் தேடித்தருகின்றன. இவ்வித நான்கு குணநலன்களில் இருந்து ஒன்றில் ஒரு பெண்ணுக்குக் களங்கம் ஏற்பட்டால் அவள் பெண் குலத்தினின்றும் ஒதுக்கப்படுகிருள். நமக்கு இறைவன் இயற்கையிலேயே படைத்திருக்கும் இக்குண நலன்களில் நாமும் ஒருவர் எனும்போது உண்மையில் பெருமை அடைகின்ேரம். இருப்பினும் படிக்கும் ஒரு பெண்ணையோ, வெளியிடங்களில் வேலை செய்யும் பெண்களையோ அல்லது ஆண்களுடன் உரையாடும் பெண்களையோ கண்டால் நம் சமூகத்தினருக்கு அவல் கிடைத்தது போலாகிவிடுகின்றது. பல வித அம்பெனும் சுடு சொல்லால் மனதைக் குத்தி அவர்களது ஆர்வத்திற்குத் தடை விதிக்கின்றனர்.

இயற்கையிலேயே நம் சகோதரிகளிடையே அமைந்துள்ள அச்சம், நாணம் போன்ற குணங்களுக்கு அப்பாற்பட்டுச் சிலர் பேய்களாகத் திரிய சுற்றுப்புறச் சூழ்நிலைகளே காரணம் என்ருல் அது மிகையாகாது.

அடுப்பங்கரையில் முடங்கி இருந்த நம் பெண்களே இப்போது அரசியல் விவகாரங்களிலும் ஈடுபட்டு நாட்டுக்கும் வீட்டுக்கும் சேவையாற்றுவது பெருமை தரும் விஷயமே ஆகும். ஆனல் அவர்களை நான்கு வித குண நலன்களுக்கும் அப்பாற்பட்டு ஒதுக்கிவிடுகிறர்கள் ஏன்? இதற்கு முக்கியக் காரணம் நம் சமூகத்தினரிடையே மலிந்துள்ள மூடநம்பிக்கையே என்பது வெள்ளிடைமலை.

இந்நவீன காலத்தில் தன் கையே தனக்குதவி எனும் கோட்பாடோடு வாழ்ந்தால் தான் நாளையநமதுலகம் இனிமை நிறைந்ததாக விளங்கும். இதை மறந்த நமது பெரியோர்கள் சிலர், தங்களது வாழ்வையே பெரிதாக நினைத்துப் பெண்களைப் பெட்டிக்குள் அடங்கியிருக்கும் பாம்பாக மாற்றிவிடுகின்றனர். அதுபோல் ஆராய்ந்தறியத் தெரியாத நமது சமூகத்தில் பல நம் இகழ்ந்து பேசி நமது சமூகத்தின் இழிவுக்கு ஒரு வழி வகுக்கின்றனர். இதனுல் நான்குவித குண நலன்களைத் தனக்குள் அடக்கியாளும் இக்கால மகளிரது வளர்ச்சிக்குத் தடை உண்டாகிறது. எனவேதான் நம்

பெண்களை அவர்தம் பெற்ருேர்கள் வெளிக் காரியங்களில் ஈடுபடுத்த பயப்படுகின்றனர். பிறர் இகழ்ந்து பேசுவதால் அவளது வாழ்வு பிற்காலத்தில் பாழ்பட்டுவிடுமே என்கிற பயமாக இருக்கலாம். இப்படிப் பயந்து அவர்களை முடங்கவிடுவதால் அவர்களது வாழ்வு கிணற்றுத் தவளையாய் பிறந்த பயன் அறியாமல் ஓய்ந்துவிடுகிறது.

இவற்றையெல்லாம் ஆராயும்போது புரிந்துணர்வு எனும் ஓர் உணர்வு நம் சமூகத்தினரிடையே மிகமிகக் குறைவாகக் காணப்படுவது தெளிவாகிறது. பல பெரியார்கள் "பெண்களே, அடுப்பை விட்டு வெளிவாருங்கள்" என்று அறைகூவல் விட்டு விட்டுத் தன் வீட்டில் அவர்களைப் பூட்டி வைக்கின்றனர். இதையெல்லாம் காணும்போது சிரிப்பதா அழுவதா என்பதே தெரியவில்லை.

இனிமேலாவது வளரும், வளரத் துடிக்கும் நம் சகோதரிகளுக்கு ஒரு சிறு பகுதியை-அதாவது நம்மின ஆண்களுக்குக் கொடுக்கும் உரிமையில் ஒரு பகுதியை- தந்துதவுங்கள். அவர்களும் பிற இனச் சகோதரிகளுடன் போட்டி போட்டு முன்னேற இது ஓர் வாய்ப்பாக அமையுமல்லவா?

ரவா கேக்

ஆர். வாணி,
புக்கிட் சிடிம் தோட்டம்,
கெடா

தேவையான பொருட்கள்:

2 கட்டி ரவா யாவு, 4 முட்டைகள், திராட்சைப்பழம் 20 காசு, சிறிய நெய் டின் 1, தேங்காய் மூடி 1, 2 கப் சீனி, சிறிதளவு உப்பு.

செய்யும் முறை:

முதலில் ரவாமாவைப் பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும். பிறகு தேங்காய்ப் பாலில் முட்டையையும் சீனியையும் கொட்டி நன்ருகக் கலக்கிக்கொள்ளவும். கலக்கிய பாலில் ரவாமாவைக் கொட்டிக் கெட்டியாகப் பிசைந்துகொள்ளவும். பிசைந்த மாவுடன் திராட்சைப் பழத்தையும் சேர்த்துக்கொள்ளவும். பிறகு ஒரு வட்டமான தட்டில் நெய் சிறிது விட்டுத் தடவிய பின் கெட்டியாகப் பிசைந்த மாவைக் கொட்டி 15 நிமிடம் வரை அவனில் வேக வைத்து எடுக்கவேண்டும்.

அழகுக் குறிப்பு

கூந்தல் நன்ருக வளர வேண்டுமா? தேங்காய்ப் பாலைத் தலைக்குத் தேய்த்துக் கொண்டு கூந்தலை ஒரு மணி நேரம் ஊறவிட வேண்டும். பிறகு சோற்றுக் கஞ்சியில் கலந்த சீயக்காயைத் தேய்த்து தினமும் நீராட வேண்டும். இப்படிச் செய்து வந்தால் கூந்தல் நன்ருக நீண்டு கறுகறுவென்று வளரும்.

அ. ராஜேஸ்வரி,
சுங்கை ரம்பை தோட்டம்,
பத்தாங் பெர்ஜுந்தை.

அப்பக்கம்

வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் குறித்து மிகவும் சுருக்கமாக வெளியிடுவதைக் காட்டிலும் இதற்கென்று ஒரு முழுப்பக்கம் ஒதுக்குவதால் பலதரப்பட் நிகழச்சிகளைத் தெரிந்து கொள்வதோடு அவற்றைக் கேட்கவோ பார்க்கவோ ஏதுவாக இருக்குமல்லவா?

சுங்கைவே — தாரா எழிலழகன்

கண்டேன் களி கொண்டேன்

"புதிய சமுதாயம்" கண்டேன் – புதுமலர்க் காட்டில் செல்லும் களிப்புக் கொண்டேன். முகப்பில் அழகு- உள்ளே தித்திக்கும் தமிழ் எழில்- தமிழ் உலகு காண வேண்டிய புதிய சமுதாயம்.

தமிழகத்தில் தமிழ் ஏடுகள் தோன்றி வாழுமோ-வளருமோ-நிலைக்குமோ என்று தவித்த ஆரம்ப நாட்களில் "பொன்னி" இதழைத் தமிழ் வளர்க்கும் ஏடாக வளர்த்துக்காட்டி வெற்றி கண்டவர் ஆசிரியர் முருகு அவர்கள்.

தமிழகத்தின் தலைவர்கள், எழுத்தாளர் களிடையே மலேசியா என்றதும் திரு. முருகு அவர்களைப் பற்றிய எண்ணம் மனத்தில் ஓடும்.

அவரது முயற்சியில் மலேசியத் தமிழ் எழுத் தாளர்கள் - மலேசிய தமிழ் இதயங்களுக்குப் புதிய சமுதாயம் படைத்திட வாழ்த்துகிறேன்.

தமிழகம் — இரா. ஜனார்த்தனம்

பதியும் கதைகள்

"ஆவன்னா"வின் சுட்டிக் கதைகள் ஒவ்வொரு தமிழனும் படிக்க வேண்டியவை. இதுபோல் மேலும் தொடர்ந்து படைக்கவேண்டும். அவசியமான கருத்துக்களைச் சுவாரசியமுடன் கூறும் போது மனதில் அப்படியே பதிந்துவிடுகின்றன.

தலைநகர் — இரா. இராமராவ்

எழுச்சி இதழ்

தூங்கிக் கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்பி எழுச்சி பெறச் செய்து நம் சமுதாயத்தில் மறு மலர்ச்சியை உண்டாக்கக் கூடிய புத்தகம் இது. பொது அறிவு வளர்ச்சிக்குப் போட்டிகளை நடத்தி நல்ல கருத்தாழமும், உயிரோட்டமும் கொண்ட சிறுகதைகளைப் பிரசுரித்து மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கு இலக்கிய அரங்கத்தை ஏற்படுத்தி, பொதுமக்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாக இருந்து வரும் இந்தப் புத்தகம் இப்புவி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இன்று போல் என்றும் சுவை குன்றாமல் தொடர்ந்து வெளிவரவேண்டும். இந்நாட்டில் இப்படியொரு தரமான புத்தகத்தை வெளியிடும் ஆசிரியருக்கு எனது பாராட்டுக்கள்.

சுவ : பெத்தோங் தோட்டம், போர்ட்டிக்சன், — எம். பி. பாலன்

நமக்குள் நாமே...!

இதழ் 18இல் "நையாண்டி மேளம்" பகுதியில் ஆவன்னா சற்று அதிகமாகவே அவர் முகத்தில் கரியைப் பூசிக்கொண்டார். நம்மைப் பற்றி நாமே மேலும் மேலும் இழித்தும் பழித்தும் பேசிக்கொண்டிருந்தால் அதனால் விளையப்போகும் நன்மை தான் என்ன?

தஞ்சோங்மாலிம் — தஞ்சைக்கிழார்

இன்னும் சிறப்பிக்க

தோட்டப்புறங்களில் பெரும்பாலும் உலவி வரும் புதிய சமுதாயம், இன்னும் தோட்டப் புற மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும், தமிழ்ப்பள்ளி மாணவர்களின் கல்வி உயர்வுக்கும் வழிகாட்டக்கூடிய கருத்தோவியங்களைத் தாங்கி வந்தால் இன்னும் மிகச் சிறப்பாக இருக்கும்.

சாகில், ஜோகூர் — இரா. பொன்னரசு

இயேசுவின் கையிருப்பு

ஏசுநாதர் தம் பாதையில் நடந்துசென்று கொண்டிருந்தார். அவரின் பெயரைக்கேட்டாலே வெறுக்கும் ஒரு கூட்டத்தினர், அவரைப் பார்த்து வசைமொழிகளைப் பாடியவண்ணம் இருந்தனர்.

ஏசுவோ அதைப் பொருட்படுத்தாமல், அவர்களை மன்னிக்குமாறு பிரார்த்தித்த வண்ணம் நடந்து கொண்டிருந்தார்.

இதைக்கண்ட ஒருவர் கேட்டார்:-

"மூடர்களுக்காகப் போய்ப் பிரார்த்திக்கின்றீர்களே! அவர்கள் மேல் கொஞ்சம் கூட எதிர்ப் புணர்ச்சி வரவில்லையா?"

அதற்கு ஏசு அமைதியாகப் பதிலிறுத்தார்:-

"என் பையில் என்ன வைத்திருக்கிறேனோ, அதைத்தான் என்னால் செலவு செய்ய இயலும்!"

—க. குணசேகரன்
கெப்போங்.